பொழிவு - 16
குவிப்பு - 12
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
டிசம்பர் 2013
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

# கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு



இன்றைய தமிழ் மண்ணில் கிறிஸ்துவின் பிறப்பு




## மனித உரிமைகளைப் பேணுவோம் அவர்தம் மாண்பினைக் காப்போம்

### மன்னார் ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி



மனிதரைக் கடவுள் தம் உருவில் படைத்து (தொ.நூ 1:27) மாட்சியையும் மேன்மையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினார் (தியா 8:5). பாவத்தால் மாண்பிழந்த மனிதரை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார் (கலா 4:5). எனவே யேசுவின் மானிட ஏற்பு மனித மாண்பை மீண்டும் மகிமையுறச்செய்து, மனித அன்பிற்கும் மாண்பிற்கும் நாம் எடுக்கும் விழாவாக கிறிஸ்து பிறப்புவிழா அமைகின்றது.

எனவே, மனித நேயத்தை அணிகலனாகக் கொள்வோம். "மனித உரிமைகளைப் பேணுவோம். அவர்தம் மாண்பினைக் காப்போம்", உங்கள் அனைவரினதும் வாழ்விலும் இப்பெருவிழாவின் செய்தி வேரூன்றிப் பயன்தர வாழத்துகிறேன், வேண்டுகிறேன் என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தனது கிறிஸ்மஸ் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். ஆயருடைய செய்தியின் முழுவடிவத்தை பக்கம் 13இல் பார்க்கலாம்.


## "நமக்காக ஓர் குழந்தை பிறந்துள்ளது!"
### கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

மன்னா வாசக அன்பர்கள், விநியோகஸ்தர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் எமது அன்பும், அருளும் அமைதியும் நிறைந்த கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களை அன்போடும் மகிழ்வோடும் தெரிவிக்கின்றோம்

அன்புடன்,
மன்னா பதிப்பாசிரியர்,
அலுவலகப் பணியாளர்கள்




## மானிட நேயத்தின் அடையாளம் மறைந்தது!
## நெல்சன் மண்டேலா விடைபெற்றார்!
### திருத்தந்தை, ஐ.நா செயலர் உட்பட உலகத் தலைவர்கள் இரங்கல்



தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சியை ஒழித்து கறுப்பின மக்களுக்கு அதிகாரம் பெற்றுத்தந்த நெல்சன் மண்டேலா தனது 95வது வயதில் காலமானார். நிறவெறி அடக்குமுறைகளுக்குள் சொல்லொண்ணாக் கொடுமைகளையும், சித்திரவதைகளையும் அனுபவித்த தென்னாபிரிக்க மக்களுக்கு மீட்பராகவும், உலக மக்களுக்கு மனித நேயத்தின் அடையாளமாகவும் அவர் திகழ்ந்தார். தனது கொள்கைகளுக்காக எந்த விட்டுக்கொடுப்புக்களையும் மேற்கொள்ளாமல் 27 வருடங்கள் அவர் சிறையில் இருந்தார்.

1993இல் நோபல் சமாதானப் பரிசைப் பெற்றுக்கொண்ட மண்டேலாவின் வாழ்க்கையானது தென்னாபிரிக்காவினதும், ஆபிரிக்கக் கண்டத்தினதும் இன்னும் பல்வேறு மக்கள் குழுக்களினதும் இன சமத்துவம், சுய நிர்ணயத்துக்கான போராட்டத்தின் அடையாளமாக விளங்குகிறது.

## திருத்தந்தை பிரான்சிஸ் : 2013ம் 'ஆண்டின் மனிதர்'




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, 2013ம் "ஆண்டின் மனிதர்" (Person of the Year) என அறிவித்துள்ளது உலகப் பிரசித்திபெற்ற சஞ்சிகையான ரைம் (Time) இதழ்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## மன்னா விநியோகஸ்தர்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

மன்னா பத்திரிகை விநியோகப் பணியில் ஈடுபட்டு எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் விநியோகஸ்தர்களுக்கான வருட இறுதி மற்றும் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது. விரிவான தகவல்களை 9ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

## 'கலையருவி'யின் 'கவின் கலைகள் பாலகம்'
## நடன, சங்கீத, இசை வகுப்புக்கள்

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் ஏற்பாட்டில் நடன, சங்கீத, இசைக்கருவிகள் போன்றவற்றிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. விபரங்களை 13ஆம் பக்கத்தில் பார்க்கவும்.



மடு தியான இல்லத்தின் முன்றலில் புதிதாக நிறுவப்பட்டுள்ள புனித மரிய வியான்னியின் திருச்சுருபத்தின் தோற்றம் இது.



## இறை அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க!

குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை பற்றிய சிறப்புக் கட்டுரை பக்கம் 7இல் இடம்பெற்றுள்ளது.

இறைவனின் இரக்கத்தாலும் புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும்

## மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆகிய நான்

## மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# திருவருகைக்காலத் திருமடல்



கிறிஸ்து இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

### அறிமுகம்

மலரவிருக்கும் புத்தாண்டில் "மனித மாண்பைக் குடும்பங்களில் பேணுவோம்" என்ற அழைப்பை எமது மேய்ப்புப்பணிப் பொருளாகக் கொண்டு பணிகளை முன்னெடுக்க நான்கு தமிழ் மறை மாவட்டங்களும் தீர்மானித்துள்ளோம். படைப்பின் சிகரமாகிய மனிதன் மிகுந்த மாண்புடன் படைக்கப்பட்டவன். "அவர்களை கடவுளாகிய உமக்கு சற்றே சிறியவராக ஆக்கியுள்ளீர். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்தீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்கு கீழ்ப்படுத்தியுள்ளீர்" என்கின்றது திருப்பாடல் (திரு 8: 5-8). இவ்வாறு இறைவனின் திருமுன்னே உயர் மாண்போடு படைக்கப்பட்ட மனிதன் பாவத்தினால் தானே தனது மாண்புக்கு பங்கம் ஏற்படுத்தினான். தான் படைத்த மனிதன் பாவத்தினால் தனது மாண்பை இழந்தபோது தனது திருமகனையே மனிதனாக்கி அவன் இழந்த மாண்பை மீள வழங்க இறைவன் திருவுளமானார். இன்றும் விரியும் பாவத்தின் நீட்சியும் அருளின் தொடர்ச்சியும் இறைவனது மீட்பின் திருவருட்செயன்முறையில் எமது பங்களிப்பைக் கோரிநிற்கின்றன.

### மனித மாண்பின் அடித்தளங்கள்

இறைவன் மனிதனைப் படைத்தபோது தமது சாயலாகவும் பாவனையாகவும் அவனைப் படைத்தார் என்று சொல்கின்றது வேதாகமம். படைப்பில் படைத்தவன் வெளிப்படுகின்றான். ஆகவே மனிதரில் இறைவன் வெளிப்படுகின்றார். அந்தவகையில் மனிதனில் உள்ள இறைவனின் சாயல் அவனது மாண்பின் மறுக்கவியலா அடித்தளமாகத் திகழ்கிறது. பாவத்தின் அழுக்கு இந்த மாண்பை மறைத்தாலும் அது அழியா முத்திரையாய் அவனுள் உறைந்திருக்கின்றது. இவ்வாறு படைப்பில் வெளிப்படும் மனித மாண்பு அவனது பாவக்கறையைப் போக்க இறைவன் மேற்கொண்ட மீட்பின் செயன்முறையில் இன்னும் உன்னதமடைகின்றது.

இறைமகனின் மனிதவதாரம் மனிதனின் கறைகளைப் போக்கி அவனைத் தெய்வநிலைக்கு உயர்த்துகின்றது. கடவுள் நிலையில் விளங்கிய இயேசுக்கிறிஸ்து மனிதனானதன் மூலம் மனித இயல்பை அவன் இழந்த தெய்வீக நிலைக்கு உயர்த்துகின்றார். மனிதனின் அவலங்கள் முழுவதையும் தனது உடலில் துய்த்துணர்ந்ததன் மூலம் மனிதனுக்குரிய மாண்பை அவர் மீண்டும் அவனிடம் வழங்குகின்றார். உண்மையில் இயேசுவின் பகிரங்க வாழ்வு முழுவதுமே மனிதன் இழந்த மாண்பை அவனுக்கு வழங்குவதாகவே அமைந்திருந்ததைக் காண்கின்றோம். பாவிகள் என்றும், நோயாளர் என்றும், விபச்சாரிகள் என்றும் சமூகம் ஒதுக்கிவைத்த மனிதர்களை அவர் தேடிச்சென்றார். "நீங்கள் இறைவனின் பிள்ளைகள். ஆகவே மாண்புள்ளவர்கள்" என்ற செய்தியை அவர்களது உள்ளங்களிலே பதியவைக்கிறார். அதுமட்டுமல்லாமல் மனித மாண்புக்கு எதிராக இயங்குபவரை நோக்கித் தமது சுட்டுவிரலை நீட்டுகின்றார். அவர்களை வன்மையாகக் கண்டித்து சகமனிதர்களை சகோதரர்களாக பார்க்கும் இறையாட்சிப் பார்வைக்குள்வர அழைப்புவிடுக்கின்றார்.

### மாண்புமிகு மனிதனின் இன்றைய அவலநிலை

இறைவன் மனிதனை மாண்போடு படைத்தபோதும் மனிதன் தனது சகமனிதனின் மாண்பை மதிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ மறுக்கும் அவலநிலையை இன்றும் நாங்கள் காண்கின்றோம். மொழி, மதம், இனம், சாதி என்ற அடிப்படையில் கட்சி பிரிந்து நிற்பதையும் ஒரு குழுவினர் மறு குழுவினருடன் மோதிக் கொள்வதையும் காண்கின்றோம். பணம், படிப்பு, பதவி, பிறப்பு என்பவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு பாராட்டுவதும் அதனால் உயர்ந்தவர்களாகத் தம்மைக் கருதுபவர்கள் மற்றவர்களைத் தாழ்த்தி நடத்தும் அவலத்தைச் சந்திக்கின்றோம். கடவுள் மனிதனைப் படைத்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் என்ற பாலியல் சமத்துவத்தை மறந்து பெண்ணைப் போகப் பொருளாக்கி நுகரமுனையும் அவலத்தையும், பெண்களையும், சிறுவர்களையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குகின்ற துர்பாக்கியமான சூழ்நிலைகளையும் நாம் காண்கின்றோம். நவீன தொலைத்தொடர்பு சாதனங்களை மானிட ஒழுக்கவியலுக்கு மாறான ஆபாச பாலியல் இச்சைகளை தூண்டுகின்ற விதத்தில் பயன்படுத்துகின்ற சீர்கேட்டையும் நாம் காண்கின்றோம்.

கருவறையில் தொடங்கும் கொலைக் கலாச்சாரம் வன்முறையாக வடிவெடுத்து எத்தனையோ உயிர்களைக் காவுகொள்ளும் அவலத்தைக் காண்கின்றோம். பல நாடுகளில் கருக்கொலை சட்டமாக்கப்படுகின்றது. தன்னுடைய கருத்திற்கு உடன்படாதவர்களை வாழும் உரிமையை மறுக்கும் நிலை காணப்படுகின்றது. கருத்துக்களை வன்முறையினால் எதிர்கொள்வதால் தவறுகளைச் சுட்டிக்காட்டும் மனிதர்கள் தயங்கும் நிலை உருவாகின்றது. இறுதியில் உண்மை பலிபீடப்படுகின்றது.

தனது உயிர்மீதும் மற்றவரது உயிர்மீதும் மதிப்பிழந்து போகிறதனாலே கவனமற்ற முறையில் வாகனங்களைச் செலுத்தி நிகழும் விபத்துக்களால் பல உயிர்கள் நாளும் நாசமாவதைப் பார்க்கின்றோம்.

இறைவன் குடியிருக்கும் இல்லங்களாகிய மனித உடல்கள் இழிவுபடுத்தப்படுவதைக் காண்கின்றோம். தாமே விரும்பி தமது உடலை இழிவுபடுத்தும் தவறான பாலியல் போக்குகள் ஒருபுறம் இருக்க மறுபுறம் சித்திரவதைகள் போன்ற மனித மாண்புக்கு எதிரான செயற்பாடுகளால் மனித உடல்கள் அவமதிக்கப்படுவதைக் காண்கின்றோம். உண்மையில் எங்கெங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் மனிதனுடைய தனியுரிமைகளும், குழு உரிமைகளும் மீறப்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் மனித மாண்பு நிராகரிக்கப்படுகின்றது. இவ்வாறு அதிகரித்துவரும் மனித மாண்பிற்கு எதிரான செயற்பாடுகள் மனித மாண்பின்மீதான ஒரு அவசர கவனக்குவிப்பைக் கோரிநிற்கின்றன.

### மனித மாண்புப் பள்ளிகளாகும் குடும்பங்கள்

மனித மாண்பைப் பேணுவதற்கு பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயினும் ஒவ்வொரு மனிதனும் மனித மாண்பை பேணக்கற்றுக்கொள்ளும் அடிப்படைப் பள்ளியாக குடும்பம் அமைகின்றது. "குடும்பத்தில்தான் இளைய தலைமுறையினர் முதல் தடவையாக உண்மை, நன்மை பற்றிய கருத்துருவாக்கத்தைப் பெறுகின்றனர். அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் கற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு ஒரு மனித ஆளாக இருப்பதன் உண்மைப்பொருளை அவர்கள் குடும்பத்திலேயே புரிந்துகொள்கின்றனர்" என்கிறார் முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்.

சமூகத்தின் அடித்தள அலகாக அமைவது குடும்பம். அடித்தளத் திருச்சபையும் அதுவே. அதனால்தான் குடும்பத்தை இல்லத் திருச்சபை என்று அழைக்கின்றோம். ஆகவே மனித மாண்பு வளர வேண்டும் என்றால் அது குடும்பத்திலிருந்துதான் வளரவேண்டும் என்பது இறைத்திட்டமாகும். அதனால்தான் மனித மாண்பை குடும்பத்தோடு இணைத்து எமது மேய்ப்புப் பணித் திட்டத்தை வருகின்ற 2014ம் ஆண்டில் முன்னெடுக்க விளைகின்றோம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் குடும்ப வாழ்வைப்பற்றிப் பேசும்போது "மண வாழ்வாலும் மன அன்பாலும் உருவாகும் நெருங்கிய சமூகத்தை, படைத்தவரே ஏற்படுத்தி அதற்குரிய சட்டங்களையும் அவரே அமைத்துள்ளார். திருமணம் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினர்களின் சொந்த முன்னேற்றத்திற்கும், அவர்களது நித்திய மீட்பிற்கும், குடும்பத்தினுடையவும் மக்கள் சமுதாயத்தினுடையவும் மாண்பு, உறுதிநிலை, அமைதி, வளவாழ்வு ஆகியவற்றுக்கும் மிகவும் முக்கியமானது" (இ.உ.தி 48) என்று கூறி இறைத்திட்டத்தில் இல்லற வாழ்வின் மேன்மையைத் தெளிவாக்குகின்றது. மூவொரு இறைவனில் வெளிப்படும் அன்புறவை வெளிப்படுத்தும் அடையாளங்களாகத் திகழ குடும்பங்கள் அழைக்கப்படுகின்றன. ஒரு அடிப்படை அன்புச் சமூகம் என்ற வகையிலே மனித மாண்பு பேணப்படும் ஒரு சமுதாயத்திற்கான விளைநிலங்களாக அவை திகழ்கின்றன.

ஆயினும் எக்காலத்தையும்விட இக்காலத்தில் தமது இலக்கு வாழ்வை வாழ்வதில் குடும்பங்கள் பெரும் சவால்களைச் சந்திக்கின்றன. பூகோளமயமாதலின் விளைவாக ஏற்படும் பண்பாட்டுத்தாக்கங்கள், நுகர்வுக் கலாச்சாரத்தின் விளைவாக எழுந்துவரும் தன்மையப்போக்கு, சினிமா, தொலைக்காட்சி போன்றவற்றின் தாக்கங்கள், நவீன தொடர்பாடல் வசதிகளும் சமூகவலைத்தளங்களும் ஏற்படுத்திவரும் புதிய தொடர்புகளால் ஏற்படும் உறவுச் சிக்கல்கள் போன்ற பல காரணங்களால் இன்று குடும்பங்கள் கடலில் அகப்பட்ட படகுபோலத் தத்தளிக்கின்றன. அதிகரித்துவரும் விவாகரத்துக்களும், குடும்பப் பிணக்குகளும் சமூகத்தின் அடிப்படை அலகாகிய குடும்பங்கள் ஆட்டம் கண்டுவருவதை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய நிலையை கருத்திலெடுத்தே திருச்சபையும் 2014 ஆம் ஆண்டிலே ஒரு விசேட ஆயர் மாமன்றத்தைக் கூட்டி, குடும்ப வாழ்வு சந்தித்துவரும் புதிய சவால்களை ஆய்வுசெய்ய உள்ளது. இப்பின்னணியும் இவ்வாண்டிலே குடும்பங்களில் அக்கறை செலுத்த நாம் விரும்புவதற்குரிய ஒரு முக்கிய காரணியாகும்.

### இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று

வரிதண்டுபவராக இருந்த சக்கேயு மிகமோசமான பாவியாகக் கருதப்பட்டு ஒதுக்கப்பட்டவர். ஆயினும் இயேசு அவரில் இரக்கம் கொண்டு அவரது இல்லம் செல்கின்றார். அவரது இல்லம் சென்று அவரோடு உறவாடியதன்மூலம் அந்த இல்லத்திற்கு அவர் மீட்பு வழங்குகின்றார். வரிதண்டுபவராயிருந்த மத்தேயுவின் இல்லம் சென்றதன் மூலம் அவரைத் தனது திருத்தூதர்களுள் ஒருவராகவே மனமாற்றிக்கொள்கின்றார். இவ்வாறு இல்லங்களை நாடிச் சென்று குடும்பங்களைச் சந்தித்து இயேசு ஆற்றிய பணி இறையாட்சியில் பரவுகையில் குடும்பங்கள் ஆற்றக்கூடிய வகிபாகத்தை எமக்கு தெளிவாக்குகின்றன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மடுத்திருப்பதியில் கொண்டாடப்படும் திருவிழாக்கள்








**தை 1ம் திகதி :**
இறைவனின் அன்னை தூய கன்னி மரியாள் பெருவிழா
**மாசி 2ம் திகதி :**
ஆண்டவர் இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா
**பங்குனி 10 திகதி :**
மோதரை பங்கு மக்களால் கொண்டாடப்படும் திருவிழா
**பங்குனி 15ம் திகதி :**
பழுனுகம பங்கு மக்களால் கொண்டாடப்படும் திருவிழா

பரிசுத்தவாரம்
**வைகாசி முதல் ஞாயிறு :**
வைக்கல பங்கு மக்களால் கொண்டாடப்படும் திருவிழா
**வைகாசி 19ம் திகதி :**
நீர்கொழும்பு பங்கு மக்களால் கொண்டாடப்படும் திருவிழா
**ஆனி 2ம் திகதி :**
கொடல பங்கு மக்களால் கொண்டாடப்படும் திருவிழா
**ஆடி 2ம் திகதி :-**
மடுமாதா திருவிழா
**ஆவணி 15ம் திகதி :**
தூய கன்னிமரியாளின் விண்ணேற்பு பெருவிழா
**புரட்டாதி 8ம் திகதி :**
தூய கன்னி மரியாளின் பிறப்பு விழா
**ஐப்பசி முதல் சனி :**
செபமாலை அன்னை திருவிழா
**மார்கழி 8ம் திகதி:**
தூய கன்னி மரியாளின் அமல உற்பவ விழா




## மடுத்திருப்பதியில் வீடுகோரி விண்ணப்பிப்பதற்கான காலப்பகுதி

| திருவிழா | விண்ணப்பிப்பதற்கான காலப்பபகுதி |
|---|---|
| **தை 1 :** | கார்த்திகை 1ம் திகதி - மார்கழி 15ம் திகதி வரை |
| **மாசி 2 :** | மார்கழி 1ம் திகதி - தை 15ம் திகதி வரை |
| **பங்குனி 10, மற்றும் பங்குனி 15 திருவிழாக்கள் :** | தை 1ம் திகதி - மாசி 15ம் திகதி வரை |
| **பரிசுத்தவாரம், வைகாசி 1, வைகாசி 19 திருவிழாக்கள்** | மாசி 1ம் திகதி - பங்குனி 15ம் திகதி வரை |
| **ஆடி 2 :** | பங்குனி 15ம் திகதி - வைகாசி 31ம் திகதி வரை |
| **ஆவணி 15:** | வைகாசி 1ம் திகதி - ஆனி 30ம் திகதி வரை |
| **புரட்டாதி 8:** | ஆனி 30ம் திகதி - ஆடி 30ம் திகதி வரை |
| **ஐப்பசி முதல் சனி :** | ஆடி 15ம் திகதி - ஆவணி 30 வரை |
| **மார்கழி 8:** | ஐப்பசி 1ம் திகதி - ஐப்பசி 30ம் திகதி வரை |

மேற்குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் நாம் எந்த விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். **- மடுப் பரிபாலகர்**

## மறைமாவட்ட கீதம் – போட்டி

மன்னார் மறைமாவட்டத்திற்கான கீதம் ஒன்றை அமைக்க மறைமாவட்ட மட்டத்திலே போட்டி ஒன்றை ஏற்பாடுசெய்துள்ளோம். இதிலே கத்தோலிக்க இளைஞர்கள், பங்கிலே உள்ள கலைஞர்கள், இன்னும் அவை தொடர்பான துறைசார் வல்லுனர்களின் உதவியப்பெற்று மறைமாவட்டத்திற்கென்று கீதம் ஒன்றை அமைக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இப்போட்டி தை மாதம் 11ம் திகதி சனிக்கிழமை மன்னார் பேராலயத்தில் காலை 9.00 மணிக்கு இடம்பெறும்.**

**இதில் வெற்றியீட்டும் பங்குகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.**

1ம் பரிசு – 5,000.00 2ம் பரிசு – 3,000.00 3ம் பரிசு – 2,000.00 ரூபா மற்றும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

**போட்டி தொடர்பான விதிமுறைகள் : இப்பாடலில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.**

1. பங்கிலிருந்து ஒரு குழு மாத்திரம் இடம்பெறும். இதில் எத்தனை பேரும் பங்குபெற்றலாம்.
2. வாத்தியங்கள், இசைக்கருவிகளின் பயன்பாடு கவனத்தில் எடுக்கப்படும் (மிருதங்கம், ஓகன், தபபேலா போன்றன)
3. ஓர் எழுச்சியான கீதமாக அமைதல் வேண்டும்.
4. புதிய இராகமாகவும் மெட்டாகவும் அமைதல் வேண்டும்.
5. பழைய பாடல்களின் இராகமாகவோ அல்லது பழைய பாடல்களின் வரிகளை மாற்றியோ அமைத்தல்கூடாது,
6. 5 - 6 கட்டுக்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.
7. நல்ல கருத்துள்ள சொல்வளம் இடம்பெறல் வேண்டும்.
8. பின்வரும் கருத்துக்கள் முக்கியமாக இடம்பெறுதல் வேண்டும்.

- வேதசாட்சிகளின் மரணம் - மடுமாதா திருத்தலம்
- புனித ஸ்தலங்கள் பற்றிய சிந்தனை (ஓலைத் தொடுவாய், பெரியகட்டு, பரப்புகடந்தான்)
- புனித சவேரியாரின் பணி, யோசவ்வாஸ் அடிகளாரின் பணி
- வயல், கடல், தென்னை, பனை வளம்
- விசுவாச சாட்சிய வாழ்வு, பணி வாழ்வும் அர்ப்பணமும்
- மனித மாண்பு

**நன்றி : கத்தோலிக்க இளைஞர் பணியகம், மன்னார் மாவட்டம்**

# மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு – 2014

அன்பிய வாழ்வின் ஊடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி ....

Ttwards Christian Maturity ....

## மனித மாண்பும் குடும்பமும்

"மனித மாண்பை குடும்பங்களில் பேணுவோம்"





2014ஆம் ஆண்டிற்கான மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் பணித்திட்டமிடல் மாநாடு கடந்த நவம்பர் மாதம் 25ஆம் 26ஆம் திகதிகளில் மடு தியான இல்லத்தில் இடம்பெற்றது. 'மனித மாண்பும் குடும்பமும்' என்ற கருப்பொருளில் இம்மாநாடு இடம்பெற்றது. 25ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய இம்மாநாடு அடுத்தநாள் 26ஆம் திகதி மதிய உணவுடன் நிறைவுபெற்றது.

வரவேற்புரையை அருட்பணி. நெவின்ஸ் யோராஜா வழங்கினார். ஆசியுரையை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை வழங்கினார். பங்கு மேய்ப்புப்பணித்திட்ட மீளாய்வு அறிக்கையை மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாட்டுச் செயற்குழுவின் செயலாளர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்கள் வழங்கினார். ஆணைக்குழுக்களின் அறிக்கையை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்கள் வழங்கினார். பங்கேற்பாளர்களை அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் அறிமுகம் செய்துவைத்தார்.

முதல் அமர்வின்போது மாநாட்டு தொடக்கவுரையை அருட்பணியாளர் றமேஸ் (அமதி) அவர்கள் வழங்கினார். இந்த அமர்வுக்கு அருட்பணி இ. செபமாலை அவர்கள் தலைமைதாங்கினார். உரையின் அடிப்படையில் பொதுவான கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இரண்டாம் நாள் திருப்பலியோடு அமர்வுகள் ஆரம்பமாயின. இரண்டாவது அரங்கு கருத்துப் பகிர்வாக ( Panel Discussion) இடம்பெற்றது. "விவிலியக் கண்ணோட்டத்தில் மனித உரிமைகளும் மனித மாண்பும்" என்ற தலைப்பில் அருட்பணி. எஸ். ஜெயபாலன் குரூஸ் (மன்னார் மறைமாவட்டம்) அவர்களும், "திருச்சபையின் சமூகப் படிப்பினைகளின் பார்வையில் மனித உரிமைகளும் மனித மாண்பும்" என்ற தலைப்பில் அருட்பணி. ஜெயக்குமார் (யாழ் மறைமாவட்டம்) அவர்களும், "சமகாலப் பார்வையில் மனித உரிமைகளும் மனித மாண்பும்" என்ற தலைப்பில் அருட்பணி. மங்களராஜா (யாழ் மறைமாவட்டம்) அவர்களும் கருத்துப் பகிர்வு செய்தனர். பின்னர் விளக்கக் கேள்விகளும் குழு ஆய்வும் இடம்பெற்றது. தொடர்ந்து குழு அறிக்கைகள் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. பொது அமர்வைத் தொடர்ந்து ஆயர் நிறைவுரையாற்றினார். இறுதியாக அருட்பணி. றெஜினோல்ட் அடிகளாரின் நன்றியுரையோடு மாநாடு நிறைவுபெற்றது. (மாநாட்டின் தீர்மானங்களை அடுத்த மன்னா தாங்கிவரும்)

## மன்னார் ஆயர் – குருக்கள் முதலமைச்சருடன் கலந்துரையாடல்

நில ஆக்கிரமிப்பு மற்றும் மன்னார் மக்கள் எதிநோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராய்வு



வட மாகாண முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன் அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. ஜோசேப்பு ஆண்டகை மற்றும் மன்னார் குருக்களுக்கும் இடையில் கடந்த 1.12.2013 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா. டெனீஸ்வரன், வடமாகாண சுகாதார, சுதேச வைத்திய அமைச்சர் கௌரவ பி. சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி பிரிமூஸ் சிராய்வா, வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன், ஜனாப் அயூப் அஸ்மீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைகள், இராணுவத்தலையீடு, இராணுவத்தின் பிரசன்னம் அதிகரிப்பு, அமைச்சர் ஒருவரின் தன்னிச்சையான செயற்பாடுகள், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீள்குடியேற்ற கிராம மக்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் மன்னார் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் இராணுவ ஆக்கிரமிப்பினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சொல்லொண்ணா துயரங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது மன்னார் ஆயர் எடுத்துரைத்தார்.

இந்த அவலங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்குமாகாண சபை விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மன்னார் ஆயரும் குருக்களும் இதன்போது வலியுறுத்தினர்.

## தமிழ்ப் பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை

### நீதி சமாதான ஆணைக்குழு குற்றச்சாட்டு

வன்னியில் 3 கிராமங்களில் தமிழ்ப் பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை திட்டமிட்ட முறையில் செய்யப்பட்டுள்ளதாக யாழ் கத்தோலிக்க மறைமாவட்டத்தைச் சேர்ந்த நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு அறிக்கையிட்டுள்ளது. இந்த அறிக்கை வத்திக்கானின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி ஜோசப் ஸ்பிறிற்றேரி ஆண்டகைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தின் வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் பலருக்குப் பலவந்தமாகக் கருத்தடை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதை கிளிநொச்சி அரச வைத்தியர்களே மேற்கொண்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## புதிய வரவுகள் ... புதிய வரவுகள்...

### ஜெயந்தன் அடிகளாரின் இறுவட்டு

பேசாலையைச் சேர்ந்த யாழ் மாகாண அமலமரித்தியாகி அருட்பணி. ஜெயந்தன் பச்சேக் அவர்கள் 'ஞானம்' என்ற பெயரில் கிறிஸ்தவப் பக்திப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு ஒன்றை வெளியிட்டுள்ளார். கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி பேசாலையில் இந்த வெளியீட்டு விழா இடம்பெற்றது. நூலுக்கான ஆய்வுரையை அருட்பணி. பெனோ வழங்கினார்.



### அன்பு அடிகளாரின் நூல்

முருங்கனைச் சேர்ந்த யாழ் மாகாண அமலமரித்தியாகி அருட்பணி. செ. அன்புராசா அவர்கள் 'திருப்பத்திற்கான தேடல்கள்' என்ற பெயரில் விழிப்புணர்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த நூலின் விலை 250 ரூபா. இந்த நூலையும் ஜெயந்தன் அடிகளாரின் இறுவட்டையும் (விலை 150 ரூபா) கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம்.




## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய திருத்தந்தையைச் சந்தித்தார்



வத்திக்கானுக்கு விஜயம் செய்த இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, கடந்த நவம்பர் 20ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திக்கானில் சந்தித்தார்.

இதன்போது இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பினை, திருத்தந்தையிடம் கோத்தபாய ராஜபக்ஷ ஒப்படைத்துள்ளார்.

உலக சமாதானத்திற்காக திருத்தந்தை ஆற்றிவரும் சேவைகள் பாராட்டுக்குரியவை எனத் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் நாட்டில் பாரியளவில் நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், வத்திக்கானுடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணிப் பாதுகாக்க இலங்கை கூடுதல் ஆர்வம் காட்டிவருவதாகவும் தெரிவித்துள்ளார். திருமதி கோத்தபாய, வத்திக்கான் மற்றும் திருப்பீடத்திற்கான இலங்கைத் தூதுவர்கள், கடற்படைத்தளபதி ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் முதன்முறையாக

இலங்கை கிளரீசிய குருக்களால் முதன் முதலாக வெளியிடப்படும்

விவிலிய நாட்குறிப்பேடு ~ 2014

இப்போது வெளிவந்து விட்டது



- முதலாம், இரண்டாம், நற்செய்தி வாசகங்கள்
- வாசகங்களுக்குப் பொருத்தமான சிந்தனைகள்
- இலங்கை கிளரீசிய குருக்களால் எழுதப்பட்ட வாசக சிந்தனைகள்
- பதிலுரைப்பாடல்
- புனிதர்களின் திருநாட்கள்
- குறிப்புகளை பதிவு செய்வதற்கான இடைவெளி
- இலங்கையின் திருவழிபாட்டு ஆண்டிற்கமைய அமைக்கப்பட்டது
- அனைவராலும் வாசிக்கக் கூடிய வகையில் அமைந்த எழுத்துருவாக்கம்
- தரமான தாள்களில் அச்சிடப்பட்டது

இவ்வாறான அனைத்து அரிய விடயங்களை உள்ளடக்கிய இவ்விவிலிய நாட்குறிப்பேட்டை இன்றே நீங்களும் பெற்று பயனடையுங்கள்

பிறக்கப்போகும் 2014ஆம் ஆண்டுக்கு இறைவார்த்தையை பரிசளிப்போம்

உங்களுக்கான பிரதிகளைப் நாடெங்கிலும் உள்ள எமது விற்பனைப் பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

தொடர்புகளுக்கு :-

கிளரீசியன் வெளியீட்டகம்
இல 55, இறாகமை வீதி,
வெளிசர

011 2 953 434
077 8 032 348

# அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்வு





அண்மைக் காலமாக மன்னார் மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றமையினால் அனர்த்தங்கள் தொடர்பான அறிவுறுத்தல் வழங்கும் நிகழ்வானது மாவட்ட வைத்திய அதிகாரி டொக்ரர் எம். ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் முருங்கன் பிரதேச வைத்தியசாலையில் கடந்த 19.11.2013 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வானது மன்னார் பிராந்திய சுகாதாரப்பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க மன்னார் அரசாங்க அலுவலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உதவியாளர் அவர்களினாலும் வைத்திய அதிகாரி டொக்ரர் கே. அரவிந்தன் அவர்களினாலும் அனர்த்தங்கள் தொடர்பான முன் எச்சரிக்கை செய்தல், அனர்த்தங்களினால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்தல் மற்றும் தொற்றுநோய் பரவுதலை கட்டுப்படுத்தல் தொடர்பான அறிவுரைகள் உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டன.

# தேசமானிய விருதினைப் பெறும் அருட்தந்தை எமில்



மன்னார் மறைமாவட்டக் குருவும், மடுமாதா திருத்தலத்தின் பரிபாலகருமாகிய அருட்தந்தை ச. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தேசமானிய என்னும் உயர் விருதினைப் பெற்றுள்ளார்.

மாஸ் மீடியா லங்கா என்னும் அமைப்பு அண்மையில் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் அடிகளாருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு துறைகளிலும் அர்ப்பணிப்போடு செயற்பட்டவர்கள், நாட்டின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களுக்கு இவ்விருது ஒவ்வொரு வருடமும் வழங்கப்பட்டு வருகின்றது.

அருட்பணியாளர் ச. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் பல்லின அமைதிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் பங்களிப்புச் செய்வதற்காக இந்த உயர் விருதினை வழங்கியுள்ளார்கள். இவ்வுயர் விருதினைப் பெறும் முதல் தமிழ்க் கத்தோலிக்க அருட்பணியாளர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. விருதினைப் பெற்ற அடிகளாருக்கு மன்னா வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றது.

# பள்ளிமுனை லூசியா சம்பியன்

மன்னார் உதைபந்தாட்ட லீக் வடக்கு - கிழக்கு மாகாண அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.

கடந்த 24-11-2013 ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர சபை மைதானத்தில் இறுதிப் போட்டி ஆரம்பமானது.

இறுதியாட்டத்தில் மன்னார் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. ஆட்ட இறுதிவரை இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் போடாமல் சமநிலையில் நின்றன. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி 4: 3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

# 2013 ஆசிரியர் தின விழா கவிதை

*வல்லினமும் மெல்லினமும் வார்த்தை யேசுதானே*

யேசு எனும் ஆசிரியர்
என்று மாறா சாஸ்திரியார் (2)
பேசுகின்ற வார்த்தை யவர்
சேர்த்துத் தந்த கோர்வை (2)

வார்த்தை யாவும் சேர்ந்து
வசனமாகும் பாரீர்
வசனம் யாவும் சேர்ந்து
பந்தியாகும் மன்றோ (2)

வல்லினமும் மெல்லினமும்
இடையினமும் யாவும் எமக்கு
வையத்தில் கற்றுத் தந்தார்
வல்ல பரன் யேசு

வார்த்தையி(ல்) லா ஏட்டில்
கல்வி யில்லை காண்பீர் -
அதனால்
வார்த்தை யென்று
சொன்னால் - அதை
யேசு என்று சொல்வோம்.

அன்பின் ஆசான் வாரீர்
அவர் வழியில் சென்று
பண்பின் கல்வியாலே
பாருயரச் செய்வோம்
வார்த்தை வடிவான
வல்ல தேவன் யேசு - (2)
வையம் உய்யத்தானே
வந்துதித்தார் இங்கு - (2)

- அக்னஸ் சவரிமுத்து,
வட்டகொட,
தலவாக்கலை பங்கு,
கண்டி மறை மாவட்டம்

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ....... தீர்மானிப்பது நீங்கள்.......

### கடந்தவருடம் 23½ கோடி லீற்றர் மது அருந்திய இலங்கைக் ‘குடி’ மகன்கள்



2012 ஆம் ஆண்டில் மாத்திரம் நாட்டில் 23 கோடியே 40 இலட்சத்து 19 ஆயிரத்து 903 லீற்றர் மதுபானம் நுகரப்பட்டுள்ளதாக கலால் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி கடந்த வருடத்தில் நாட்டில் வசிப்போரில் 15 இலட்சத்து 439 லீற்றர் ஜின்னும், 12 கோடியே 35 இலட்சத்து 56 ஆயிரத்து 629 லீற்றர் பியரும், 11 இலட்சத்து 14 ஆயிரம் லீற்றர் விஸ்கியும், 67 இலட்சத்து 94 ஆயிரத்து 382 லீற்றர் பிரன்டியும், ஒரு கோடியே 73 இலட்சத்து 25 ஆயிரத்து 918 லீற்றர் கள்ளும், 8 கோடியே 21 இலட்சத்து 69 ஆயிரத்து 59 லீற்றர் சாராயமும் நுகரப்பட்டுள்ளன.

இவ்வாறாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகள் மூலம் கடந்த வருடத்தில் மாத்திரம் 56 கோடியே 51 இலட்சத்து 88 ஆயிரத்து 544 ரூபா அரசாங்கத்திற்கு இலாபம் கிடைத்துள்ளதாகவும் கலால் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஆட்கடத்தல் வர்த்தகர் ரூபா 40 கோடி வசூல்

ஆஸ்திரேலியாவிற்கு கடல் மார்க்கமாக ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட வர்த்தகர் 40 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை பல்வேறு நபர்களிடம் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது ஆஸ்திரேலியாவிற்கு 12 இலட்சம் ரூபா பணத்தை குறித்த வர்த்தகர் அறவிட்டுள்ளார் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### புகைபிடிப்போருக்காக 150 இலட்சம் ரூபா செலவு

புகைபிடிப்பதன் விளைவாக ஏற்படும் நுரையீரல் மற்றும் வாய்ப் புற்றுநோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக 144 முதல் 150 இலட்சம் ரூபா வரை செலவிடப்பட்டாலும் கடைசியில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பவர்களே அதிகமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

இதன்படி ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 50 தொடக்கம் 60 பேர்வரை புகைபிடிப்பதனால் ஏற்படும் வெவ்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளதாக அரலங்வில பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

### இலங்கையில் 47.000 க்கும் மேல் பெண் பாலியல் தொழிலாளர்கள்

இலங்கையில் 35,000 முதல் 47,000 வரையிலான பெண் பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாகவும் அவர்களை நாளாந்தம் 70,000 முதல் 94,000 பேர் வரையிலான வாடிக்கையாளர்கள் நாடுவதாகவும் பாலியல் நோய் மற்றும் எச். ஐ. வி ஒழிப்பு அமைப்பின் விசேட நிபுணர் தர்ஷினி விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இதேவேளை எச்.ஐ.வி தொற்றுக்கள் தொடர்பான ஆய்வின் மூலம் முறையற்ற பாலியல் தொடர்புகளே இந்தத் தொற்றுக்கு முக்கிய காரணமாக அமைவதுடன், அதில் பெண் பாலியல் தொழிலாளர்கள் ஆபத்துமிக்க குழுக்களில் முன்னணியில் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: உலகில் 3 கோடியே 40 இலட்சம் பேர் வரையிலானோர் எச். ஐ. வி. தொற்றுக்கு இலக்காகியுள்ளதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 90 வீதமானோர் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளைச் சேர்ந்தவர்களேயாவர். இந்நிலையில் இந்தியா, இலங்கை இந்தோனேசியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் எச். ஐ. வி. தொற்று அதிகரித்துச் செல்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### 150.000 மாணவர்களுக்கு கண்பார்வை இல்லை

இலங்கையில் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பாடசாலை பிள்ளைகள் முழுமையாகக் கண்பார்வையை இழந்தவர்களாக உள்ளார்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் பாலிதமஹீபால தெரிவித்துள்ளார். அதேநேரம் 4 இலட்சத்து 50ஆயிரம் பாடசாலைப் பிள்ளைகள் கண்பார்வை தொடர்பாக பலவிதமான பிரச்சினைகளுக்கும் ஒரு இலட்சத்து 60ஆயிரம் பிள்ளைகள் குறுகிய கண் பார்வைக்கும் உள்ளாகியுள்ளார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்,

### இந்த வருடம் 119 ஊடகவியலாளர்கள் படுகொலை

இந்த வருடம் உலகெங்கும் கடமையிலிருந்த சமயம் மொத்தம் 119 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக வியன்னாவைத் தளமாகக்கொண்டு செயற்படும் சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம் (ஐ.பி.ஐ) தெரிவித்துள்ளது.

1997ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களின் மரணங்கள் தொடர்பில் சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம் கணிப்பிட ஆரம்பித்ததிலிருந்து அதிகளவு ஊடகவியலாளர்கள் மரணத்தை தழுவிய ஆண்டாக இந்த ஆண்டு விளங்குகிறது.

மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சிரியாவில் மட்டும் இந்த வருடம் 36 ஊடகவியலாளர்கள் கடமையில் இருந்தவேளை கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவுக்கு நிகராக ஊடகவியலாளருக்கு அபாயகரமான நாடாக சோமாலியா விளங்குகிறது. அங்கு இந்த ஆண்டில் 16 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேற்படி நாடுகளைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு அபாயமிக்க நாடுகளின் வரிசையில் மெக்ஸிக்கோ, பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன.

# இணைந்து வாழ்ந்த தம்பதி 80 வருடங்களின்பின் திருமணம்



80 வருடங்களாக இணைந்து வாழ்ந்த பராகுவே நாட்டைச் சேர்ந்த தம்பதியினர் சமய அனுஷ்டானங்களுடன் அண்மையில் திருமணம் செய்துகொண்டுள்ளனர். திருமண நிகழ்வின்போது 103 வயதான மணமகன் ஜோஸ் மனுல் ரீலா சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்ததுடன் 99 வயதான மணமகள் மார்டினாலோபைய் வெள்ளைநிற நீளமான ஆடையை அணிந்திருந்தார்.

தம்பதியின் வீட்டுத் தோட்டத்தில் திருமண நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றிருந்தன. இதேவேளை, அந்நிகழ்வில் அத்தம்பதியின் 8 பிள்ளைகளும் 50 பேரப்பிள்ளைகளும் 35 பூட்டப்பிள்ளைகளும் 20 கொள்ளுப்பேரப் பிள்ளைகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதுவொரு பழமையான புதிய திருமணமென அவர்களுடைய பாதிரியார் இத்திருமணத்தை வர்ணித்திருந்தார்.

# ‘பட்ஜெட்’ டில் ராஜபக்ஷக்களுக்கு 72 ஆயிரத்து 400 கோடி ரூபா

## தகவல் வெளியிட்டது ஐ.தே.க

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகிய மூவருக்கு மாத்திரம் பட்ஜட்டில் 72 ஆயிரத்து 400 கோடி ரூபாவை ராஜபக்ஷ படையணி ஒதுக்கியுள்ளது. இது மொத்த வரவு – செலவுத்திட்டத்தில் 47 சதவீதமாகும்.

இவ்வாறு புள்ளிவிவரங்களுடன் தகவல் வெளியிட்டார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

2014ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு 114 கோடி ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டில் பிரதமருக்கு 32 கோடி ரூபா ஒதுக்கப் பட்டபோதும் இந்த ஆண்டில் 30 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னாரில் புலனாய்வு பிரிவினர் எனத்தெரிவித்து பொதுமக்களை அச்சுறுத்தும் நிலை நிறுத்தப்பட வேண்டும்

### மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி இ. செபமாலை அடிகளார்

மன்னாரிலும் விசேடமாக வடகிழக்கு முழுவதிலுமே இராணுவப் புலனாய்வுத்துறையின் நடவடிக்கைகள் மிகவும் மோசமான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதை வெளியுலகிற்கு செய்தியாளர்கள் எடுத்துச் சொல்லவேண்டும் என்பதே மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இதன் காரணமாகவே பத்திரிக்கையாளர் மாநாட்டை நாம் கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவரும் எழுத்தூர் பங்குத்தந்தையுமான அருட்பணி. இ. செபமாலை தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் அண்மைக் காலமாக இராப்பகல் என்று பாராது தாங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்று கூறிக்கொண்டு பலரை அச்சுறுத்தும் நிலை தொடர்வதை முன்னிட்டு மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடு இடம்பெற்றது.

செபமாலை அடிகளார் தலைமையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வடமாகாண அமைச்சர் சட்டத்தரணி பா. டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ். பிறிமுஸ் சிறாய்வா, தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை மற்றும் காணாமல்போன உறவுகளைக் கண்டுபிடிக்கும் சங்க முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாங்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக துன்பங்களை அனுபவிக்கின்றோம். யுத்தம் முடிந்த பிற்பாடும் துன்பங்களை அனுபவிக்கின்றோம். காணாமல்போனவர்களின் தாய்மார் சார்பாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டுவருகிறோம். ஆரம்பத்திலிருந்தே இராணுவப் புலனாய்வுத் துறையினரால் பல்வேறு அச்சுறுத்தல்கள் எமக்கு விடுக்கப்பட்டு வருகின்றன. இவை செய்தியாளர்களுக்குத் தெரியும். நாம் முதன்முதலாக புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒன்றுகூடியவேளையில் புலனாய்வுப் பிரிவினர் புகைப்படங்களை எடுத்து பல குழப்பங்களை ஏற்படுத்தினார்கள்.

அதுமட்டுமல்லாமல் திருமதி மனுவல் உதயசந்தராவின் வீட்டிற்குச் சென்று விசாரிப்பது, தொலைபேசி அழைப்பு விடுப்பது




மற்றும் பல்வேறு மிரட்டல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. நாம் எல்லோரும் அவர்களுடைய அடிமைகள். அவர்கள் சொல்வதை நாம் கேட்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே வளர்ந்துகொண்டு இருக்கின்றது.

ஆகவே இது தொடர்ந்து நடைபெறக்கூடாது என்பதை முன்னிறுத்துவதற்கும் கடந்த 20.11.2013 அன்று மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளர் எஸ். சுனேஸ் சோசை அவர்களுடைய வீட்டிற்குச் சென்று கொலை மிரட்டல் விட்டமை மற்றும் அவர்களைத் துன்புறுத்தியது சம்மந்தமாக இன்றைய நாளில் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம்.

இராணுவத்திற்கும் எமது செயற்பாட்டிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இராணுவத்தினுடைய வேலை யுத்தத்தில் சண்டை பிடிப்பது. இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. இனி அவர்கள் தங்களுடைய வேலையை பார்க்கவேண்டியதுதான். எங்களுடைய சிவில் வேலைகளில் பொலிஸ் அதிகாரிகளும் அரசாங்க அதிபர் மற்றும் அரச அதிகாரிகளும்தான் தலையிட முடியும். ஆகவே பிரஜைகள் குழு வேலையாக இருந்தால் என்ன பொது வேலையாக இருந்தால் என்ன இராணுவத்திற்கோ இராணுவப் புலனாய்விற்கோ எங்களுடைய வேலைகளில் தலையிடுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை தெளிவாகச் சொல்லிக்கொள்கிறோம் என்றார்.

## கத்தோலிக்க இளையோர் பேரணி






பிரேசில் நாட்டில் நடந்து முடிந்த 28வது உலக இளைஞர் தினத்தை நினைவூட்டும் முகமாக இலங்கை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் கொழும்பு தேவத்தை ஆலயத்தில் கடந்த ஐப்பசி மாதம் 19ம் திகதி தேசிய ரீதியில் இளைஞர் பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

சகல மறைமாவட்டங்களிலிருந்தும் ஏறத்தாள 5000ற்கும் அதிகமான இளைஞர் யுவதிகள் இந்நிகழ்விலே கலந்துகொண்டனர். மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து இளையோர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் அடிகளாருடன் 70 கத்தோலிக்க இளைஞர், யுவதிகள் இந்நிகழ்விற்கு சென்றிருந்தனர்.

முதலிலே தேவத்தை இலங்கை மாதா ஆலயத்திற்கு எதிராக அமைந்துள்ள முன்றலிலே காலை 9.00 மணிக்கு ஒன்றுகூடிய இளைஞர்களுக்கு ஆன்மீக உந்துதலாக அருங்கொடை குழுவினரால் தமிழ், சிங்கள மொழிகளில் பாடல்களும் உரைகளும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பதாதைகள் தாங்கிய வண்ணம் 'பாண்ட்' வாத்திய இசைக்குழுவினரால் வழிநடத்தப்பட பேரணி பேராலயத்தை நோக்கிச் சென்றது. இப்பேரணியில் அனைத்து மறைமாவட்டங்களும் தங்களுடைய மறைமாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மறைமாவட்டக் கொடிகளுடனும், அனைத்து இளைஞர் யுவதிகளும் தங்கள் கைகளில் நீலம், வெள்ளைக் கொடிகளுடனும் பேரணியில் கலந்துகொண்டார்கள். பேரணியின் இறுதியில் மாதா சுரூபத்தை இளைஞர்கள் தங்கள் கைகளில் ஏந்தியவாறு வந்தனர். பேரணி ஆலயத்தை அடைந்தவுடன் அங்கே ஆயர்களின் கூட்டுத்திருப்பலி கருதினால் தலைமையில் தமிழ், சிங்கள மொழிகளில் இளையோருக்காக நிறைவேற்றப்பட்டது.

- கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு,
மன்னார் மறைமாவட்டம்

## அரச சிறுவர் நாடக விழாவில் வங்காலை முதலாம் இடம்

கலாசார மற்றும் கலை அலுவலக அமைச்சின் அனுசரனையுடன் இலங்கைக் கலைக்கழகத்தின் அரச, நாடகக்குழுவினரால் நடாத்தப்பட்ட 2013 அரச சிறுவர் நாடக விழாவில் திறந்த நாடகப் பிரிவில் போட்டியிட்ட 13 சிறுவர் நாடகங்களில் வங்காலை புனித ஆனாள் நுண்கலை மன்றத்தில் சிறுவர் நாடகமாகிய 'சிங்கத்தின் முயற்சி' என்ற சிறுவர் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்று வங்காலைக் கிராமத்திற்கும், மன்னார் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.

இவ்விழாவில் சிறந்த நடிகர், சிறந்த ஒப்பனையாளர், சிறந்த அரங்க அமைப்பாளர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த நெறியாளர் என 9 உயர் விருதுகளையும் இம்மன்றம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேசத்தின் வளமான சிறுவர்களின் நாடகப் படைப்பினை மேலோங்கச் செய்து அவர்களின் கலைத்திறனை வளர்ப்பது நமது கடமையாகும். அதற்கேற்ப நாடக நெறியாளர் திரு. மு. காளிதாஸ், கலை மன்ற நெறியாளர் திரு. றெ. செல்வராஜ் குருஸ் (அச்சப்பா) அவர்களின் பணி சிறப்பானதாகும்.

இவர்களைக் கௌரவிக்கும்முகமாக விருது வழங்கும் விழாவும், பரிசளிப்பு விழாவும் புனித ஆனாள் அருட்பணிப் பேரவையின் அனுசரணையுடன் வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன் அவர்களின் தலைமையில் மறைபரப்பு விழாவின்போது சிறப்பாக இடம்பெற்றது.

## மன்னார் உதைபந்தாட்ட லீக் செயலாளர் மலேசியா பயணம்

மன்னார் உதைபந்தாட்ட லீக் செயலாளர் திரு ப. ஞானராஜ் அவர்கள் உதைபந்தாட்ட முகாமைத்துவ நிர்வாக கற்கை நெறிக்காக நவம்பர் மாதம் 30ம் திகதி மலேசியா செல்கிறார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மலேசியாவின் தலைநகர் கோலாலம்புரில் உள்ள ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் இவர் கலந்துகொள்ளவுள்ளார். இவர் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கவுன்சில் உறுப்பினராகவும், மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளராகவும், மன்னார் மாவட்ட இணைப்பாளராகவும், உதைபந்தாட்ட முதல் தர பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். அத்துடன் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியராகவும் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளராகவும் திகழ்கின்றார்.

இவரை மன்னார் உதைபந்தாட்ட கழகங்கள் இரசிகர்கள் சார்பாக வாழ்த்துகின்றோம்.

## வவுனியா மரியாயின் சேனை 'விடியற்காலத்தின் நட்சத்திரம்' 25வது யூபிலி விழா



வவுனியா கரப்பன்காடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 26.10.2013 அன்று சனிக்கிழமை காலை 'விடியற்காலத்தின் நட்சத்திரம்' பிரசீடிய மரியாயின் சேனையினர் சிறப்பாகக் கொண்டாடினர். மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனை ஆன்ம இயக்குனர் அருட்பணி. தேவராஜா கொடுதோர், வவுனியா பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி டெஸ்மன், அருட்பணி ரெறென்ஸ், அருட்சகோதரி ஹேமன் ஆகியோர் இந்நிகழ்விற்கு வருகைதந்திருந்தனர். அத்தோடு வவுனியா சதாசகாய மாதா கியூறியாவைச் சேர்ந்த சகல பிரசீடிய சகோதரிகளும், வேப்பங்குளம் காணிக்கை மாதா கியூறியாவைச் சேர்ந்த சகல பிரசீடிய சகோதரிகளும் வருகை தந்திருந்தனர்.

அன்று காலை 9.30 மணிக்கு ஆவியின் பாடல் பாடப்பட்டு திருச்செபமாலையும் சொல்லப்பட்டு கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. யூபிலி விழாவின் மகத்துவத்தையும், அன்னையின் பரிந்துரை எப்பொழுதும் நமக்கு உண்டென்றும், எப்பொழுதும் அன்னை எங்களுக்குத் துணை செய்வார் என்றும் அருட்பணி. தேவராஜா கொடுதோர் மறையுரை ஆற்றினார்.

பின் சங்கிலிச்செபம், சேனைச் செபங்கள் சொல்லப்பட்டன. தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

## அருள் நிறை கன்னிமரி சபை சகோதரிகளின் முன்பள்ளி ஒளிவிழா நிகழ்வுகள்

கடந்த 01-12-2013 ஞாயிறு காலை 10.30 மணியளவில் மன்/கருங்கண்டல் றோ.க.த. மகாவித்தியாலயத்தில் அருள் நிறை கன்னிமரி சபை ஆங்கில முன்பள்ளி ஒளிவிழா சிறப்பாக இடம்பெற்றது. காத்தான்குளம் அருள்நிறை கன்னிமரி சபை முன்பள்ளி சிறார்களும், ஆள்காட்டிவெளி முன்பள்ளி சிறார்களும் இதில் பங்கேற்றனர். அருட்சகோதரி யுவரானி, அருட்சகோதரி வசந்தி மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் மொறின், விசோயா, மெலானி ஆகியோர் நிகழ்ச்சிகளை முன்னின்று ஆயத்தப்படுத்தினர். இந்த ஒளிவிழா நிகழ்வு காத்தான்குளம் அருள் நிறை கன்னிமரி சகோதரிகள் இல்ல முதல்வர் அருட்சகோதரி திரேசா அவர்களின் முழு வழிநடத்தலுடன் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியான் கலந்துகொண்டார். காத்தான்குளம் பங்குத்தந்தை வண. எஸ். வசந்தகுமார், அடம்பன் பங்குத்தந்தை வண. நியூட்டன், கார்மேல் கன்னியர் அடம்பன் அருட்சகோதரிகள் மற்றும் மடுவலய உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், காத்தான்குளம் சென். ஜோசப் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

தகவல் : A. கெவின் துவாரகா, காத்தான்குளம்.

## பொதுநிலையினர் பேரவையினால் நடாத்தப்பட்ட வில்லுப்பாட்டு போட்டியில் நானாட்டான் பங்கு முதலிடம்

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை விசுவாச ஆண்டினை மையமாகக் கொண்டு "விசுவாச ஆண்டில் பொதுநிலையினர்" என்ற தலைப்பில் வில்லுப்பாட்டு போட்டியினை நடத்தியிருந்தனர். அதில் மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகள் பங்கேற்றிருந்தனர். சிறப்பாக நானாட்டான் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குருஸ் அவர்களின் ஆசியுடன் சென்ற நானாட்டான் பங்கு முதலிடத்தை பெற்றுக் கொண்டது. இதில் கட்டைக்காடு தாண்டியா இசைக்குழுவின் தலைவர் ஆசிரிய ஆலோசகர் திரு. யோண் பொஸ்கோ தலைமையில் கலைஞர்கள் சென்றிருந்தமை. குறிப்பிடத்தக்கது. இதில் கலந்துகொண்ட கலைஞர்களை மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது.

தகவல் - அ. அர்ஜீன், பெரியகட்டைக்காடு, நானாட்டான்.

# திருச்சிலுவை கன்னியரின் சிறப்பு மலர்
# அருட்சகோதரி பேணாடா

## இறப்பின் 150 ஆண்டுகள் நிறைவு (13.12.1863 - 13.12.2013)



அன்னை மடியில்
26 - 11 - 1822

இறைவன் அடியில்
13 - 12 - 1863

சுவிஸ்லாந்தில் பிஸ்லிபாக் என்னும் இடத்தில் பிறந்த ஓர் உத்தமி அருட்சகோதரி பேணாடா. இவர் 1822ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ம் திகதி அவனியில் மலர்ந்தார். இவரது இயற்பெயர் மரியானா ஆகும். கென்றி யோசப்புக்கு 4வது புத்திரியாக இவர் பிறந்தார். தந்தை சப்பாத்து செய்பவர். மிகவும் ஏழ்மையான குடும்பம். மரியானா சிறுவயது முதல் குடும்பத்தில் பொறுப்புடையவர். இவரின் மாமனார் ஒரு குருவாக இருந்தபடியால் மரியானாவுக்கு தானும் ஒரு துறவியாக வேண்டும் என்ற ஆவல் இருந்தது. இவரின் மாமனார் இறந்தபின்னர் அருட்தந்தை தியோடோசியஸ் கத்தோலிக்க மக்கள் மத்தியில் கிறிஸ்தவ கல்வியை அள்ளி வழங்க விரும்பினார். இதற்காக நல்ல தாயை தேடியவேளையில் மரியானாவிடம் காணப்பட்டபண்புகளைக் கண்டு அவர் ஒரு துறவியாகவும் ஆசிரியராகவும் விளங்க வேண்டும் என விரும்பினார். சிறுவயதில் தந்தையை இழந்த மரியானாவுக்கு குடும்ப கஸ்டம் ஒருபுறம் இறையழைத்தல் மறுபுறமாக காணப்பட்டது. மரியானாவுடன் இன்னும் வேறு இரு சகோதரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு இவரது நாட்கள் நகர்ந்துசெல்லும் வேளையில் கிஸ்தவர்களுக்கு எதிராக ஒரு புரட்சி ஏற்பட்டது. இதனால் துறவற சபைகள் மடங்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. இதன்பின்னர் இறைபராமரிப்புக் கன்னியர் மடத்திற்கு அழைக்கப்பட்டார். அங்கு அவர்களது பயிற்சிக் காலங்களில் அழைக்கப்பட்ட மூவருக்கும் பெயர் மாற்றம் செய்யும்வேளையில் மரியானா அருட்சகோதரி பேணாடா என அழைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து ஆசிரியர் பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் அருட்தந்தை தியோ டோசியஸ் அடிகளாரால் ஒரு புதிய சபை உருவாக்கப்பட்டது. இச்சபைக்கு அருட்சகோதரி பேணாடாவை சபைத் தலைவியாக நியமித்தார். அப்போது அருட்சகோதரி பேணாடாவுக்கு வயது 21 ஆகும். மிகவும் இளம் துடிப்புள்ள வயதில் பொறுப்புக்களை ஏற்று வழிநடத்தும் பணிக்கு அருட்சகோதரி பேணாடாவை இறைவன் அழைத்தார். தனது பணியை செவ்வனே ஆற்றிக்கொண்டிருக்கும் வேளையில் புதிதாக சகோதரிகள் வந்து சேர்ந்தனர். அப்போது அருட்தந்தை தியோடோசியஸ் பேணாடாவுக்கு எழுதிய கடிதத்தில் தன்னால் எவ்வித உதவிகளும் செய்யமுடியாது என்று குறிப்பிட்டிருந்தார். ஆரம்பத்தில் கலங்கிய பேணாடா இறை வல்லமையால் தனது பணியை தொடர்ந்து ஆற்றினார். ஆயினும் கஸ்டங்கள் ஏற்படத்தான் செய்தன. உணவு இடவசதிகள் இன்றித் தவித்தார். ஆனால் இறைவன் அவர்களை கரம் பிடித்து வழிநடத்தினார். இவ்வாறு தொடருகின்ற வேளையில் அருட்சகோதரி பெலிசியானா தங்களது துறவற சபையில் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக்கொண்டு தமது சபையை "திருச்சிலுவை கன்னியர்" என அழைக்க ஆலோசனை கூறினார். அதற்கு எல்லோரும் இணங்கி அருட்சகோதரி பேணாடாவை சபையின் தலைவியாக நியமித்தனர். பல கஸ்டங்கள் மத்தியிலும் சபையைக் கொண்டு நடத்தியபோது பல யுவதிகளும் இணைந்து பணியாற்றினர்.

அருட்சகோதரி பேணாடா வாழ்வில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. பணவசதி, இடவசதி இன்றியும் பசி பட்டினி நோய் எனப் பலவாறு தாக்கப்பட்டு என்ன செய்வதென்று தடுமாறும் வேளையில் எப்போதுமே இறைவனில் தங்கி வாழ்ந்தார். மனமுடைந்துபோகாமல் ஒருதாய்போல் இருந்து எல்லாச் சகோதரிகளையும் நன்கு புரிந்து நல்ல ஆன்மீக வழிகாட்டியாக விளங்கினார். பணியின் நிமித்தம் அருட்சகோதரி பேணாடாவுடன் கூட இருந்த சகோதரிகளும் கடும் நோய்க்கு உள்ளானார்கள். இளம் கன்னியர்கள் தொடர்ச்சியாக இறக்கும் நிலை காணப்பட்டது. இவ்வாறான இழப்பிற்குக் காரணம் அவர்களது ஏழ்மையே ஆகும். பலவித சோகங்கள் எதிர்ப்புக்கள் வாழ்வில் வந்தபோதும் அவர்கள் மனம் உடைந்து போகவில்லை. சபையில் பல பிரச்சினைகள் இருந்தாலும் சபை வேகமாக வளந்தது. ஆரம்பத்தில் மூன்றுபேருடன் ஆரம்பித்த சபை படிப்படியாக வளர்ந்து வந்தது. அருட்தந்தை தியோடோசியஸ் பேணாடாவுடன் பல வேளைகளில் முரண்பட்டார். அவரின் உள்ளத்தை பாதிக்கக்கூடிய வகையில் சில செயற்பாடுகளில் ஈடுபட்டார். எல்லா அருட்சகோதரிகளும் தனக்கு கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்த்து பேணாடாவை பலவிடயங்களில் புண்படுத்தினார். ஆனால் அருட்சகோதரி பேணாடா எல்லாவற்றையும் பொறுத்து இறைசித்தத்தின்படியே தன் சபையை வழிநடத்தினார். எவ்வளவு முரண்பாடு வந்தாலும் இரக்க குணம் படைத்தவர். அருட்தந்தை தியோடோசியஸ் நோய்யுற்ற வேளையில் ஒரு பெண்மைக்குரிய தன்மையுடன் அவரை நன்கு கவனித்தார். சுகம் நீங்கிய பின்பும் அவருடன் நல்லுறவு கொண்டார். பின்பு அருட்தந்தை தியோடோசியஸ் பேணாடாவை நல்லமுறையில் புரிந்துகொள்ள முடிந்தது. ஏனென்றால் அவர் பொறுமையும் எவரையும் புண்படுத்தாத சுபாவமும் கொண்டவர். பிரச்சினைகளால் பிரிந்துவிடாமல் என்றும் நல்ல உறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அருட்சகோதரி பேணாடாவின் உடல்நிலை தளர்வடைகின்ற போதும் பொறுப்புக்களிலிருந்து தவறியது இல்லை. 1844ம் ஆண்டு சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1863வரை 22 தடவைகள் கல்லறைக்குச் சென்றுவந்தார். காரணம் 22 அருட்சகோதரிகள் இறந்தார்கள். இதில் 18பேர் 30 வயதுக்குட்பட்ட இளம் கன்னியர்கள். சோகங்களும் இழப்புக்களும் வாழ்வில் வந்து மோதினாலும் தன்னுடைய சகோதரிகள் பணியாற்றுகின்ற இடங்களுக்கு நடந்து பிரயாணங்களை மேற்கொண்டு கடுமையான பள்ளத்தாக்குகள் மேடுகள் எல்லாவற்றையும் தாண்டி தனது சகோதரிகளை சந்தித்து உற்சாகப்படுத்தினார்.

கடைசியில் கடும் நோய்க்கு ஆளானார். வலது கையில் ஏற்பட்ட பெரிய புண்ணின் வருத்தத்தால் துன்பப்பட்ட வேளையில்கூட முறைப்பாடு எதுவும் அவரின் வாயில் வந்ததில்லை. எல்லாவற்றையும் முழுமையாக யேசுவில் தங்கி வாழ்ந்து ஆறுதல் அடைந்தார் என கூறினார்.

அன்னையின் ஒவ்வொரு நற்குணங்களும் இறைவனில் வைத்திருந்த ஆழமான நம்பிக்கையை வெளிக்காட்டுகின்றன. வாழ்வில் சத்தித்த சிலுவைகள் துன்பங்கள் எல்லாம் இறைவனில் தான் வைத்திருக்கும் நம்பிக்கை எனக் கூறியிருந்தார். வைத்தியர்களால் கைவிடப்பட்டு கடும் நோயினால் பாதிக்கப்பட்ட போதும்கூட தன்னுடைய சகோதரிகளை தவிக்க விடவில்லை தனக்குப் பதிலாக அலோசியாவை நியமித்தார்.

இந்தவேளையில் தனது பொறுப்பில் இருந்து ஆறுதல் அடைந்தார். தன்னை சந்திக்க வந்த அனைவரது நெற்றியிலும் சிலுவை அடையாளம் வரைந்து யேசுக்கிறிஸ்துவின் பாடுகள் மரணம் தியாகத்தின் மூலம் சிலுவைக்கு வெற்றி என்று ஆசி கூறி சிலுவை வரைந்தார். தனது மரணப்படுக்கையில்கூட தனக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை மன்னிக்கின்றார்.

அவரது குறிப்பில் "நான் ஒரு பாவி. என் ஆன்மாமேல் இரக்கமாயிரும்." என்று எழுதியிருந்தது. இவையெல்லாம் அன்னையின் பெருந்தன்மையையும் மன்னிக்கும் மனப்பக்குவத்தையும் படம்பிடித்து காட்டுகின்றது. 21 வயதில் துறவியாகி துடிப்புடன் பணியாற்றி பல புரட்சிகள் புயல்களுக்குள் சிக்குண்டு அலைமோதினாலும் என்றும் சோர்வடையாது 20 வருடகாலத்துக்குள் தன்னால் முடிந்த அளப்பரிய சேவையை எல்லோரும் வியக்கும் வகையில் ஆற்றிவிட்டு தனது 41 வது வயதில் 1863ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## பேராலய வைரவிழாவை முன்னிட்டு மன்னாரில் இடம்பெற்ற நாட்டுக்கூத்து

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் 60வது ஆண்டு நிறைவையொட்டிய வைரவிழா நிகழ்வுகளின் ஒரு பகுதியாக புனித செபஸ்தியார் வாழ்க்கை வரலாற்றைக்கொண்ட நாட்டுக்கூத்து நாடகம் கடந்த ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி அன்று மன்னார் பேரலாய வளாகத்தில் மேடையேற்றப்பட்டது.

கலாபூசணம் செ. மாசிலாமணி அவர்கள் நெறிப்படுத்திய இந்நாட்டுக்கூத்தில் பேராலய பங்கு மக்கள் பங்கேற்று சிறப்பாக நடித்திருந்தனர். பங்குத்தந்தை அருட்பணி. பெப்பி சோசை அடிகளார் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.













# யாழ். கொழும்புத்துறையில் புதிதாக எழுப்பப்பட்டுள்ள அ.ம.தி.களின் புனித யூஜின் டி மசனட் ஆலயம்



## புதிய ஆலயம்

அமலமரித்தியாகிகளின் இயக்குனர் தந்தை புனித யூஜின் டி மசனட் அவர்களின் பெயரில் புதிய ஆலயம் ஒன்று கொழும்புத்துறை (இவ்விடத்திற்கு கொலம்பகம் என்ற பெயரும் இருந்திருக்கின்றது) புனித வளனார் அமலமரித்தியாகிகளின் சிறிய குருமடத்தில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இப்புதிய ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்ற அதே இடத்தில் 1884களில் புனித சூசையப்பர் அனாதை (Ophanage) இல்லத்திற்கான சிற்றாலயம் புனித சூசையப்பர் பெயரில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வனாதை இல்லம் மூடப்பட்டபின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிற்றாலயமாகவும் இந்த ஆலயம் இருந்ததாக அறியமுடிகின்றது.

பதினான்கு ஏக்கர் நிலத்தைக்கொண்ட புனித சூசையப்பர் அனாதை இல்லமாக விளங்கிய இடத்தின் ஒரு பகுதி பின்னர் கொழும்புத்துறை செயின்ற் யோசவ் வித்தியாலயமாக இயங்கிவருகின்றது. மற்றைய பகுதி கொலம்பகம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாக இயங்கியிருக்கின்றது. பாடசாலையைத் தவிர்ந்த ஏனைய பெரும்பகுதி தற்போது புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியாகவும், ஒரு சிறு பகுதி அமலமரித்தியாகிகளின் சிறிய குருமடமாகவும் திகழ்கின்றது.

இச்சூசையப்பர் ஆலயம் வளன்புர மக்களுக்குரிய ஆலயமாகவும் திகழ்ந்திருக்கின்றது. அவ்வகையில் இவ்வாலயம் பாசையூர் பங்கின் கிளைப்பங்காக இருந்துவந்துள்ளது. அந்தவகையில் வளன்புர மக்களின் ஆலயமாகவும், 1970ஆம் ஆண்டிலிருந்து அமலமரித்தியாகிகளின் சிறிய குருமட மாணவர்களின் வழிபாட்டுத் தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டு குருமட மாணவர்களால் பராமரிக்கப்பட்டும் வந்துள்ளது. அமலமரித்தியாகிகளின் பயன்பாட்டிற்காக இவ்வாலயம் தேவைப்பட்டதால் அவ்வாலயத்தை அமல மரித்தியாகிகளுக்குக் கையளித்து அவ்வாலயத்திற்குப் பதிலாக வளம்புர மக்களின் வழிபாட்டிற்காக வளம்புர கிராமத்திலேயே அமலமரித் தியாகிகளின் ஆதரவுடன் 2011ஆம் ஆண்டு தூய வளனாரின் பெயரிலேயே ஓர் அழகிய ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. புனித சூசையப்பர் பழைய ஆலயம் இடிக்கப்பட்டு அவ்விடத்தில் புதிதாக அமலமரித்தியாகிகளால் அமைக்கப்பட்ட ஆலயம் புனித யூஜினின் பெயரில் விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## யார் இந்த அமலமரித்தியாகிகள்?

'குருசு போட்ட சுவாமிமார்', 'ஓ.எம்.ஐ. (OMI) சுவாமிமார்', 'ஒப்லேற்ஸ்' (Oblates)'அமல மரித்தியாகிகள்' என்றெல்லாம் அழைக்கப்படுகின்றவர்கள் ஓரே குழுமத்தைச் சேர்ந்தவர்களே. இவர்கள் நம் மண்ணில் இற்றைக்கு 165 ஆண்டுகளுக்கு மேலாக மக்களால் நன்கு அறியப்பட்ட துறவற குழுமத்தினராக விளங்குபவர்கள். சம்பத்திரிசியார் கல்லூரியின் அதிபரும் யாழ். பொது நூலகத்தை அமைக்கப் பெரும் பங்காற்றியவருமான லோங் அடிகள், பத்திரிசியார் கல்லூரியில் அதிபராய் இருந்த மத்தியுஸ் அடிகள், இலங்கையின் முதல் கர்தினால் யோசப் கூரே, முன்னாள் யாழ். ஆயர்களான சமேரியா, யூலன், எமிலியானுஸ்பிள்ளை போன்றோர், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள், வன்னிப் பிரதேசங்களில் மிக நீண்ட காலமாகப் பணியாற்றிய கொண்சால்வேஸ் அடிகள், ஒம்லோ அடிகள், சேப்க்கா அடிகள் போன்றோர், இலங்கையின் கல்வித்துறைக்குப் பெரும் பங்காற்றிய ஆயர் பொன்ஜீன், வழிபாட்டுப் பாடல்களையும் இராகங்களையும் ஆக்கித்தந்த அருட்தந்தை அதிரியான் யோசப், அருட்தந்தை மார்சலின் ஜெயக்கொடி ஆகியோர், மறையுரைஞர்களான சற். என். குரூஸ், பிரான்சிஸ் குலாஸ், அன்ரனைன் போன்றவர்கள் இலங்கையின் திருச்சபை வரலாற்றில் நன்கு அறியப்பட்ட அமலமரித்தியாகிகளின் சில முன்னோடிகள் எனலாம்.

## அமலமரித்தியாகிகளின் இயக்குனர்

அமல மரித்தியாகிகளின் துறவற குழுமமானது பிரான்சியப் புரட்சியின் பின்புலத்தில் உருவான ஒரு துறவற சபையாகும். 1782இல் பிரான்சின் தென்பகுதி எக்ஸ் நகரில் பிறந்த சாள்ஸ் யூஜீன் டி மசனட் என்பவர் ஒரு பிரபுத்துவ குடும்பத்தைச் சார்ந்தவர். பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் இயல்பாகவே பிரபுத்துவ அதிகாரப்போக்கு உடையவராக விளங்கினார். எனினும் ஏழைகள் மட்டில் இரக்கம் - பரிவு கொண்டவராகத் திகழ்ந்தார். இதனால், இவர் தன்னை சிறுவயதிலேயே ஏழைகளின் 'சேரிப் பிரபு'வாகக் அடையாளப்படுத்திக் கொண்டார்.

## யூஜினின் அகதிவாழ்வு அனுபவங்கள்

தமது 08ஆவது வயதில் பிரான்சிய புரட்சியின் காரணமாக 1790களில் தமது சொந்த நாட்டைவிட்டு அகதியாக இடம்பெயர்ந்து செல்கின்றார். பதினொரு (11) ஆண்டுகள் அந்தரித்த அகதி வாழ்க்கையில் ஐந்து (05) நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றார்.

இப்பதினொரு ஆண்டுகால இடம்பெயர்வுக் காலத்தின் தன் குடும்பத்தவர்கள் வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர யூஜினுக்னோ பிரிவுத்துயர், தனிமையின் தாக்கம், கல்வியைத் தொடர முடியாத சூழல், மறைந்த வாழ்வு, எதிர்காலம் பற்றிய ஏக்கம் போன்ற கசப்பான அனுபவங்களோடு அவர் தமது இளமைக் காலத்தைக் கழிக்கவேண்டியதாயிற்று. ஆயினும், இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்குச் சென்றதால் அந்நாடுகளின் மொழிகளையும் பண்பாடுகளையும் அறிந்து தெரிந்துகொண்டார். தனிமையான பொழுதுகளில் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக்கொண்டார்.

இடம்பெயர் காலங்களில் யூஜினின் இதயத்தில் இடம்பிடித்தவர்கள் வெனிஸ் நகரில் சந்தித்த துறவியான டொன் பார்ட்ரொலோவும் சீமாட்டியான கனிசாரோவும் ஆவார்கள். இவர்களின் அன்பும் ஆதரவும் வழிநடத்துதலும் யூஜினின் இளமைக்கால வளர்ச்சியில் பெரும் துணைபுரிந்தன.

## யூஜின் குருவாக உருவாகியது

12.10.1808 அன்று குருத்துவக் கல்லூரியில் இணைந்து 1810ஆம் ஆண்டு திருத்தொண்டர் பட்டம் பெறுகின்றார். குருத்துவக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கும்போதே தியாக்கோனான யூஜின் குருத்துவக் கல்லூரியின் இயக்குனராகின்றார். 1811ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 21ஆம் நாள் அன்று யூஜின் டி மசனெட் அருள்பணியாளராக அருள்பொழிவு பெறுகின்றார். ஏழைகளுக்காகவும் இளையோருக்காகவும் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றவும் அவர்களுக்காக வாழவும் தலைப்படுகின்றார்.

தாம் பெற்றுக்கொண்ட 'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க' என்ற அருள்கொடையை ஏற்றுக்கொண்டு வாழவிரும்பிய அருள்பணியாளர்களைத் தம்முடன் இணைத்துக்கொள்கின்றார். 'புறவான்சின் மறைபரப்பாளர்கள்' என 1816ஆம் ஆண்டு தைத்திங்கள் 16ஆம் நாள் ஆரம்பித்த துறவற சபையினை 'அமலமரியின் மறைபரப்பாளர்கள்' என வளர்த்தெடுக்கின்றார். திருத்தந்தை பனிரெண்டாம் லியோவிடமிருந்து துறவறசபையின் சட்ட ஒழுங்குக்கான அங்கீகாரத்தை 1826ஆம் ஆண்டு மாசித்திங்கள் 17ஆம் நாள் பெற்றுக்கொள்கின்றார். இந்நிலையில் அமலமரித்தியாகிகள் பிரான்ஸ் நாட்டில் தழைக்கத் தொடங்குகின்றார்கள்.

அருள்தந்தை யூஜின் டி மசனெட் 14.10.1832 அன்று ஆயராக அபிசேகம் பெறுகின்றார். தொடர்ந்து பிரான்ஸ் நாட்டின் மார்சேய் மறைமாவட்ட ஆயரான யூஜின் பலதரப்பட்ட பணிகளை ஆற்றுகின்றார். அமலமரித்தியாகிகள் சபையினரும் பிரான்சிலிருந்து ஏனைய நாடுகளுக்கு மறைபரப்புப் பணிகளை ஆற்றத் தொடங்குகின்றார்கள்.

## அமலமரித்தியாகிகளின் அருட்கொடை

'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க' என்ற அருட்கொடையை ஏற்று புனித யூஜினின் வழியில் திருச்சபையில் - உலகில் 'புதிய முகங்களோடு வாழும் ஏழைகள் - நலிவுற்றவர்கள்' மத்தியில் பலதரப்பட்ட பணிகளை நான்காயிரத்தி நானூற்றி நாற்பது (4440) அமலமரித்தியாகிகள் (உருவாக்கத்தில் உள்ளவர்கள் உட்பட) உலகெங்கும் எழுபது (70) நாடுகளில் இன்று ஆற்றிவருகின்றார்கள். மறையுரைப்பணி, மகா ஞான ஒடுக்கம் - தியானங்கள் நடத்துதல் போன்ற நற்செய்தி அறிவிப்புப் பணி; பாடசாலைகள், குருமடங்கள், கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் கற்பித்தல் பணி; மருத்துவமனை, கல்வியியல் கல்லூரி, சிறைச்சாலை, புலம்பெயர்ந்த மக்கள், துறவற சபையினர் ஆகியவற்றில் ஆன்மகுரு வழிகாட்டுதல் பணி; உளவளத்துணை, மதுபோதையிலிருந்து மறுவாழ்வு, குருத்துவ உருவாக்கம், பங்குத்தளம், மனிதநேய - சமூகப் பணிகள், நீதி - சமாதானப் பணிகள், ஆன்மீக அறிவியல் மையங்கள், வெளிநாட்டு மறைபோதம், பல்சமய உரையாடல், சிறுவர் இளையோர் வழிகாட்டல், கலைப்பணி போன்ற பலதரப்பட்ட பணிகளை இன்றைய உலகின் தேவைகருதி அமலமரித்தியாகிகள் ஆற்றிவருகின்றார்கள்.

## நிறைவுரை

அமலமரித்தியாகிகள் துறவறசபை ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகளை 2016ஆம் ஆண்டில் நிறைவுசெய்யவிருக்கும் நிலையில் யாழ். மாகாண நூற்றியிருபது (உருவாக்கத்தில் உள்ளவர்கள் உட்பட) அமலமரித்தியாகிகளின் உருவாக்கத்தின் - பணியின் - வாழ்வின் மையமாகத் திகழும் கொழும்புத்துறையில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய ஆலயத்திற்கு தங்கள் சபைக்கு உருக்கொடுத்த – உயிர்கொடுத்த தம் இயக்குனர் தந்தை புனித யூஜினின் பெயரை வைத்திருப்பது ஆழ்ந்த அர்த்தத்தை அளிப்பதாகவே அமைந்திருக்கின்றது.

புனித யூஜின் டி மசனெட்டின் பெயரில் அமைந்த புதிய ஆலயத் திறப்புவிழா அமலமரித்தியாகிகளின் பாதுகாவலியாக விளங்கும் அமல அன்னையின் திருநாளான மார்கழித்திங்கள் 08ஆம் நாள் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

**- அருள்திரு. செ. அன்புராசா, அமதி**
**அதிபர், அ.ம.தி. சிறிய குருமடம்,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

# குருத்துவ பொன்விழாக் காணும் தோமஸ் ஆண்டகை

இ.அ. அமலரட்ணம் ,
தூயமரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.

"ஆண்டவர் தாம் திருப்பொழிவு செய்தவருக்கு வெற்றி தருகிறார். தமது தூய வானத்திலிருந்து அவருக்கு பதில் அளிக்கிறார். வெற்றியளிக்கும் தமது வலக்கையின் ஆற்றலைக் காட்டுகிறார்." (தி.பா 20: 6)

ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் நிறைவுக்கும் வெற்றிக்கும் பின்னால் பலருடைய ஒத்துழைப்பும், வழிகாட்டலும் இருந்தாலும் துறவற வாழ்விலும் இறையாட்சிப் பணியிலும் ஆயராகவும் குருவாகவும் 50 வருடங்கள் காத்திரமான காலத்தை நிறைவு செய்வது என்பது இறைவனின் உடனிருப்போடுகூடிய அருட்பொழிவும் கொடையுமாகும். இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க இவ்வுலகம்சார் அனைத்தையும் புறந்தள்ளி பல்வேறுவிதமான சோதனைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து 50 வருட இறையரசுப் பணியை எமது அன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய யாழ் ஆயர் மேதகு இம்மனுவேல் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் நிறைவுசெய்துள்ளார். இதற்குக் காரணம் மேற்குறிப்பிட்ட இறைவார்த்தையின் (தி.பா. 20 : 6) வல்லமையே காரணம் ஆகும். இவருடைய 50 வருட கடினமான உழைப்பினூடாக இவர் ஆற்றிய காத்திரமான பணிகளுக்காக இவரை வாழ்த்தி இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

## பிறப்பும் கல்வியும் குருமட வாழ்வும்

மேதகு ஆண்டகை அவர்கள் ஆழமான விசுவாசமும், உறுதியான நம்பிக்கையும், சாட்சிய வாழ்வும் நிறைந்த ஊர்காவற்றுறைப் பங்குத் திருச்சபையைச் சேர்ந்த சவரிமுத்து வரப்பிரகாசம் இம்மானுவேல் - தோமஸ் சவரியாச்சி தம்பதிகளுக்கு அன்பு மகனாக 1938 ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார். 1953ம் ஆண்டு புனித மாட்டீனர் குருமடத்தில் இணைந்து ஆரம்ப உருவாக்கம் பெற்றபின் கண்டி தேசிய குருமடத்தில் குருத்துவக் கல்வியை நிறைவுசெய்து 1936ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி முன்னாள் யாழ் ஆயர் அமரர் ஜேறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களால் குருவாக அருட்பொழிவு பெற்றார்.

## குருத்துவப் பணி

குருவாக அருட்பொழிவு பெற்றபின் யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாகவும், நல்லூர், பெரியவிளான், நானாட்டான், வங்காலை போன்ற பங்குகளிலும் நித்திய குருவாம் ஆண்டவன் இயேசுவின் வழிநின்று சிறப்பாகப் பணியாற்றியதோடு 1973இல் மறைக்கல்வி நிலைய இயக்குனராகப் பணியாற்றிய காலங்களில் இலங்கையின் கல்விக்கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப கல்விசார் அதிகாரங்களோடு கலந்துரையாடி புதிய நோக்குகளுக்கேற்ப மறைக்கல்விப் பாடத்திட்டம், பாடநூல்கள் மற்றும் வலுவூட்டல் பயிற்சிகளை அறிமுகப்படுத்தினார். ஆசிரிய கலாசாலை ஆசிரியம், ஆன்மீகம் வாழ்விலும், பணிகளிலும், சிறப்பாக வழிநடத்தினர்.

## ஆயத்துவப் பணி

1981ஆம் ஆண்டு விவிலிய முனைவர் பட்டத்திற்காக ஊர்பான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போது 24-01-1981 அன்று மன்னார் ஆயராக நியமனம் பெற்ற ஆண்டகை அவர்கள் 30-07-1981 அன்று இலங்கையின் அனைத்து மக்களும் ஒன்றுகூடுகின்ற யாத்திரைஸ்தலமான மருதமடுத் திருத்தலத்தில் ஆயராக அருட்பொழிவு பெற்றபின் 11 ஆண்டுகள் சவால்களும், சோதனைகளும் நிறைந்த மன்னார் மறைமாவட்டத்தை ஞானத்தோடு வழிநடத்திநின்றார். 1992ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை யாழ் மறை மாவட்டத்தின் ஆயராக கிறிஸ்துவின் நல்லாயனுக்குரிய பண்புகளோடும் பரிவோடும் வழிநடத்தியபின் தனது 75ஆவது அகவையில் ஓய்வு நிலைக்கு விண்ணப்பித்து யாழ் மறைமாவட்டத்தின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்காக புதிய் ஆயரின் தெரிவுக்காகக் காத்திருக்கின்றார்.

## துன்பத்திலும் நம்பிக்கை தளராதவர்

ஆயர் அவர்கள் தன்னுடைய தனிப்பட்ட வாழ்விலும் திருச்சபையின் பணி வாழ்விலும் எவ்வளவோ பெருந்துன்பங்களைச் சந்தித்தும் நம்பிக்கையில் தோற்றுப் போகாமல் இறைத்திட்டம் என்று எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு சாட்சிய வாழ்வு வாழ்ந்தவர். புகையிரத விபத்தில் தனது அன்புத் தாயையும் சகோதரியையும் இழந்து நின்ற வேளையிலும், மன்னார் மறைமாவட்டத்தில் அருட்பணி மேரி பஸ்ரியன் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட சந்தர்பத்திலும், யாழ் மறைமாவட்டத்தில் அருட்பணி M.X. கருணாரட்ணம் படுகொலை செய்யப்பட்டபோதும், அருட்பணி ஜிம்பிறவுண் அருட்பணி மேரி யோசப் ஆகியோர் காணாமல் போன சந்தர்பங்களிலும் சோர்ந்து போகாமல் துணிவோடு அதை எதிர்கொண்டு குரல் கொடுத்தவர்.

## பரிவிரக்கமும் சமாதான வேட்கையும் கொண்டவர்

ஆண்டவர் இயேசு எவ்வாறு பரிவிரக்கத்தோடு மந்தைகளை அன்பு செய்தாரோ அதுபோல ஆயர் அவர்களும் தன்னுடைய மக்களை நிறைவாக இரக்கத்தோடு அன்பு செய்தார். எமது மண்ணில் இடம்பெற்ற யுத்த சூழமைவால் பாதிக்கப்பட்டு துன்புற்ற மக்களுக்கு ஆறுதலாகவும் துணிவாகவும் இருந்தார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# புனித டிலாசால் சபையின் மறைசாட்சிகள் நேற்றும் இன்றும் நாளையும்

ஆசிரியர் திருமதி. ஏ. ஏ. அன்ரன் டபரேரா, லசாலியன் குழும உறுப்பினர்

மன்னார் மாவட்டத்தில் புனித டிலாசால் அருட்சகோதரர்களால் நிர்வகிக்கப்படும் ஐந்து குழுமப் பாடசாலைகளின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வானது இணைப்பாளர் அருட்சகோதரர் யோகன் சொய்சா தலைமையில் கடந்த 16.10.2013 அன்று காலை 9.00 மணிக்கு மன்/ நானாட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட 75 ஆசிரியர்களும் 30 மாணவர்களும் கலந்து பயன்பெற்றார்கள்.

இந்நிகழ்வின் வளவாளர்களாக அருட்சகோதரர் ஹென்றி திசநாயக்கா (முகாமையாளர், இளைஞர் நகரம், ராகம) அவர்களும், அருட்சகோதரர் J. ஸ்ரனிஸ்லோஸ் (அதிபர் மன்/ பற்றிமா மத்திய மகாவித்தியாலயம்) அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அருட்சகோதரர் ஹென்றி திசநாயக்கா அவர்களால் புனித டிலாசால் சபையில் வேதசாட்சிகள் எவ்வாறு உருவாகினார்கள் என்றும் அச்சபையின் முதல் வேதசாட்சி அருட்சகோதரர் சாலமோன் தொடக்கம் இன்றுவரை தம் உயிரை மறைக்காகக் கொடுத்த வேதசாட்சிகளின் சரித்திரக் கதையினை உணர்வுபூர்வமாக எடுத்துக்கூறி இயேசுக்கிறிஸ்துவுடன் சபையின் ஸ்தாபகர் புனித டிலாசாலினை ஒப்பிட்டு இச்சபையில் இற்றைவரை 200 அருட்சகோதரர்கள் வேதசாட்சிகளாக மரித்துள்ளார்கள் என்றும் இவர்களில் மிக குறைந்த வயதுடைய வேதசாட்சி 19 வயதுடையவராயும், வயதுகூடிய வேதசாட்சி 74 வயதுடையவராகவும் உள்ளனர் என்றும் கூறினார்.

மேலும் ஆசிரியர்களாக இறைவனால் அழைக்கப்பட்ட நாம் இன்றும் வேதசாட்சி வாழ்வை வாழ்வதற்காக அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், எமது வாழ்வில் வரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டும் எனவும் கிறிஸ்து கல்வாரிப்பீடத்தில் மக்களை மீட்பதற்காக தன்னை பலியாக்கியதைப்போல ஆசிரியர்களாகிய நாமும் தினமும் வகுப்பறைப் பீடத்தில் எம்மை பலியாக்கி மாணவர் சமூகத்திற்கு எடுத்துக்காட்டான வேதசாட்சிவாழ்வு வாழவேண்டும் எனவும் கூறினார்.

**அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட டிலாசால் அருட்சகோதரர்கள்**

1936-1939 வரையான காலப்பகுதியில் ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுக் கலவரம் நடைபெற்றபோது இக்கலவரத்தால் கிறிஸ்தவ சமயம் மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டது. அங்கு பணியாற்றிய 13 ஆயர்கள் 4,171 குருக்கள் 2,648 துறவிகள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பல்வேறுவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாகினர்.

இவர்கள் இறைவிசுவாசத்திற்காகத் தம் உயிரைத் துறந்தார்கள். இவ்வேளை ஸ்பெயின் நாட்டில் சேவையாற்றிய 1,087 டிலாசால் அருட்சகோதரர்களுள் 165 பேர்வரை இறைவிசுவாசத்திற்காக அந்நாட்டில் வேதசாட்சியாக மரித்தார்கள். இவ்வாறு வேதசாட்சியாக மரித்த பலரும் ஏறக்குறைய 1,000 பேர் வரை திருச்சபை அருளாளர் நிலைக்கு உயர்த்தி உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் ஸ்பெயின் நாட்டில் ரெறகோன் எனும் பிரதேசத்தில் மேற்படிக் கலவரத்தில் இறந்த 522 வேதசாட்சிகளுக்கு கடந்த 13.10.2013ம் திகதி அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வத்திக்கான் நகரில் அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டது. இவ் 522 அருளாளர்களுள் 74 டிலாசால் அருட்சகோதரர்களும் அடங்குகின்றனர். இந்நிகழ்வை டிலாசால் அருட்சகோதரர்கள் இறைவனுக்கு நன்றிகூறி பல இடங்களிலும் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்து தம் மகிழ்வை ஏனைய மக்களுடனும் பகிர்ந்து கொண்டார்கள்.



இறைவன் டிலாசால் அருட்சகோதரர்களை ஆசீர்வதிக்கிறார் என்றும் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட இந்த அருட்சகோதரர்கள் மற்றைய அருட்சகோதரர்களுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் ஏனையவர்களுக்காகவும் இறைவனிடம் பரிந்துபேசுகிறார்கள். நாமும் என்றும் எமது வேண்டுதல்களை அவர்கள் ஊடாக இறைவனிடம் கேட்டுப் பெற்று அச்சகோதரர்களை புனித நிலைக்கு உயர்த்த செபிப்போம் என்று கூறி தனது கருத்தை நிறைவுசெய்தார்.

தொடர்ந்து அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் மாணவர்களுக்கு விசேட செய்தி ஒன்றினை வழங்கினார். மாணவப் பருவத்தினரின் வாழ்க்கைமுறை பற்றியும் இன்றைய நவீன உலகிற்கு டிலாசால் அருட்சகோதரர்களின் சேவை அதிகம் தேவையாக உள்ளது எனவும் அதில் பலர் இணைந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

நிறைவில் அருட்பணி. தமிழ்நேசன் அடிகள் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அவர் தம் மறையுரையில், டிலாசால் அருட்சகோதரர்கள் திருச்சபைக்கு தமது சேவையால் மாபெரும் பங்களிப்புச் செய்து வருகிறார்கள் என்று கூறினார். இன்று திருச்சபையில் டிலாசால் சபையில் உதித்த 12 புனிதர்களும் 151 அருளாளர்களும் 200 வேதசாட்சிகளும் உள்ளனர் என்றுகூறி இச்சபை தொடர்ந்தும் வளரவேண்டும் என்றும் இப்புனிதர்கள் இச்சபைக்காக இறைவனிடம் பரிந்துபேசுவார்கள் என்றும் இந்நவீன யுகத்தில் மாணவர்களை மீட்பதற்காக ஆசிரியர்கள் எவ்வாறு வேதசாட்சிகளாக அன்றாடம் மாற வேண்டும் என்றும் அன்றைய இறைவாசக ஒளியில் மறையுரைக்கு விளக்கந்தந்து திருப்பலி நிறைவேற்றினார்.

தொடர்ந்து மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஒகஸ்ரின் அவர்களால் அனைவருக்கும் நன்றி கூறப்பட்டது. பின் மதிய உணவுடன் பி. ப. 3.00 மணிக்கு நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவுற்றன.

# இறைவன் தரும் உணவு


திரு. எஸ். மாட்டின் டயஸ், பேசாலை

உலகில் தோன்றியுள்ள எல்லாச் ஜீவராசிகளுக்கும் உணவு அத்தியாவசியத் தேவையாகும். எந்த உயிரும் உணவின்றி நீண்ட நாட்கள் உயிர் வாழ முடியாது.

படைப்பின் மகத்துவம் என்னவென்றால் இறைவன் ஏற்படுத்தித் தந்திருக்கும் உணவுச் சங்கிலிதான். புல் - பசுவுக்கு உணவாகிறது – பசுவின் பால் மனிதனுக்கு உணவாகிறது மனிதன் வாழ்ந்து முடித்து மண்ணிற்கு இரையாகின்றான். இப்படி பல உணவுச் சங்கிலிகள் உள்ளன என்பது உயிரியல் மாணவர்களுக்குத் தெரியும்.

இறைவன் ஆதியிலே மனிதனைப் படைப்பதற்கு முன்பு அவனுக்கு உணவாகும் சகலத்தையும் படைத்திருந்தார். 6ம் நாளில் மனிதனைப் படைத்திருந்தார். "அப்போது கடவுள் மண்ணுலகெங்கும் உள்ள விதைதரும் செடிகள், பழமரங்கள் அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன். இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டு விலங்குகள், வானத்துப் பறவைகள் நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன் என்றார்" (தொ.நு 1: 29-30).

மனிதனைப் படைத்த கடவுள் அவனது முதல் தேவை இன்னது என்று தெரிந்து, "உனக்காக நான் இத்தனையையும் படைத்துத் தந்திருக்கின்றேன்" என்று கூறுகின்றார். அவர் தன்னை உணவு அளிக்கும் கடவுளாக அடையாளப்படுத்துகின்றார். அன்று நமது முதற் பெற்றோருக்கு உணவளிக்கும் கடவுளாக இருந்தார் என்றால் இன்று நமக்கும் உணவளிப்பவராக இருப்பவர் கடவுள்தான்.



ஆதாமும் ஏவாளும் கடவுளின் கட்டளையைமீறிப் பாவம் செய்தார்கள். கடவுள் அவர்கள்முன் தோன்றினார். அவர்களுக்கு அவர் வாக்களித்த உணவை மறுக்கவில்லை. ஆனால் "உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது. உன் வாழ்நாள் எல்லாம் வருந்தி அதன் பயனை நீ உழைத்து உண்பாய் (தொ.நூல் 3:17). நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்பாய் (தொ.நூல்3:19). நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்றார். அவர் உணவை மனிதனுக்கு மறுக்கவில்லை. ஆனால் அவனது கீழ்ப்படியாமைக்காக அவனை வருந்தி உழைக்கச் சொல்கிறார்.

கடவுள்தான் நமக்கு உணவளிக்கிறார் என்பதற்கு புதிய ஏற்பாட்டிலும் பல சான்றுகளைக் காண முடிகிறது. மத்தேயு 6: 26இல் யேசு சொல்கிறார், "வானத்துப் பறவைகளை நோக்குங்கள். அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்துவைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றிற்கு உணவளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா?" என்கிறார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# ஆரோக்கியமான உறவைக் கட்டியெழுப்புவோம்

தே. கு. தேன்மொழி,
(மாதிரிக் கிராமம், நானாட்டான்)
உளவியற்துறை, 2ம் வருடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

"சிறகை இழந்த பறவையால் வானில் பறக்க இயலாது, உறவை இழந்த மனிதனால் வாழ்வில் சிறக்க இயலாது". உறவு என்பது மனித வாழ்வில் இன்றியமையாததாகும். ஓர் மனிதன் தன் வாழ்நாளில் பல்வேறுவிதமான உறவுகளுடன் ஒன்றிணைந்து வாழவேண்டியுள்ளது. பெற்றோர் பிள்ளைகள் உறவு, கணவன் மனைவி உறவு, உறவினர்களுக்குக்கு இடையிலான உறவு, நண்பர்களுக்கிடையிலான உறவு, அயல் சமூகத்தினருடனான உறவு, ஆசிரிய மாணவ உறவு, காதலர்களுக்கு இடையிலான உறவு என பலதரப்பட்ட உறவுமுறைகள் எம்மிடையே காணப்படுகின்றன. இந்த உறவுகளுக்கிடையேயான நல்லுறவைக் கட்டியெழுப்புதல் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

நல்லுறவு என்னும்போது அது மனிதர்களுக்கிடையான உண்மையான அக்கறை, பிறர்நலம், நம்பகத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் உருவாகும் ஒரு பிணைப்பாகும். மனிதர்கள் ஒவ்வொருவரும் தனக்கு ஆதரவாக இருக்க, தன்னைப் புரிந்துகொள்ள தனக்கென உறவுகள் இருக்கவேண்டும் என்பதையே விரும்புகின்றனர். எனவே ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்ற, எமது ஆரோக்கியமான சமூக உறவைக் கட்டியெழுப்ப நாம் சில வழிவகைகளைப் பின்பற்றவேண்டியுள்ளது.

சமூக உறவு என்னும்போது குடும்ப உறவு அதில் முக்கியமானதாகும். குடும்பத்தில் கணவன் மனைவிக்கு இடையில் சிறந்த புரிந்துணர்வு இருக்கவேண்டும். பிரச்சினைகள் ஏற்படும்போது விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும். கணவன் மனைவிக்காகவும் மனைவி கணவனுக்காகவும் நேரம் ஒதுக்கி அன்புடன் பேசி உறவாட வேண்டும். நான் பெரியவன் - பெரியவள் என்ற அகந்தையைக் களைந்து சமத்துவத்துடன் வாழவேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவில் பிள்ளைகள் பெற்றோருக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். பெற்றோரது கடின உழைப்பிற்கேற்ப அவர்களது விருப்பு வெறுப்புக்களைப் புரிந்துகொண்டு அவற்றை நிறைவேற்றுபவர்களாக இருக்கவேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் உணர்வுகளை அறிந்து அவர்களுக்குரியவற்றைச் செய்துகொடுக்க வேண்டும். அதிக கட்டுப்பாடுகள் விதிப்பதைத் தவிர்த்து அவர்களோடு நேரத்தைச் செலவிட்டு அவர்களுக்கு நாளாந்தம் நடக்கும் சம்பவங்களைக் கேட்டு அறிந்து உரையாடி மகிழ்ச்சியான நிகழ்வுகளில் அவர்களோடு சேர்ந்து மகிழவும், துன்பம் ஏற்படுமாயின் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களை தட்டிக்கொடுக்கவும் வேண்டும். இவ்வாறாக குடும்ப உறவினை ஆரோக்கியமானதாக்க முடியும்.

உறவினர்களுக்கிடையேயான உறவுகளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவர்களின் வீடுகளில் நடக்கும் இன்பதுன்ப நிகழ்வுகளில் பங்குபற்ற வேண்டும். அவ்வாறு செயற்படுகையில் எல்லா உறவுகளையும் சந்தித்து அவர்களுடன் உறவாடி மகிழ்வதோடு உறவினர்களிற்கிடையேயான உறவு மேலும் வலுப்பெறும். தொலைவில் உள்ள உறவினர்களாயினும் அவர்களுடன் ஏதோவொரு முறையில் தொடர்பில் இருப்பது நல்லது.

அடுத்து அயலவருடனான உறவை மேம்படுத்த எமது அயலில் உள்ளவர்களோடு சாதி, சமய வேறுபாடின்றி அவர்களோடு மரியாதையுடன் நடக்கவேண்டும். இனிய இதமான சொற்களைப் பயன்படுத்திப் பேசவேண்டும். உறவுகளில் எல்லாவற்றிற்கும் மேற்பட்டதாக பலராலும் போற்றப்படும் நட்பு எனும் உறவில் நண்பர்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்கவேண்டும். ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும். ஒருவர் மற்றவரிடமுள்ள நல்ல பண்புகளைக் கண்டு பாராட்டவேண்டும். இவ்வாறாக நண்பர்கள் இருந்தால் சிறந்த உறுதியான அடித்தளமிடப்பட்ட நட்பை உருவாக்கமுடியும்.

மேலும் எல்லா உறவுகளுக்கும் பொதுவாக நல்லுறவை உருவாக்கும் சில வழிமுறைகளைப் பார்க்கும்போது எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுதல், அவரவர் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்தி மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நடத்தல், பிரச்சினைகள் ஏற்படும்போது தனது நிலையிலிருந்து இறங்கிவரத் துணிதல், கோபமாக இருக்கும்போது நிதானமாகவும் கவனமாகவும் வார்த்தைகளைப் பயன்படுத்தல், மன்னிப்பு கேட்கக்கூடிய மனப்பான்மையை வளர்த்தல், சுயநலமின்றி செயற்படல், உண்மைத்தன்மையுடன் உரையாடுதல், மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாத வகையில் உரையாடுதல், கருத்து முரண்பாடுகளைக் கலந்துரையாடித் தீர்த்தல், மற்றவர்களின் நிலையை விளங்கிக்கொள்ளுதல், கோபத்தை முகாமைசெய்யக் கற்றுக்கொள்ளல், மற்றவர்களின் தேவைகள், விருப்பு, வெறுப்புக்கள், சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு உரையாடுதல், மற்றவர்களின் மனப்பாங்குகளைப் புரிந்து நடந்துகொள்ளல், நம்முடன் உரையாடுபவர் எத்தகைய சந்தர்ப்பசூழல் பின்னணியில் இருந்து உரையாடுகின்றார் என்பதைப் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றைப் பின்பற்றலாம்.

இவ்வாறான ஆரோக்கியமான வழிமுறைகள் சமூகங்களிற்கிடையே சிறந்த நல்லுறவைக் கட்டியெழுப்ப வழிவகுக்கின்றது. எனவே உறவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக ஆரோக்கியமான சமூக உறவைக் கட்டியெழுப்ப ஒன்றுபட்டுச் செயற்படுவோம்.

## உலகத் திருச்சபைச் செய்திகள்

### கிறிஸ்மஸ் மின்குமிழ்களில் ஆஸி. குடும்பம் உலக சாதனை



அவுஸ்திரேலியக் குடும்பம் ஒன்று தமது வீட்டைச் சுற்றி 502,165 கிறிஸ்மஸ் மின்குழிழ்களைப் பொருத்தி புதிய உலக சாதனை படைத்துள்ளது.

குடியிருப்பு வீடொன்றில் அதிக கிறிஸ்மஸ் மின்குமிழ்களை பொருத்தியுள்ளதாக கெம்பராவில் வாழும் ரிச்சட்ஸ் குடும்பத்தினர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தனர். கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து மின்குமிழ்களை பொருத்தும் பணியை ஆரம்பித்ததாக குடும்பத் தலைவரான டேவிட் ரிச்சட்ஸ் குறிப்பிட்டார்.

எனினும் ரிச்சட்ஸ் குடும்பம் 2011 ஆம் ஆண்டிலும் இந்த உலக சாதனையை தக்கவைத்திருந்தபோதும் நியூயோர்க் குடும்பம் ஒன்று அதனை முறியடித்தது.

முன்னர் 2011 ஆம் ஆண்டு ரிச்சட்ஸ் குடும்பத்தினர் 331,038 கிறிஸ்மஸ் மின்குமிழ்களை பயன்படுத்தி சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அடிமைக் குழந்தைகளுக்காக உழைத்தவருக்கு அன்னை திரேசா விருது



சூடானிலும் உகண்டாவிலும் குழந்தைகள் அடிமைகளாக நடத்தப்படுவதற்கு எதிராகப் போராடிவரும் அமெரிக்கக் கிறிஸ்தவரான சாம் சில்ட்ர்ஸ் (Sam childers) அவர்களுக்கு இவ்வாண்டின் அன்னை திரேசா விருது வழங்கப்பட்டுள்ளது.

மும்பையில் இடம்பெற்ற விழாவில் இவ்விருதை ஹாமனி (Harmony) என்றழைக்கப்படும் அமைப்பிடமிருந்து பெற்றபோது உரையாற்றிய சில்டரஸ் அவர்கள், அன்னை திரேசாவின் பாதையை பின்பற்றும் தான், சூடானிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் துன்புறும் சிறார்களின் சார்பாக இவ்விருதை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார்.

தொடக்க காலத்தில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி, வன்முறைகளை ஆதரித்துவந்த இவர் மனம்மாறி கிறிஸ்தவத்தைத் தழுவிய பின்னர், கடந்த 13 ஆண்டுகளாக ஆபிரிக்காவில், குறிப்பாக சூடான் மற்றும் உகண்டாவில் அடிமைக் குழந்தைகளின் விடுதலைக்காக உழைத்து வருகிறார்.

## ஜே. ஆர். மயூறனின் கவிதை நூல் வெளியீடு









மன்னாரைச் சேர்ந்த திரு. ஜே. ஆர். மயூறனின் 'மனப்பூக்கள்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதி மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். இது மயூறனின் மூன்றாவது கவிதை நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் விலை ரூபா 200.00. மன்னார் கலையிருவியில் இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

## சிந்துஜாவின் இசை இறுவட்டு வெளியீடு



மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த செல்வி சிந்துஜா பாலச்சந்திரன் அவர்கள் வெளியிட்ட 'உருகிட வா' என்ற இசை இறுவட்டு வெளியீட்டு விழா கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவில் வடமாகாண சபை அமைச்சர் பா. டெனீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்த இறுவட்டின் விலை ரூபா 250.00. கலையருவியில் இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

## மன்னா விநியோகஸ்தர்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் அழைப்பு

மன்னா பத்திரிகை விநியோகப் பணிக்கு பங்கு மட்டங்களில் பொறுப்பாக இருப்பவர்களுக்கும், இன்னும் வலயம், கிராமம், துணைப் பங்குகள், அன்பியங்களில் மன்னா விநியோகப் பணியில் ஈடுபடுகின்றவர்களுக்குமான ஒன்றுகூடல் வவுனியாவிலும், மன்னாரிலும் இடம்பெறவுள்ளது. இவ்வொன்றுகூடலில் பங்கெடுக்குமாறு அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

**வவுனியா மறைக்கோட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு :**

இடம் : வவுனியா புனித அந்தோனியார் ஆலயம்
காலம் : 28.12.2013 (சனி)
நேரம் : காலை 10.00 மணி

**மன்னார், முருங்கன், மடு மறைக்கோட்டங்களைச் சார்ந்தவர்களுக்கு**

இடம் : கலையருவி, பெற்றா, மன்னார்
காலம் : 29.12.2013 (ஞாயிறு)
நேரம் : காலை 10.00 மணி

- 10 மன்னா பத்திரிகைக்குமேல் விநியோகம் செய்யும் அனைவரையும் இவ்வொன்றுகூடலுக்கு அழைத்து நிற்கின்றோம்.
- பத்திரிகைப் பணிபற்றிய சிறப்புரைகள் இடம்பெறும்.
- மன்னா பத்திரிகை விநியோகம் தொடர்பான அனுபவப் பகிர்வும், கலந்துரையாடலும் இடம்பெறும்.
- கலந்துகொள்பவர்களுக்கு மதிய விருந்தும், நினைவுச் சின்னமும் வழங்கப்படும்.
- அனைத்து விநியோகஸ்தர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு அனுப்ப முயற்சிக்கின்றோம். அப்படித் தனிப்பட்ட முறையில் உங்களுக்கான அழைப்பு கிடைக்காவிடினும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
- மன்னார் மறைமவாட்டத்திற்கு வெளியே மன்னா விநியோகப்பணியில் ஈடுபடும் விநியோகஸ்தர்களுக்கான நினைவுச் சின்னங்கள் அனுப்பிவைக்கப்படும்.
- பலவித சவால்கள், கஸ்ரங்கள் மத்தியில் மன்னா விநியோகப்பணியில் ஈடுபட்டுவரும் அனைத்து விநியோகஸ்தர்களுக்கும் எமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.
- உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவிக்கின்றோம்.

- பதிப்பாசிரியர், மன்னா பத்திரிகை

## புனித பேதுருவின் புனிதப் பொருட்கள் பொது மக்களின் பார்வைக்கு

கத்தோலிக்கத் திருச்சபையின் நம்பிக்கை ஆண்டு நிறைவுற்றிருக்கும் இவ்வேளையில் உரோமின் முதல் ஆயராகிய புனித பேதுருவின் புனிதப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. நற்செய்தியைப் புதிய வழியில் அறிவிப்பதை ஊக்குவிக்கும் திருப்பீட அவைத் தலைவர் பேராயர் றினோ விசிச்சலா (Rino Fisichella) இதற்குப் பொறுப்பாக இருந்தார்.

முதல் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை இக்காலத்தில் விசுவாசிகள் மத்தியில் மீண்டும் உயிர்பெறச் செய்யும் நோக்கத்தில் புனித பேதுருவின் புனிதப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

நம் ஆண்டவருக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த திருத்தூதர் புனித பேதுருவின் புனிதப் பொருட்கள் என இவை பாரம்பரியமாக நம்பப்பட்டு வருகின்றது. நம்பிக்கை ஆண்டை நிறைவுசெய்யும் உச்ச நிகழ்வாக முதன் முறையாக இவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களால் 2012ஆம் ஆண்டு ஐப்பசி 11ஆம் திகதி தொடங்கப்பட்ட நம்பிக்கை ஆண்டு, 2013ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதியன்று நிறைவடைந்தது என்றும் திருப்பீடத் தலைவர் கூறினார்.

## புனிதர்களின் பாதையில்

### புனித லூசியா (பிரகாசியம்மாள்)

(கன்னி, மறைசாட்சி - கி.பி. 304)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் கி.பி 304ஆம் ஆண்டில் சிராக்யுஸ் நகரில் மறைசாட்சியாக இறந்தவர். தியோக்ளீசியன் காலத்தில் இது நிகழ்ந்திருக்கலாம். திருச்சபை முழுவதிலும் இவரது பக்தி விரைவில் பரவியது. தொடக்கத் திருச்சபையிலிருந்தே இந்தப் பக்திக்கு ஆதாரம் கிடைத்துள்ளது. உரோமை திருவழிபாட்டு முறையில் அமைந்துள்ளவை என்று சொல்லப்படும் "பூசையின் மாறாத செபங்களின் தொகுப்பில்" இவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கி.பி 1204ஆம் ஆண்டிலிருந்து அவரது கல்லறை கண்டுபிடிக்கப்பட்டு புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது. தகுந்த ஆதாரம் இல்லாவிடினும் சில தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

லூசியாவின் தாய் இரத்தப் பெருக்கினால் வேதனைப் - பட்டார். இதனால் தாயும் மகளுமாகக் கட்டோனியாவுக்குத் திருப்பயணம் சென்றனர். புனித ஆகத்தாவின் ஆலயம் அங்குள்ளது. இருவரும் அங்கு உருக்கமாக மன்றாடினர். லூசியாவுக்கு அன்றிரவு கனவில் ஆகத்தா தோன்றினார். "உன் தாய்க்குத் தேவையான உடல் நலனைப் பெற்றுக்கொடுக்க உன் மன்றாட்டே போதுமானது. அப்படியிருக்க என்னிடம் ஏன் கேட்கிறாய்? உன் கற்பென்னும் லீலி மலரைக் கொண்டு இறைவனுக்கேற்ற இல்லிடம் தயாரித்துள்ளாய், உனது விசுவாசமே உனக்கு இப்போது உதவுவதற்குப் போதுமானது" என்றார். தாயும் நலம் அடைந்தார்.

பின்னர், தம் உடைமைகளை ஏழைகளுக்குத் தானமளிக்க லூசியா அத்தலத்திலேயே தாயிடம் விடைபெற்றார். மீண்டும் சிராக்யுசுக்குத் திரும்பினர். வாக்களித்ததுபோல் உடைமைகளைப் பகிர்ந்தளித்தார்.

ஓர் இளைஞன் இவரது கற்பின் வாக்குறுதியைக் கேட்டுக் கலங்கினான். பழிவாங்கும் எண்ணத்துடன், "இவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்" என்று உயர் அலுவலரிடம் முறையிட்டான். "உன்னை அடித்து நொறுக்கும்போது உனக்குப் பேசுவதற்குக்கூட நா எழாது" என்றான். "இறையடியாள் நான், சரியான சொற்களைச் சரியான நேரத்தில் சொல்லத் தூய ஆவியார் துணை நிற்பார். ஏனெனில் தூய வாழ்வு வாழ்வோர் யாவரும் தூய ஆவியின் ஆலயங்கள்" என்றார். "விலைமகளிர் நடுவே உன்னைத் தள்ளுவார்கள். அப்போது தூய ஆவி பறந்துவிடுவார்." என்றான். "எனது விருப்பத்திற்கு மாறாக நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் எனக்கு இரு மடங்கு வெற்றி உண்டு புரிந்துகொள்" என்றார்.

ஆவேசமடைந்தான் அலுவலன், ஆனால்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)




# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 26.

## கல்வியைத் தவ(ப)ம் ஆக்குங்கள்



The only thing that interferes with my learning is my education. ~ Albert Einstein



*சீடன், குருவைவிட மேற்பட்டவனா?*

நான்கு மாணவர்கள் இரவு முழுவதும் ஒரு கழியாட்ட நிகழ்வில் பங்கேற்றதால் பரீட்சைக்குச் சரியாகப் படிக்கவில்லை. அதனால், எப்படியேனும் பரீட்சையைப் பின்போடுவதே உகந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள். அதிபரிடம் வந்து, "சேர், இரவு ஒரு முக்கிய பிரயாணம் சென்று வரும்வழியில் கார் டயர் (Tyre) ஒன்று வெடித்து, அக்காரை 'கராச்சி'க்குத் (Garage) தள்ளிக் கொண்டுபோய், திருத்தி, வீடு வந்துசேர விடிந்தேவிட்டது. இந்த விபத்தில் நாங்கள் உயிர் தப்பியதே பெரிய புதுமை. நாங்கள் இன்னும் அந்த அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. அதனால், எங்களுக்கான பரீட்சையை பின்போடவேண்டும்" என அழகாக சோடிக்கப்பட்ட வேண்டுதலோடு வந்து நின்றார்கள்.

அதிபரும், அவர்கள் சொன்ன சம்பவத்தைக் கேட்டு பரிதாபப்பட்டு, இந்நான்கு மாணவர்களுக்கும் பரீட்சையைப் பின்போடுவதற்கு முன்வந்தார். இலகுவான, ஆனால், சற்று வித்தியாசமான விசேட பரீட்சை ஒன்று, மூன்று நாட்களின்பின் அந்நான்கு மாணவர்களுக்கு மட்டும் நடைபெறும் எனக்கூறி அவர்களை அனுப்பிவைத்தார். விசேட பரீட்சையை ஏற்றுக்கொண்ட நான்கு மாணவர்களும், அதிபரைப் 'பேய்க்காட்டிய' மகிழ்ச்சியில் வீடு திரும்பினார்கள்.

குறித்த நாளில் நான்கு மாணவர்களும் நான்கு வெவ்வேறு வகுப்பறைகளில் அமர்த்தப்பட்டார்கள். மிக மிக இலகுவான பரீட்சை: இரண்டே இரண்டு கேள்விகள்தான்! மதிப்பெண்கள் 100 (நூறு)!! முதலாவது கேள்வி: குறித்த அந்த விபத்து நடந்த நாளில், நீங்கள் பயணம்செய்த காரின் நிறம் என்ன? இக்கேள்விக்கான விடைக்கு, மதிப்பெண்கள் 02(இரண்டு). இரண்டாவது கேள்வி: வெடித்த டயர் எது? மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்யும்படி நான்கு விடைகளும் கொடுக்கப்பட்டு இருந்தன; 1.முன்பக்க வலது டயர் (Tyre) 2. முன்பக்க இடது ரயர் 3. பின்பக்க வலது டயர் 4. பின்பக்க இடது டயர் சரியான விடைக்கு மதிப்பெண்கள் 98 (தொண்ணூற்றி எட்டு)!

இதுக்குத்தான் படிச்சிப் படிச்சிச் சொல்லுகிறது: 'பொய்யச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும்' என்று! புரிகிறதா இப்போது? 'சீடன் குருவைவிட மேற்பட்டவன் அல்லன்' என்ற இயேசுவின் வார்த்தைகள் எவ்வளவு அர்த்தம் பெறுகின்றன என்று?

*ஆசிரியர், கடவுள்பக்தியும் நல்லறிவுமுள்ள சமூகத்தை உருவாக்கவேண்டும்*

ஓர் ஆற்றல்வாய்ந்த ஆசிரியர் நூறு மருத்துவர்களை, நூறு பொறியியலாளர்களை உருவாக்க முடியும். ஆனால் இந்த நூறு மருத்துவர்களும், நூறு பொறியியலாளர்களும் சேர்ந்து ஆற்றல் வாய்ந்த, திறன்மிக்க ஓர் ஆசிரியரை உருவாக்க முடியாது. இங்குதான், ஆசிரியப் பணியின் தனித்துவமும் பெருமையும் சிறப்பும் தங்கியிருக்கிறது. இதனை இன்றைய இளம் மாணவ சமூகம் நன்கு மனதில் பதித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

அதேவேளை, ஆசிரியர்களும் தம் பெரும் பணியின் பொறுப்பினை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்படாமலே புரிந்துகொள்ளக்கூடியது. இவ்விடயம்பற்றிச் சொல்கிறபோது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள், "சம்பளத்திற்காகவோ அன்றேல் பாடத்திட்டத்தை முடிப்பதற்காகவோ அல்ல, கடவுள் பக்தியும் நல்லறிவும் உள்ள சமூதாயத்தை உருவாக்க முன்வாருங்கள்" என 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தம் பொறுப்பில் இருந்த பாடசாலை ஆசிரியர்களுக்கு அடிக்கடி அறிவுரை கூறுவாராம்.

பிளேற்றோ என்ற மெய்யியலாளர், "நல்ல ஆசிரியர் ஒருவர் வாழ்நாள் முழுவதும் மாணவர் ஆகிறார்" என்கிறார். நல்ல திறன்வாய்ந்த ஆசிரியர் தொடர் அறிவுத்தேடலில், கற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டால்தான் அவரின் அறிவு பெருகுவதோடு, அறிவு விருத்திபெறும். இவ்வுண்மையை, "எப்போது நீ கற்றலை நிறுத்துகிறாயோ, அப்போது நீ ஆசிரியனாய் இருப்பதை நிறுத்துகிறாய்" என பெரியார் இராதாகிருஸ்ணன் தெளிவுபடுத்துகிறார்.

*கல்வி இன்று கற்பிக்கப்படுகிறதா? அல்லது விற்கப்படுகிறதா?*

17.02.2013 அன்று கிளிநொச்சியில் கனகாம்பிகைபுரத்தில் அமைந்துள்ள 'அன்னை இல்ல'த்தில் புதிதாக 'லெபாறா' (Lebara) நிறுவனத்தின் உதவியுடன் அமலமரித்தியாகிகள் துறவற சபையினரால் பாரிய நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அறிவுத் தேடலுக்கு வன்னிப் பகுதியில் இந்நூலகம் பெரும் ஆசீர்வாதமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்நூலகத் திறப்பு விழாவோடு 'லெபாறா' நிறுவனத்தின் ஆதரவில் அமலமரித்தியாகிகளால் கல்வி ஊக்குவிப்புக்கான உதவிபெறும் மாணவ மாணவியர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. அதில் மாணவர்களின் அனுபவங்கள் பகிரப்பட்டன.

அப்பகிர்தலில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருவன், 'தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்காமல் பாடசாலைக் கல்வியுடன் திறமையாகக் கற்ற காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று, பாடசாலைகளுக்கு வெளியேதான் கல்வி கற்பிக்கப்படுகிறது என்பதைவிட விற்கப்படுகிற நிலை உருவாகியிருக்கிறது! அதனால், பாடசாலைகளில் பெறமுடியாத கல்வியை பாடசாலைகளுக்கு வெளியே தனியார் கல்வி நிறுவனங்களில்தான் இப்போது பெறக்கூடியதாக இருக்கிறது. இதனை ஏழை மாணவர்களாகிய எம்மைப் போன்றோர் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பெறுவதற்கு உதவும் அமலமரித்தியாகிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவாக இவ்வுதவிகளைப் புரியும் 'லெபாறா' நிறுவனத்திற்கும் நாம் என்றும் நன்றிக்கடன்பட்டவர்கள்!" எனக் கூறிச் சென்றான்.

பாடசாலைகள் இருப்பதும் இயங்குவதும் முக்கியமாக கல்வி புகட்டுவதற்காகவே - அறிவை விருத்திசெய்வதற்காகவே. ஆனால், அப்பாடசாலைகளே கல்வியை வழங்க முடியாமல்போனால்; சாதாரண, வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாணவர்கள் எப்படி, எங்கு கல்வியைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதை இந்நாட்டின் புத்திஜீவிகள், கல்வி அதிகாரிகள், சமூக – சமயத் தலைவர்கள் சிந்திப்பதும் அவற்றுக்கு செயல்வடிவம் கொடுப்பதும் இன்றைய காலத்தின் அவசரத் தேவையாகும்.

*கல்விக்கனவான்களின் பார்வையில் கல்வி!*

"வாழ்வைப் பயிலும் சாதனமே கல்வி" என்பார் வில்டமோ. "உலகில் கல்வி முக்கியமானது மட்டுமல்ல அதிசயமான மாற்றங்களையும் உண்டுபண்ணக்கூடியதாகும்" என்பார் ஜே. ரஸ்கிஸன். "கல்வியின் பரந்த நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதேயாகும்" என்பார் கிரேன்மர். "கல்வி என் உள்ளத்திலே உலக வாழ்க்கை எப்படி நடைபெறுகிறது என்பதற்கும், எப்படி நடைபெறவேண்டும் என்பதற்குமிடையே கடுமையான போராட்டத்தை மூட்டிவிட்டது" என்பார் கால்மாக்ஸ். "கல்வி என்பது ஆற்றைப் போன்றது. எவ்வளவிற்கு எவ்வளவு ஆழமாயிருக்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு அது சந்தடியின்றி அமைதியாய் இருக்கிறது" என்பார் எவ். பேக்கன். "ஒரு செடி வளர்வதற்கு என்ன என்ன தேவையோ அதைப்போன்று மனித பண்பாட்டை வளர்க்க கல்வி அவசியம்" என்பார் ரூஸோ. "எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்குமோ, விரிந்த அறிவைத் தருமோ, அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" என்பார் சுவாமி விவேகானந்தர். "அறிவை வளர்ப்பது மாத்திரமல்ல கல்வி; உடலையும் உள்ளத்தையும் வளர்க்க வேண்டும். கல்வியின் சிறந்த நோக்கம் செயலாற்றும் சக்தியே அன்றி, அறிவு மட்டும் பெறுவதல்ல" என்பார் வேகபார்ட்.

*தொழிற்கல்வித்துறைகளில் முன்னேற்றம் வேண்டும்*

"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" எனச் சொல்லுகிறார்கள். அது உண்மைதான் ஆயினும், இன்றைய கற்றலின்பின் கற்ற கல்விக்கு வேலைதேடித் திரிவதில் சிலரின் ஆயுள்காலங்களே அரைவாசி ஆகிவிடுகின்றன! இந்நிலையை, "கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு; ஆனால், கற்ற கல்விக்கு வேலைதேடித் தேய்ந்தது என் செருப்பு" என கூறிச்செல்கிறான் இன்றைய ஓர் இளவல். கற்ற கல்விக்கு தகுதியான வேலைவாய்ப்புக்கள் கிடைக்காத சூழல் ஒருபுறமிருக்க, மறுபுறம் இன்றைய கல்வி உலகானது பரந்துவிரிந்து காணப்படுகிறது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டி உள்ளது. பல்கலைக்கழகங்கயையும், கல்விக் கல்லூரிகளையும் மட்டும் நோக்காகக்கொண்டு கல்விகற்று வேலைவாய்ப்புக்களை பெறமுடியாது என்பதைப் பெற்றோரும் மாணவரும் இனியாவது மனங்கொள்ள வேண்டும். பல்கலைக்கழகம் சென்று படிப்பது நல்லது. பல்கலைக்கழகப் படிப்பின்பின் பல்கலைக்கழகமே வேலையையும் பெற்றுத்தரும் என்ற எண்ணத்தைக் கைவிடவேண்டும். அப்படி இல்லையென்று நம்பியிருந்தால் 'வேலையற்ற பட்டதாரிகள்' என்ற அமைப்பில் நிரந்தர அங்கத்தவராக சேர்ந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித்தரும் என உறுதியாகச் சொல்லலாம். தொழில்கல்வித் துறைகளிலும் வெவ்வேறு துறைசார் கல்வியையும் கற்று இன்றைய இளந்தலைமுறையினர் முன்னேற வேண்டியுள்ளது. ஆகவே, இத்துறைகளில் வளர ஆங்கில அறிவும் தகவல் தொழில்நுட்பமும் இன்றியமையாத அம்சங்களாக மாறிவருகின்றன என்பதனையும் ஆழ்ந்து நோக்கவேண்டியுள்ளது.

*கற்றுக்கொடுக்கும் இலட்சணம்!*

கல்வி கற்பிக்கும் முறைபற்றி கல்வித்துறை ஆய்வாளர் ஒருவர் மாணவர்களுக்கு ஒரு சம்பவத்தின் ஊடாக விளக்கினார். ஒருவர் ஜெர்மன் 'செப்பட்' என்ற இனவகை நாய் வளர்த்தார். அது நல்ல சுகமாக இருக்கவேண்டும் என்பதற்காக ஒருவகை எண்ணெய் குடிக்கக்கொடுத்து வளர்த்துவந்தார். ஒவ்வொரு நாளும் இவ்வெண்ணையைக் கரண்டியால் பருக்குவதே ஒரு பெரிய வேலையாக அவருக்கு மாறியது. காரணம், அவர் கரண்டியில் பருக்கும்போதெல்லாம் அது முரண்டு பிடித்துக்கொண்டு குடிக்க மறுக்கும். ஒரு நாள் இவ்வாறு எண்ணெய் பருக்க நாயோடு மல்லுக்கட்டுகிறபோது போத்தல் தட்டுப்பட, சீமெந்துத் தரையில் எண்ணை சிந்துகிறது. அவரை விட்டுவிட்டு ஓடிச்சென்று தரையில் சிந்திய எண்ணையைத் தாராளமாக நக்கிநக்கிக் குடிக்க ஆரம்பித்தது அந்நாய்! இப்போது அக்கல்வித்துறை ஆய்வாளர், "இப்படித்தான் இருக்கிறது நாம் கல்வி கற்றுக்கொடுக்கும் இலட்சணமும்! என்றார் முடிவாக.

எண்ணையை நாய் குடிக்கவேண்டும் என்பதுதான் நாய் வளர்ப்பவரின் எண்ணம். ஆனால், அதனை கரண்டியில்தான் நாய் குடிக்கவேண்டும் என எதிர்பார்த்தால் வீண் விபரீதம்தான் தோன்றும். அதனதனை அதனதன் பாணியில் செய்ய விட்டுவிடவேண்டும். 'சிறுநீர் கழிக்க', ஏன் தமிழிலேயே சொல்லிவிடுவோமோ, 'யூறின் பாஸ்பண்ண "ரொய்லெற்'றுக்குத்தான் (Toilet) நீ செல்ல வேண்டும்" என்றால் நாய் என்ன செய்யும்? அதனால் அது முடியாது, கட்டாயப்படுத்தினாலும் அதற்கு திருப்தியிருக்காது. அது, கப்பைக் கண்டால் காலைதூக்கி தன் கடமையைச் செய்வதுதானே அதன் பாணி. கப்பு என்று சொல்லுகிறபோது, கம்பம், வேலிக்கட்டை, மரம், நடப்பட்டிருக்கும் தடி, சுவர் மூலை போன்ற நாய்க்கு அமைவான இடங்களைக் கூறலாம். பயிற்றுவிக்கப்படுகின்ற நாய்கள்கூட மேற்சொன்ன அமைவிடங்களையே பெரிதும் விரும்பி தன் எசமானையும் இழுத்துக்கொண்டு ஓடிச்செல்வதை அவதானிக்கலாம். அதனதன் பாணியில் விட்டுவிடுங்கள் வெற்றி உங்களுக்குத்தான்.

*கல்வித் தவம் செய்யுங்கள்!*

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையில் 12.06.2013 அன்று பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் அதிபர் அருள்சகோதரி தயாநாயகி செபமாலை தமது நீண்ட அதிபர் அறிக்கையின் இறுதியில் பெற்றோரை விழித்துச் சில விடயங்கள் குறிப்பிட்டார். அவை யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை மாணவியரின் பெற்றோருக்கு மட்டுமல்ல அனைத்துப் பெற்றோரின் கவனத்திற்கும் உரியது: "...கற்காதவன் இனிவரும் உலகில் வாழவே முடியாதவனாகிறான். எனவே கல்வியைத் தவமாகக் கொள்கின்ற மனோபாவத்தினை உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்து திட்டமிட்டுச் செயற்படுங்கள். அதேவேளை, கல்வியில் மட்டும் கவனம் செலுத்தாமல் பிள்ளைகள் ஒழுக்கம், நல்விழுமியங்கள் போன்றவற்றினை மதித்து நடக்கின்றார்களா என்பதனையும் கவனியுங்கள். இன்று பலுகிப்பெருகிக் கிடக்கும் தொழில்நுட்பங்களுள் தொலைக்காட்சி, சினிமா, கைபேசி, இணையம் போன்றவற்றின் பயன்பாடுகளும் நன்மையைவிட தீமையையே விதைக்கின்றது. இன்று பல பிள்ளைகள் ஒழுக்கத்தில் பிறழ்வுபடுவதற்கும் கல்வியில் அக்கறையற்று இருப்பதற்கும் இவையே காரணம் என்பதனைப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன..." என பெற்றோரை விழித்து அதிபர் எச்சரிக்கையாகக் குறிப்பிட்டது பெற்றோர்களால் மிகுந்த கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.

*விழுமியக் கல்விவேண்டும்*

மட்டக்களப்பு புனித சிசிலியா கல்லூரியின் அதிபர் அருள்சகோதரி எஸ். எலிசபேத் அவர்களின் அலுவலகத்தின் மையப்பகுதியில், "நான் தங்களுக்கு ஒரு வேலையை ஒப்படைத்தால் மீண்டும் உங்களைச் சந்திக்கும்போது அவ்வேலையை முடித்து விட்டேன் என்ற பதிலை எதிர்பார்க்கின்றேன். மாறாக, அதை நிறைவேற்ற முடியாமைக்கான காரணத்தை அல்ல" என்ற வாசகம் பெரிய எழுத்துக்களில் பொறித்து வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

இப்படியான விழுமியக் கல்விமுறை மாணவ - ஆசிரிய சமூகத்தை நெறிப்படுத்த – வழிப்படுத்த நிச்சயமாக உதவும் என நம்பலாம். (விழுமியக்கல்வியைக் கொடுங்கள்; கல்வியை விழுங்கக் கொடுத்து விக்கல் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்! அதிர்வுகள் தொடர்ந்து அ...தி.....ரு.......ம்.........

கருத்துக்களுக்கு: anpuomi@yahoo.com)

### தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

# கிறிஸ்மஸ் கட்டுரை

## அன்பின் அவதார விழா கிறிஸ்மஸ்

சகோ. அ. ஞானராஜ் ச.ச, டொன்பொஸ்கோ குருமடம், தன்கொட்டுவ

மார்கழி மாதம் என்றவுடன் எல்லோருக்கும் நினைவில் வருவது நத்தார் பண்டிகைதான். வர்த்தக நிலையங்களில் கண்கவர் அழகிய நத்தார் வாழ்த்து மடல்கள், நத்தார் தாத்தா முகமூடிகள், நத்தார் தாத்தா பொம்மைகள், நத்தார் அலங்காரப் பொருட்கள், வான வெடிகள், மின் அலங்கார விளக்குகள் எனப் பல்வேறு கடைகளிலும் நத்தாருக்காக விளம்பரம் செய்யத் தொடங்கி விடுவார்கள். ஏன் ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒளிவிழாக்கள் களைகட்ட ஆரம்பிக்கும். வானொலிகள் ஒவ்வொரு நாளும் நத்தார் கீதங்களை ஒலிபரப்ப ஆரம்பிக்கும். பங்குகளில் பல்வேறு ஆயத்தங்கள் செயற்பாடுகள் என எங்குமே நத்தார் மயமாகிவிடும்! காலநிலை வானிலை மாற்றங்களும் நத்தாருக்காகத் தம்மை ஆயத்தப்படுத்தும். சில்லென்ற குளிர் காற்று லேசாக வீச ஆரம்பிக்கும். முன்பனி பின்பனி என பனித்தூறல் புற்தரைகளை நனைத்து நிற்கும். மரஞ்செடி கொடிகள் யாவும் பசுமையாகத் துளிர்விட்டு பச்சைப் பசேல் என காட்சியளிக்கும். “மரஞ்செடி கொடிகளுக்கு எப்படியடா தெரியும் கிறிஸ்து பிறப்புக் காலம் வரப்போகுது என்று” என சிலவேளைகளில் நான் சிந்திப்பதுண்டு. ஆம் அவைகளும் இறைவனின் படைப்புக்கள்தானே. இவைகள் இறைவனின் எல்லையற்ற அன்பின் பரிமாணங்கள்.

ஆம் இச்சிறிய அறிமுகத்துடன் இந்தத் திருவருகைக் காலத்திலே உங்கள் சிந்தனையைத் தூண்ட சிறிய கதை ஒன்றுடன் எனது சிந்தனைத் துளிகளை ஆரம்பிக்கலாம் என எண்ணுகிறேன்.

பிரேசில் நாட்டில் உள்ள ஓர் சிறிய கிராமத்திலே ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனது பெயர் இம்மானுவேல். சிறுவயதிலிருந்தே மறையறிவில் நிறைய ஆர்வம். கிறிஸ்தவ மறையைப்பற்றி அறிய வேண்டும், கிறிஸ்துவை தன் வாழ்வில் உணர வேண்டும் என்ற தணியாத ஆசை. இவ்வாறாக கிறிஸ்தவ விசுவாசத்திலே வளர்ந்து வருகின்ற இம்மானுவேலுக்கு, இவ்வுலகில் மனித அவதாரமெடுத்து எம் மத்தியில் வாழ்ந்த இறைமகன் இயேசு பேசிய மொழி என்ன என்ற ஒரு கேள்வி எழுந்தது. கிறிஸ்தவ மறையைப்பற்றி நன்கறிந்த அறிஞர்கள் கூறிய விடை இது. “தம்பி நாங்கள் படித்த இறையியலின்படி யேசு பேசிய மொழி அரமேய மொழி”. ஆனால் இம்மானுவேலுக்கு அவ்விடை சரியாகத் தெரியவில்லை. இவ்வுலக சனத்தொகையிலே பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். இவர்கள் யாவரும் ஒரு மொழி பேசுபவர்கள் அல்ல. பல்வேறு மொழி பேசுபவர்கள். அவர்கள் அனைவரையுமே கிறிஸ்து தம்பால் ஈர்த்து இருக்கிறார் என்றால், நிச்சயமாக இயேசு பேசிய மொழி யாவருக்கும் விளங்கக்கூடிய ஒரு பொது மொழியாக இருக்க வேண்டும். இதுதான் இம்மானுவேலின் வாதம்.

தனது கேள்விகளுக்கு விடை காணுவதற்காக இம்மானுவேல் நாடுகாண் பயணத்தை மேற்கொண்டான். இம்மானுவேல் பிரேசில் நாட்டிலிருந்து பேரு நாட்டிற்கு சென்றான். பேருநாட்டு மக்களிடம் இவ்வினாவைக் கேட்டபோது, அவர்கள் கூறியது இயேசு பேசிய மொழி ஸ்பானிய மொழி என்றார்கள். அந்நாட்டை கடந்து கொலம்பியா நாட்டிற்கு இம்மானுவேல் சென்றான். அந்நாட்டு மக்களிடம் இவ்வினாவை வினவியபோது இயேசு நிச்சயமாக கொலம்பிய மொழி பேசியிருக்க வேண்டும் என்றார்கள். அந்நாட்டைக் கடந்து ஐக்கிய அமெரிக்காவை அடைந்தான். இயேசு பேசிய மொழி என்ன என்று அமெரிக்கர்களிடம் வினவியபோது, இயேசு நிச்சயமாக ஆங்கில மொழியில் பேசியிருக்க வேண்டும் - ஏனென்றால் ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி என்றார்கள்.

சிலர் கூறினார்கள் இயேசு பிரான்சிய மொழியில் பேசியிருக்க வேண்டும் மற்றும் சிலர் கூறினார்கள் இலத்தின் மொழியில் பேசியிருக்க வேண்டும், இது திருச்சபையின் தாய் மொழி, சில ஆபிரிக்க நாட்டினர் கூறினார்கள் இயேசு ஏழைகளைத் தேடிவந்தார். நாங்கள் உலக ஏழை மக்கள். ஆகவே எங்களது சுவாஹிலி மொழியில் இயேசு பேசியிருக்க வேண்டும். என்றார்கள்.

இம்மானுவேல் தனது நாடுகாண் பயணத்தை



ஆசிய நாடுகளுக்கும் மேற்கொண்டான்.

இயேசு உருது மொழியில் பேசியிருக்க வேண்டும் என்றார்கள். சிலர் இல்லை இயேசு ரஷ்ய மொழியில் பேசியிருக்க வேண்டும் என்றனர் ரஷ்யர்கள். இயேசு மெண்டரீன் மொழியில் பேசியிருக்க வேண்டும் என்றனர் சீனர்கள். இயேசு இந்தியில் பேசியிருக்க வேண்டும் என்றார்கள் இந்தியர்கள். இல்லை யேசு தமிழ் மொழியில் பேசியிருக்க வேண்டும் என்றார்கள் தமிழ் பண்டிதர்கள். ஆனால் இம்மானுவேலுக்கு ஒன்று மட்டும் விளங்கியது. ஒவ்வொருவரும் தத்தம் மொழியின் பெருமையை உயர்த்திக்கூற விரும்புகின்றார்களே தவிர வெறொன்றுமில்லை. இயேசு இவ்வுலகில் உள்ள அனைத்து மானிட பிறவிகளும் விளங்கக்கூடிய சிறப்பான மொழியில் பேசியிருக்க வேண்டும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டவனாக தனது பயனத்தை இயேசுக்கிறிஸ்து பிறந்த இடமான பெத்தலேகேமுக்கு தொடர முயற்சித்தான். விமானம் மூலம் தனது பயணத்தை மேற்கொண்ட அவன் பல சிரமங்களின் மத்தியில் மார்கழி மாதம் 24ம் திகதி இரவு சரியாக 11.30 மணிக்கு பெத்லகேமை அடைந்தான். கண்ணை மறைக்கும் காரிருள். அடர்ந்த பசுமையான மரங்கள். பஞ்சினை பயிரிட்டாற்போல் எங்கணுமே வெண்பனி! இவைகளுடன் சேர்த்து மார்கழி மாத சில்லென்ற குளிர்காற்று மெல்லென மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. “இதுதான் எனது இறுதிப் பயணம். இன்று ஓர் சரியான விடையைக் கண்டறிய வேண்டும். இல்லையேல் இந்தப் பயணத்தை இன்றோடு கைவிட வேண்டும்” என்று மனதில் நினைத்தவனாக நடக்க ஆரம்பித்தான்.

அது ஒரு சிறிய கிராமம், அக்கிராமத்தின் மத்தியிலே ஒரு சிறிய குடிசை. அங்கே ஒரு மங்கலான விளக்கின் வெளிச்சம். அதையே உற்று நோக்கி நடந்தான். அந்நேரத்தில் ‘தம்பி இம்மானுவேல்’ என்று யாரோ அழைத்தது அவனுக்குக் கேட்டது. அவனுக்கோ அதிர்ச்சியும் ஆச்சரியமும். “எனது பெயர் இம்மானுவேல் என்று இப்பெண்மணிக்கு எப்படித் தெரியும்?” அப்பொழுது அப்பெண் இம்மானுவேல் அருகில் வந்து, “பயப்படாதே மகனே, நீ சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கின்றாய். நீ ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் வினாவுக்கு விடை ‘அன்பு’. ஆம் இயேசு இவ்வுலகில் பிறந்து எம் அனைவரையும் பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்டு நமக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக அவர் நம்மிடையே பேசிய மொழி அன்பு மொழி! அன்பு அவனியில் அவதாரமாகிய அன்பின் திருவிழா கிறிஸ்து பிறப்பு பெருவிழா” என்றாள் அப்பெண்மணி.

அதனால்தான் இயேசு தம் சீடர்களிடம், “நான் உங்களை அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்” என்றார்.

ஆம் அன்புதான் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கின்றது. ஆண்டவரின் அளவற்ற அன்பின் வெளிப்பாடுதான் இவ்வழகிய உலகம். இதனையே புனித யோவான் தனது நற்செய்தியில் 3ம் அதிகாரத்திலே அழகாகக் கூறிநிற்கிறார். “தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார்”.

ஆண்டவர் இயேசு அன்று மட்டுமல்ல இன்றும் எம்முடன் அன்பு மொழி பேசிக்கொண்டுதான் இருக்கிறார். எமது பெற்றோர்கள் மூலமாக, நண்பர்கள் மூலமாக, ஆசிரியர்கள் மூலமாக, அயலவர்கள் மூலமாக, அருட்பணியாளர்கள் மூலமாக என பல்வேறு வழிகளில் எம்முடன் பேச விளைகிறார். ஆகவே இவ்வருட நத்தார் தினமாவது எமது வாழ்விற்கு சாரமூட்டுகின்ற அன்பின் நத்தாராக அமைய இறைவரம் வேண்டுவோம். இயேசு பேசிய அதே அன்பின் மொழியை மற்றவர்களுடன் பேச முயற்சி எடுப்போம். அன்பிற்காய் ஏங்கும் அனைவரிடமும் அன்பு மொழி பேசுவோம்.

“மனித இதயங்கள் மாறிட வேண்டும். மண்ணில் மனிதம் உயர்ந்திட வேண்டும். இறைவா நீ பிறந்திட வேண்டும்.

# கிறிஸ்மஸ் சிறுகதை

## அந்த இரவு

பிலோமின் ஆனந்தராஜா B.Sc,
407, இறம்பைக்குளம், வவுனியா

கிறிஸ்மஸ் இரவு அந்த ஊர் கலகலத்தது. இரவு குளிர் கொட்டியது. வீடுகளை வெளிச்சக்கூடுகள் அலங்கரித்தன. ஆலயம் அழகாக சோடிக்கப்பட்டிருந்தது. பூசை தொடங்க நேரம் ஆயிற்று. கோவில் முழுவதும் ஒளிமயமாயிருந்தது. கோவில் அடுத்தாரின் மூலையில் ‘பெத்லகேம்’ காட்சியளித்தது. மேலே வைக்கோல் கூரை, பக்கங்களில் ஓலைத்தட்டிகள், புல்லும் வைக்கோலும் கலந்த மூன்று உருவங்கள். சூசைமுனி கைகூப்பிப் பாலகனை கனிவோடு பார்த்துக்கொண்டிருக்கிறார். மேரி நெஞ்சில் மடிந்த கரங்களுடன் மகனையே பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஒரு கழுதை, ஒரு பசு மாடு, ஆடு பக்கத்தில் படுத்திருக்கின்றன. இடையர்கள் இருவர் குதூகலத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அந்தச் சின்னப் பாலன் பிஞ்சுக் கரங்களை நெஞ்சிலே வைத்து நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருந்தார். பூசை எப்போது முடியும் என்று அந்தச் சிறுமி ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்திலிருந்த பெற்றோர்கள் பூசையிலே இலயித்து இருந்தார்கள். இனிமையான கரோல் பாட்டுக்கள், உருக்கமான செபங்கள், பகட்டான புத்தாடைகள் இவை எதிலும் அவள் கவனம் செலுத்தவில்லை. ஆச்சரியம்தான்! அவளை ஏதோ ஒரு கவலை பின்தொடர்கிறது! அடிக்கடி அந்தப் பெத்லகேத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் புதுமைகளை நம்பினாள். அந்தப் பாலகன் புதுமைகளைச் செய்வாராமே?

பூசை முடிந்தது. அவள் ஆர்வத்திற்கு அளவே இல்லை. எழுந்து வரிசையில் நின்றாள். பெருந்திரளான மக்கள் பாலகனை முத்தி செய்தார்கள். காசு போட்டார்கள். மெல்லமாக வரிசை நகர்ந்தது. அவள் பெற்றோரைப் போக விட்டுவிட்டு, வரிசையின் கடைசியில் நின்று கொண்டிருந்தாள். அப்பாடா ஒரு மாதிரி ‘பெத்லகேமுக்கு’ வந்து விட்டாள். கண்களை அசைக்காமல் அந்தச்சுருவங்களையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

இந்தக் காட்சியைப்பற்றி எத்தனையோ கதைகளைக் கேட்டிருக்கிறாள். அந்தச் சுருவங்கள் ஏதோ உயிர் பெற்றுப் பேசுவதுபோல இருந்தது. கழுதையும் மாடும் மாத்திரமன்று இடையர்களும் முழந்தாளிட்டு பாலகனோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். இந்த ரோசா மலர்கள், மேலே தொங்கிய நட்சத்திரம்! ஓ இந்த நட்சத்திரமா அந்த ஞானிகளை வழிநடத்தியது? எத்தனை கதைகள் எத்தனை புதுமைகள் இந்த இரவில் நடந்திருக்கின்றன! இன்றைக்கும் நடக்கலாம்தானே. ஓம் பாலகன் அதை நடத்திக்காட்டுவார். அந்தச் சிறுமியும் அந்தப் பெத்லகேமும் ஒன்றாயின. அவள் அந்தப் பாலகனோடு கதைக்க ஆரம்பித்தாள். அவருடைய காதுக்குள் மெதுவாகச் சொன்னாள். அப்பா அருமையாக வேண்டித்தந்த மரக்குதிரை காணாமல்போன கவலைக் கதையைச் சொன்னாள். “இயேசுவே, அப்பா எனக்கு வேண்டித்தந்த குதிரையைக் காணவில்லை. நான் அதனை ஒவ்வொரு இரவும் என் தலையணைக்குப் பக்கத்தில் வைத்துத்தான் படுப்பேன். அதை எல்லா இடமும் கொண்டு செல்வேன். எல்லாருக்கும் காட்டி சந்தோசப்படுவேன். இன்றும் கோவிலுக்குக் கொண்டுவர எனக்கு ஆசை. பின்னேரம் எமது வாசற்படியில் வைத்தேன். வீட்டுக்குள் போய்விட்டு வந்து பார்த்தபோது அதைக் காணவில்லை! யேசு பாப்பா எனக்கு கவலையாயிருக்கு” தன் கதையை சொல்லிமுடிக்கும்போது அவளுடைய கண்களில் இருந்து நீர் வடிந்தது, “பாலக யேசுவே இந்தக் குதிரையை நீர்தான் தேடித் தரவேணும்”

அந்தக்குதிரை குடிலுக்கு முன் திடீரெனத் தோன்றி இருந்தால் அவள் அதிசயப்பட்டிருக்கமாட்டாள். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. என்ன ஏமாற்றம்!ஆனால் ஏதோ நிகழ்ந்தது. அவள் அந்தப் பாலகனையே பார்த்துக்கொண்டிருந்த போது அவளை அறியாமல் ஒரு புதுமை நடைபெற்றது. அந்தப் பிஞ்சுக் கரத்திலே எந்த பொம்மையும் இல்லாமல் வெறுமையாக இருப்பதை உணர்ந்தாள். “ஐயோ! இந்த யேசு பாப்பா எழுப்பியதும் விளையாட ஒன்றுமே இருக்காது” என்ற கவலையில் தன் கவலையை மறந்தாள். தன்னை அறியாமலேயே அந்தக் குழந்தைக்குப்பக்கத்திலே அமர்ந்துமுத்தமிட்டாள். “அன்புப் பாலகனே, என் குதிரை கிடைத்ததும் விளையாட உங்களிடம் கொண்டுவந்து கட்டாயம் தருவேன்” என்று மெதுவாக அவர் காதில் சொன்னாள். அடுத்த நிமிடம் எழுந்து தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

# கிறிஸ்மஸ் கவிதைகள்

## பாலன் பிறப்பு

- அருட்பணி. மரிசுதன் (செ.தா.)
தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி.

பனிப்பூக்கள் பள்ளியெழும் இரவில்
கன்னி உதரத்துக் கனியாக
புனித ஆவி புனைந்த புதுக்கவியாக
புண்ணியன் இயேசு பூமிக்கு வந்தார்.

வேதங்கள் சொன்னபடி
பேதங்கள் பிணக்குகள் நீக்கி
ரொக்கமாக 'மனிதம்' கொண்டு
சொர்க்கம் சேர்க்க இயேசு பிறந்தார்.

கைகூப்பிய மலர்களாய்
கடவுள் திருவடி இடையர் வணங்க
மெய்ஞானிகள் காணிக்கை வழங்க
பொய்யாமொழிப் பெருமான் பெத்தலையில் பிறந்தார்.

ஆற்றலிழந்த எம் ஆன்மாவில்
போற்றுதற்குரிய பாலன் பிஞ்சுப்பாதம் பதிய
தேசம் தொலைத்த சிட்டுக்களாம் - எம்
நேசஉறவுகள் நெஞ்சக் காயங்களாற்ற
வீசும் தென்றலாம் இயேசுவை வேண்டுவோம்.

## கனடாக்காரர்

- மதி மைந்தன்

கதியால் சண்டைக்கு கத்தி தூக்கின குணம்
இன்னும் கழுவப்படாததினால்
கஸ்டோவின் பெயரைக் காப்பாற்றுகிறோம்
என்று குழறிக்கொண்டு
தேசியம், தேசியம் என்று பிதற்றிக்கொண்டு
காங்கோ காப்புலிகளின் வீடுகளிலும்
குரோசியக் கிழவிகளின் வீடுகளிலும்
கக்கூஸ் கழுவி வயிறு வளர்க்கிறோமே
கர்த்தரே கர்த்தரே உம் சித்தம் இதுதானோ?

## மீட்பரின் விலை

- மதி மைந்தன்

கர்த்தர் மாத்திரம் மீண்டும் உயிர்த்தார் என்போரே
சத்தியமாய் சொல்கிறேன் யூதாஸ் சாகவில்லை
முப்பது வெள்ளியின் மதிப்பு மட்டும்
இப்பத்த விலையில் கொஞ்சம் அதிகம்!

## மார்கழி மலர்

- வாகரைவாணன்

கார் எனும் காலம் தோன்றும்
காண் மரம் செடிகளெல்லாம்
பேர் தரு பூக்கள் தன்னைப்
பெற்றிடா மலடாய் ஆகும்.
ஊரது தானும் நீண்ட
உறக்கத்தில் ஆழ்ந்து போகும்
நீரது பூமி யெல்லாம்
நின்றொரு கடலேயாகும்.

ஆயினும் இந்தக் காலம்
அவனியே வியக்கும் வண்ணம்
தூயதோர் மலரும் பூக்கும்
துலங்கிடும் நிலவைப்போல
தாயவன் மரியாள் என்னும்
தளிர்க்கொடி தந்த புஸ்பம்
வாயினாற் சொல்லவொண்ணா
வடிவது வார்த்தையில்லை!

பின்பதை யேசு என்னும்
பெயரினால் மக்களெல்லாம்
அன்புடன் அழைக்கலானார்
அதற்குமுன் ஏதுமில்லை
மண்ணினில் அதனைப்போல
மலரொன்று பூத்ததில்லை
விண்ணகம் தானும் மெத்த
வியப்புடன் அதனைப் பார்க்கும்

மலரதன் வாசம் எங்கும்
மனங்களை ஈர்த்துக்கொள்ளும்
புலரிளம் காலைபோல
பொழுதது மாலை தானும்
தலையது நிமிர்ந்து நிற்கும்
தானது கவிழ்தல் இல்லை
விலை மதிப்பில்லாச் செல்வம்
விழியெல்லாம் நிறையுமம்மா!

மார்கழி மலராம் யேசு
மன்னவன் பிறந்தானென்று
ஒருடு வானில் தோன்றி
உலகது அறிய நிற்கும்
சீர்மிகு பாடல் கேட்கும்
செவியினில் தேனாய்ப் பாயும்
பேரது அறிய ஆயர்
பிள்ளைமுன் பணிவாராம்மா!

## உன் வருகையும்....

- அருட்பணி. கு. லக்கோன்ஸ்

காரிருள் சூழ்ந்த இரவு
காவியம் படைத்த இரவு
காலத்தின் தேவையான இரவு
கன்னி மரியா உலகினிலே
கர்த்தனை ஈன்ற இரவு.

ஆண்டாண்டு காலமதாய்
ஆய்வாளரும் அறிஞரும்
இனியவன் இயேசுவை
இவ்வுலகில் பாலகனாய்
எதிர்பார்த்த நல்ல இரவு.

காலத்தின் தேவையால்
காத்திருக்கும் மாந்தருக்கு
உன் வருகையும் ஓர்
திரு வருகையாகிடவே
அருள்தர வந்திடு பாலா!

ஆசிக்கின்றோம் ஆசையாய்
அருள்தரும் ஆண்டாகவே
அடுத்ததும் புலர்ந்திடவே
வருவாய் பாலா
எம்மிடையே
தருவாய் நிறைவாய்
உந்தனருளை



## கிறிஸ்மஸ் பண்டிகை தோன்றிய கதை

இறைவனின் திருமகன் இயேசுகிறிஸ்து மனித உருவத்தில் வந்து பிறந்த தினம்தான் கிறிஸ்மஸ் தினம். கிரேக்க மொழியில் 'கிறிஸ்டோஸ்' என்றால் 'காப்பாற்றப் பிறந்தவர்' என்று அர்த்தம். 'மஸ்' என்ற வார்த்தை பண்டிகையைக் குறிக்கும், கிறைஸ்ற் என்றால் கிறிஸ்து. ஆகவே கிறிஸ்மஸ் என்ற சொல்லுக்கு 'காப்பாற்ற அவதரித்தவரின் திருநாள்' என்று பொருள் கூறலாம். கிறிஸ்மஸ் என்றதும் ஏதோ அது கிறிஸ்தவர்களுடன் மட்டும் தொடர்புடைய பண்டிகை என்று நாம் நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் பிறப்பு என்பது உலகம் முழுவதும் உள்ள மனிதர்களின் வாழ்க்கையுடன் ஒட்டி உறவாடும் ஒரு நிகழ்ச்சி ஆகும்.

கிறிஸ்து பிறந்ததை வைத்துத்தானே வரலாற்றையே நாம் கி.மு, கி.பி. என்று பிரித்து இருக்கிறோம். இதில் இருந்தே கிறிஸ்மஸ் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி என்பது விளங்கும். அந்தவகையில் கிறிஸ்மஸ் என்பது மனித வரலாற்றோடு பின்னிப்பிணைந்துவிட்ட ஒரு நாள் என்பதில் சந்தேகம் இல்லை.

**ச. துளசினி,**
**100 வீட்டுத் திட்டம், பெரியகமம், மன்னார்.**

## பாலன் குடில்

இயேசு பாலன் பிறந்த இனிய பொன்னாளில் இரவுப் பொழுதில் இடையர்கள் சிலர் தங்கள் மந்தைகளைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வானத்தில் ஒளி படர்ந்தது. தேவதூதர் ஒருவர் வானில் தோன்றி இயேசு பிறந்த நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்தார். "அஞ்சாதீர்கள், உங்களுக்காக மீட்பர் பிறந்திருக்கிறார். இந்த வழியே சென்றால் மாட்டுக் கொட்டிலில் குழந்தை ஒன்றைத் துணியில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். அதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார். இதைத் தொடர்ந்து இடையர்கள் தங்கள் ஆட்டு மந்தைகளுடன் வந்து குழந்தை இயேசுவைக் கண்டு வணங்கினர்.

உலகம் முழுவதும் இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வண்ணம் கிறிஸ்மஸ் தினத்தன்று பாலன் குடில் (Cribe) அமைக்கப்படுகிறது. குழந்தை யேசு, அன்னை மரியாள், சூசையப்பர், தேவதூதர், இடையர்கள், ஆடு, மாடு, போன்ற சின்னச் சின்ன உருவ பொம்மைகளை பாலன் குடிலுக்குள் வைத்து அழகு பார்ப்பார்கள். சிலவேளைகளில், மாகி என்ற 3 அரசர்களும், அவர்கள் ஏறி வந்த ஒட்டகங்களும்கூட குடிலில் இடம்பெறுவதுண்டு

**தனுசியா குமார்,**
**பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.**

# கிறிஸ்மஸ் குறுங்கதை

எம். ஜி. வினோதா (ஷாலினி)
தரம் 11 மன்/ பறப்பாங்கண்டல் றோ.க.த.க.பா.

## மலர் கொத்தோடு காத்திருங்கள்...

அது ஒரு மார்கழி மாதம். எங்கு பார்த்தாலும் பண்டிகைக்கான ஆயத்தங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. கிறிஸ்மஸ் விழாவிற்கு இன்னும் சிறிது நாட்களே இருந்தன. ஒரு ஏழைச்சிறுவன் தன் அம்மாவிற்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும் என விரும்பினான். ஒரு மலர்க்கொத்துக் கொடுத்தால் அம்மா மிகவும் மகிழ்ச்சி அடைவாள் என்று அவன் நினைத்தான். ஆனால் அவனது கையில் பணம் இல்லை.

ஒரு கடைக்குச் சென்று மலர்க்கொத்து ஒன்று தாருங்கள் என்று கேட்டான். காசு இல்லாமல் கிடைக்காது என்று கடைக்காரர் கூறி அனுப்பினார். ஒவ்வொரு கடையாகச் சென்று சிறுவன் கேட்டும் பயனில்லை. யாரும் அவனுக்குக் கொடுக்க முன்வரவில்லை. சோர்ந்துபோன சிறுவன் கடைசியாக ஒரு கடைக்குப் போய், "எனது அம்மாவிற்கு ஒரு மலர்கொத்துத் தாருங்கள். ஆனால் உங்களுக்குக் கொடுக்க என்னிடம் பணம் இல்லை" என்று கெஞ்சினான். கடைக்காரர் உள்ளே சென்று ஒரு மலர்க்கொத்தை கொண்டுவந்து கொடுத்தார். சிறுவன் மகிழ்ச்சியுடன் அவருக்கு நன்றி கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கடைக்காரரின் மனைவி, "நமக்காக வைத்திருந்த மலர்க்கொத்தை சிறுவனுக்கு எதற்காக கொடுத்து அனுப்பினீர்கள்?" என்று கேட்டாள். "இன்று உனது கடைக்கு வருவேன். எனக்காக ஒரு மலர்க்கொத்தை வை." என்று எனது மனதில் ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. அதனால்தான் அந்த மலர்க்கொத்தை எடுத்து வைத்து அந்தச் சிறுவனிடம் கொடுத்து அனுப்பினேன்" என்றார் கடைக்காரர்.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் உங்களைத் தேடி எப்பொழுதும் வரலாம். மலர்க்கொத்தோடு காத்திருக்கிறீர்களா? "இச்சின்னஞ் சிறியவர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்."

# கொஞ்சம் சிரிங்க

**மனேஜர்** : ஏண்டா! இப்பிடி வீட்டுக்குப் போகத் துடிக்கிறாய்?
**க்ளார்க்** : என் மனைவி சாப்பிடாமா எனக்காக காத்துக்கிட்டு இருப்பா சார்.
**மனேஜர்** : ஆஹா! இந்தக் காலத்துலவும் இப்பிடிப்பட்ட ஒரு பெண்ணா? நீ ரொம்ப குடுத்து வச்ச ஆளுப்பா!
**க்ளார்க்** : நான் போய் சமச்சப் போட்டாத்தான் அவ சாப்பிடுவா! **-ஜெறொமிக்கா, மாவிலங்கேணி, முருங்கன்.**

தந்தை : டேய் பக்கத்துவீட்டு பயலைப் பார். அவன் வேலை தேடி இன்றவிக்கு எல்லாம் போயிற்றுவாறான் நீதான் வெட்டியா ஊரை சுத்துகிறாய்.
மகன் : அப்பா நான் உங்க மகன். மத்தவங்க 4 கேள்வி கேட்கிற மாதிரி நடக்கமாட்டேன்.
**- யூ. அன்ரனி றோஜன் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.**

**ஒருவர்** : ,என் பல் ஒன்று ரொம்ப நாளாக ஆடிக்கிட்டு இருக்குதடா? **மற்றவர்** : அதுக்கு எப்ப அரங்கேற்றம்?

சுந்தரன் : என்னிட்ட சண்டை போட்ட என் மனைவி அப்புறம் என்னிடம் ஸாறி கேட்டா.
சந்திரன் : நீங்க பதிலுக்கு என்ன சொன்னீங்க?
சுந்தரன் : வாங்கித்தர முடியாதுன்னு சொல்லிட்டேன்.

ஒருவர் : டொக்டர் என் பிளாஸ்ரிக் வாளி ஓட்டையாயிருச்சு அதுக்கு என்ன செய்யலாம்?
டொக்டர் : யோவ் அதுக்கு என்னிடம் ஏன் கேட்கிறாய்?
ஒருவர் : நீங்க பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்ய பேமஸ்ஸான ஆளு என்று சொன்னாங்க. அதான்.

பயணி : றைவர் பஸ்ஸ நிப்பாட்டுங்கோ ஒருவர் விழுந்துவிட்டார்.
ஒருவர் : கண்டக்டர் சொன்னாத்தான் நிப்பாட்டுவேன்.
பயணி : அவர்தான் விழுந்துவிட்டார்.
**கி. டெலா றோஸ், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.**

# மன்னா விளம்பரப் பலகை

"கனவுகள் காண்பது இலகுவானது. ஆனால் கனவினை நிஜமாக்குவது கடினமானது"
**யோ. ஜெறிடி யூலன், நானாட்டான்.**

உண்ணும் உணவை வீணாக்காமல் இருப்பதே நீ செய்யும் அன்னதானமாகும்.
**- இ. மதுஷா, பாலைக்குழி, அடம்பன்.**

சரித்திரம் படைக்கும் மனிதனுக்கு அதை எழுத நேரமில்லை.
**யோ. டர்ஷிக்கா, நானாட்டான்.**

உன் மனதில் எந்தப் போராட்டம் உன்னை வாட்டினாலும் நீ அதை எதிர்கொண்டு இலட்சியத்தை நோக்கி நட!
**உ. ஆன் வினிக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.**

முடியும் என்றால் முயற்சி செய்!
முடியாது என்றால் பயிற்சி செய்!
**ம. நிலக்ஷி, ஒலிமடு, நானாட்டான்.**

"உங்கள் செயலைச் செம்மைப்படுத்த விரும்பினால், முதலில் உங்கள் சிந்தனையைச் செம்மைப்படுத்துங்கள். ஏனென்றால் உங்கள் சிந்தனைதான் செயலாக மாறுகிறது."
**- ஜோ. றொயான்சி, கங்காணிதீவு, நானாட்டான்.**

"இன்று நடக்கப்போவதே தெரியாது. நாளை நடக்கப் போவதை அறிந்தவன்போல பெருமையாகப் போசாதே"
**யெ. மெல்லியொட், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.**

சொல்லும் சொல்லை செயலாக்கி செயலை சேவையாக்கி சேவையை சாதனையாக்கி சாதனையைச் சரித்திரமாக்குவதுதான் தலைவனின் தனித்துவத் தன்மை.
**(அநுபவசாலி)**
**அ. றொபேட்சன், நறுவிலிக்குளம், வங்காலை.**

# மன்னார் ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி

"நாம் வாழ்வுபெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள்மீது அன்புகொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது." அன்பார்ந்தவர்களே, கடவுள் இவ்வாறு நம்மீது அன்புகொண்டார் என்றால், நாமும் ஒருவர் மற்றவர்மீது அன்புகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்." (1 யோவா. 4: 10-11).

கிறீஸ்து பிறப்பு விழா, கடவுள் நம்மீது கொண்ட அன்பை நாம் உணர்ந்துகொள்ளவும், ஒருவர் மற்றவர்மீது நாம் செலுத்த வேண்டிய அன்பை வாழ்வாக்கவும் கொடுக்கப்பட்டிருக்கின்ற உயர் அழைப்பாகவும், அறைகூவலாகவும் அமைந்திருக்கின்றது.

நம் அரிய தாய் நாட்டிலே உள்ள நான்கு மறைகளும் பெரிய கட்டிடங்கள், அமைப்புக்கள், கோவில்கள், கொண்டாட்டங்களைக் கொண்டவையாக அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். இவ்வனைத்து மறைகளும் மனிதனின் அன்பு வாழ்வையே இலக்காகக் கொண்டவையாக அமைந்திருந்தும், மக்களினங்கள் மத்தியிலேயும், மதங்களிடையிலேயும் பகைமை உணர்வு தலைவிரித்துத் தாண்டவமாடுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. நம் நாட்டின் அரசியல் அமைப்பிலேயே சமயங்கள் மத்தியிலே சமத்துவம் பேணப்படாத நிலை உள்ளது.

இந்நிலை, "சமயங்கள் யாவும் சமத்துவம் கொண்டவையே, ஆனால் மற்றச் சமயங்களிலும் பார்க்க ஒரு சமயம் கூடிய சமத்துவம் கொண்டது" என்று விவரிதமாகக் கூறும் நிலை இங்கு உள்ளது. "ஓர் இனம் மற்ற இனங்களிலும் பார்க்க உயர்ந்தது, உரிமைகளும் அப்படியே" என்று ஒரே நாட்டின் பிரஜைகளாகிய எம்மத்தியிலே உயர்வு தாழ்வுகளும், சமூக வேறுபாடுகளும் ஓங்கி நிற்கின்ற வேளையிலே, கிறிஸ்து பிறப்பு விழா, எத்துணை அர்த்தம் பெறமுடியும் என்று நாம் ஆழமாகச் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

நம் மத்தியிலே இருக்கும் இந்த ஏற்றத்தாழ்வுகளை இல்லாதாக்கிச் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நோக்கி நடைபோடுகின்ற மக்களாக இருந்தாற்தான் அன்பின் அவதார விழாவை நாம் கொண்டாட முடியும். இந்த உண்மையைத்தான் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்திலே தூய பவுல் அழுத்திக் கூறுகின்றார். "கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி மனிதருக்கு ஒப்பானார் (பிலி 2: 6-7).

மனிதரைக் கடவுள் தம் உருவில் படைத்து (தொ.நூ 1:27) மாட்சியையம் மேன்மையையும் அவனுக்கு முடியாக சூட்டினார் (தி.பா 8:5). பாவத்தால் மாண்பிழந்த மனிதரை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார் (கலா 4:5). எனவே யேசுவின் மானிட ஏற்பு மனித மாண்பை மீண்டும் மகிமையுறச்செய்து, கிறிஸ்து பிறப்புவிழா மனித அன்பிற்கும் மாண்பிற்கும் நாம் எடுக்கும் விழாவாக அமைகின்றது.

எனவே, மனித நேயத்தை அணிகலனாகக் கொள்வோம் "மனித உரிமைகளைப் பேனுவோம் அவர்தம் மாண்பினைக் காப்போம்", உங்கள் அனைவரினதும் வாழ்விலும் இப்பெருவிழாவின் செய்தி வேரூன்றிப் பயன்தர வாழ்த்துகிறேன், வேண்டுகிறேன்.

## இறைபணியில் ஐம்பது ஆண்டுகள் ....

07ஆம் பக்கத் தொடர்ச்சி

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வால் மக்கள் சிதறுண்டு பல்வேறு இடங்களில் வாழ்ந்தபோது மக்களை ஆயன் இல்லா ஆடுகள்போல் பரிதவிக்கவிடாது தன்னுடைய குருக்களை மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் அனுப்பி அவர்களுடைய நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்தியவர்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தத்தினால் மிக மோசமான உயிரிழப்புக்களையும், சொத்திழப்புக்களையும் சந்தித்த மக்களுக்கு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்பட்ட மனித அவலத்தின்போதும் தன்னுடைய செபங்களாலும் தன்னுடைய உடனிருப்பாலும் ஆறுதல் வார்த்தைகளாலும் பல்வேறுபட்ட உதவிகளாலும் மக்களை ஆறுதல்படுத்தியவர். அத்துடன் எம் நாட்டின் நிலையான சமாதானத்திற்காக ஒரு மதத்தலைவர் என்ற ரீதியிலே குரல் கொடுத்ததோடு பல வெளிநாட்டுத் தலைவர்களுக்கும், சமாதான ஆர்வலர்களுக்கும் உண்மை நிலையை எடுத்து விளக்கி சமாதானத்தின் கட்டாயத்தை வலியுறுத்தியவர்.

### நிறைவாக

எமது ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மாபெரும் கொடையாக எமது இலங்கைத் திருச்சபைக்குத் தந்தமைக்காகவும் விசேடவிதமாக மன்னார், யாழ் மறைமாவட்டங்கள் பெற்றுக்கொண்ட எல்லா ஆன்மீக நலன்களுக்காகவும் இறைவனுக்கு நன்றியோடு புகழ் பாடுவோம். இறைபணியில் 50 வருடங்கள் நிறைவில் மகிழும் ஆயருக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறுவதோடு எதிர்காலத்தில் ஆயர் அவர்கள் உடல் உள ஆன்மீக நலன்கள் நிறைவாகப்பெற்று பல்லாண்டு வாழவும் தொடர்ந்தும் இறைமகன் இயேசுவின் திராட்சைத் தோட்டத்தில் இயலுமானவரை தம் பணிகளைத் தொடரவும் அவருடைய ஓய்வுக்காலம் மகிழ்வும் மனநிறைவும் உள்ளதாக அமையவும் இறையருள் வேண்டுவோம்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## 'கலையருவி'யின் 'கவின் கலைகள் பயிலகம்'

## நடன, சங்கீத, இசை வகுப்புக்கள்

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் ஏற்பாட்டில் நடன, சங்கீத, இசைக்கருவிகள் போன்றவற்றிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

*மாதிரி விண்ணப்ப படிவம்*

**கலையிருவியின்**
**கவின் கலைகள் பயிலகம்**

திகதி ..........

பங்கு : ......................................
பெயர் : ......................................
தரம் : ......................................
முகவரி : ......................................
தொலைபேசி எண்: ....................
பயில விரும்பும் பாடம் : ...........
(உதாரணம் : நடனம், சங்கீதம், ஓகன், கிற்றார், வயலின், மிருதங்கம்) இப்படிக்கு உண்மையுள்ள
.......................
கையொப்பம்

### குறிப்புகள் :

- மேலே காட்டப்பட்ட விண்ணப்ப படிவத்தை மாதிரியாகக்கொண்டு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து 2013.12.31ஆம் திகதிக்கு முன்னர் கவின் கலைகள் பயிலகம், கலையருவி, இல. 113/2, புனித சூசையப்பர் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். (எமது தொலைபேசி இலக்கம், 023 - 3233276, 023 - 2250789, 0777420811)
- புதிய ஆண்டு ஜனவரி மாதம் நடுப்பகுதியில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.
- வகுப்பு நடைபெறும் இடம், கட்டண விபரம், நேரசூசி போன்றவை பின்னர் அறிவிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை பாடங்களையும் எடுக்கலாம்.
- ஒரு பங்கில் கணிசமான தொகையினர் இருந்தால் அந்தப் பங்கிலேயே இந்த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். அப்படி இல்லையாயின் சில பங்குகளை ஒன்றுசேர்த்து இந்த வகுப்புக்கள் நடத்தப்படும். விண்ணப்பதாரரின் தொகையை வைத்து இது தீர்மானிக்கப்படும்.
- வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு அமைவாகவே எமது வகுப்புக்கள் இடம்பெறும். பரீட்சைக்கு தோற்றவிரும்பும் மாணவர்களுக்கு உரிய ஒழுங்குகள் செய்துதரப்படும்.
- எமது பயிலகத்தில் கற்கும் மாணவர்கள் தமது திறமையை அரங்கில் வெளிப்படுத்த காலத்திற்குக் காலம் வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இவ்வகுப்புக்கள் தொடர்பாக உங்கள் நண்பர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு தெரியப்படுத்தவும்.

- மேற்குறிப்பிட்ட பாடங்களை கற்பிக்க தகுதிவாய்ந்தவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி எண், கற்பிக்க விரும்பும் பாடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் எம்மோடு தொடர்புகொள்ளவும். நன்றி

- அருட்திரு. தமிழ்நேசன், இயக்குனர் - கலையருவி, சமூகத்தொடர்பு அருட்பணி மையம், மன்னார் மறைமாவட்டம்.

## திருச்சிலுவைக் கன்னியரின் ....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்னையின் உயர் இலட்சியம் நிறைந்த செயல் அதனுடன் சேர்ந்த முன்மாதிரிகையான வாழ்வு இன்று நான்கு கண்டங்களிலும் அதாவது ஆசியா ஐரோப்பா இலத்தின் அமெரிக்கா ஆபிரிக்கா போன்ற நாடுகளில் திருச்சிலுவைக் கன்னியர் சபையானது பரந்து விரிந்து காணப்படுவதற்கு சான்றாக அமைந்தது.

எமது நாட்டில் திருச்சிலுவைக் கன்னியர் சபையானது யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களில் மருத்துவப்பணி, ஆசிரியப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி ஆகியவற்றை ஆற்றிவருகின்றது. இவற்றோடு பங்குப்பணிகளிலும் எமது அருட்சகோதரிகள் ஈடுபட்டு ஆன்மீக வழிகாட்டிகளாகத் திகழ்கின்றார்கள்.

இன்று அனைத்துலகத் திருச்சிலுவை கன்னியர் சபையினர் சேர்ந்து அன்னையின் 150வது ஆண்டின் நிறைவை நன்றியோடு நினைவுகூர்ந்து விழா எடுப்பதில் பெருமகிழ்வடைகின்றனர்.

## திருத்தந்தை பிரான்சிஸ் .... 1ஆம் பக் தொடர்

இந்த மதிப்பைப் பெற்றுள்ள மூன்றாவது திருத்தந்தையாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உள்ளார். இதற்கு முன்னர் 1962ம் ஆண்டில் முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 23ம் ஜோன் அவர்களும், 1994ம் ஆண்டில் முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்களும் 'ஆண்டின் மனிதர்' என அறிவிக்கப்பட்டனர்.

இவ்வறிவிப்புக் குறித்து அறிக்கை வெளியிட்ட திருப்பீட பத்திரிகை அலுவலகத் தலைவர் இயேசு சபை அருள்பணி. பெதரிக்கோ லொம்பார்தி, "திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அவரைச் சுற்றியெழும் பெரும் அலை அதிர்வுகளைப் பார்க்கும்போது, இந்த அறிவிப்பு வியப்பாக இல்லை" எனத் தெரிவித்தார். ஒரு பன்னாட்டு ஊடகத்தால் வழங்கப்படும் மிக மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றாகிய 'ஆண்டின் மனிதர்' விருது, ஆன்மீக, சமய மற்றும் அறநெறி விழுமியங்களை ஊக்குவிக்கும் ஒருவருக்கு, அமைதிக்கும் நீதிக்கும் நுண்ணறிவுடன் அழைப்பு விடுக்கும் ஒருவருக்கு கொடுக்கப்பட வேண்டும், இந்நிலையில் இவ்விருது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது ஒரு நல்ல அடையாளம் என்றும் அருள்பணி லொம்பார்தி கூறினார்.

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி- 124

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் யாவும் எசாயா 42ம் அதிகாரத்திலிருந்து 49ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

இம்மாதம் வினாக்களுக்காகத் தெரிந்துகொண்ட பகுதிகளின் அடிநாதமாக விளங்குவது கடவுளின் பிரகடனங்கள்தான். "நானே யாக்கோப்பின் ஆண்டவர், இஸ்ரவேலின் ஆண்டவர்" என இறைவன் அறிக்கையிடுகின்றார். இஸ்ராயேல் இனத்தைத் தெரிந்துகொண்டவரும் வழிநடாத்துபவரும் தண்டிப்பவரும் மீளக்கட்டியெழுப்புபவரும் அவரே இந்த அதிகாரங்கள் கூறுகின்றன. பாலைவனத்தினூடாக இஸ்ரயேலரை வழிநடாத்தி வந்தபோது இறைவன் செய்த அரும் செயல்கள் நினைவூட்டப்படுகின்றன.

நன்மைத்தனங்களால் இஸ்ராயேலர் நிரப்பப்பட்டாலும் கடவுளை மறந்து வாழ்ந்த காலங்களில் தண்டிக்கப்பட்டதும் கூறப்படுகின்றன. பிற இனத்தவர் வணங்கும் தெய்வங்கள் அனைத்தும் மரத்தாலும் தங்கத்தாலும் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள்தான் என்பதும் அவை உயிரோ, எந்தச் சக்தியோ வல்லமையோ அற்றவை என்பதும் அவை அழிவுக்கு உரியன என்பதும் சொல்லப்படுகின்றன.

சிதைந்துபோய்விட்ட இஸ்ராயேல் குலத்தை தாம் ஒன்றுசேர்த்து மீண்டும் அவர்களைக் கட்டியெப்புவதாக கடவுள் வாக்களிக்கின்றார். மீட்பராம் கிறிஸ்துவின் வருகையும் முன்னுரைக்கப்படுகின்றது.

### இனி எமது வினாக்களுக்குள் செல்வோம்

01. சிலைகள்மேல் நம்பிக்கை வைப்போரும் படிமங்களிடம் நீங்கள் எங்கள் தெய்வங்கள் என்போரும் எந்நிலை அடைவார்கள் என ஆண்வர் சொல்கின்றார்?
02. "என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன். மதிப்பு மிக்கவன். நான் உன்மேல் அன்பு கூர்கின்றேன்." இவை இறைவனால் கூறப்பட்ட வார்த்தைகள். யாருக்குக் கூறப்படுகின்றன?
03. இஸ்ராயேலின் ஆண்டவரைத் தவிர வேறு எந்தத் தெய்வங்களும் இல்லை என்பது எசாயாவின் எந்த வார்த்தைகளால் உறுதியாகத் தெரிவிக்கப்படுகின்றன.
04. "தாகமுள்ள நிலத்தில் நீரை ஊற்றுவேன். வரண்ட தரையில் நீரோடைகளை ஓடச்செய்வேன். உன் வழிமரபினர்மீது என் ஆவியைப் பொழிவேன். உன் வழித்தோன்றல்களுக்கு நான் ஆசி வழங்குவேன்." இது கடவுளால் வழங்கப்பட்ட வாக்குறுதி. யாருக்கு வழங்கப்பட்டது?
05. "வானங்களே மகிழ்ந்து பாடுங்கள். ஆண்டவர் இதைச் செய்தார். மண்ணுலகின் அடித்தளங்களே ஆர்ப்பரியுங்கள். மலைகளே! காடே! அங்குள்ள அனைத்து மரங்களே! களிப்புற்று முழங்குங்கள்" ஏன்?
06. "நான் உனக்கு முன்னே சென்று குன்றுகளைச் சமப்படுத்துவேன். செப்புக் கதவுகளை உடைத்து இரும்புத் தாழ்பாள்களைத் தகர்ப்பேன். இருளில் மறைத்துவைத்த கருவூலங்களையும் ஒளித்துவைத்த புதையல்களையும் உனக்குத் தருவேன்" எனச் சொல்லியவர் கடவுளாகிய ஆண்டவர். இதை அவர் யாருக்குச் சொன்னார்?
07. "என் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒருவனைத் தொலை நாட்டிலிருந்து வரவழைக்கின்றேன். சொல்லியவன் நான். நானே அதை நிறைவேற்றுவேன். திட்டமிட்டவன் நான். நானே அதை நிறைவேற்றுவேன்" இந்த 'நான்' யார்?
08. எசாயாவின் 47ம் அதிகாரம் ஒரு நாட்டின் அழிவையும் அதற்கு வரவிருக்கும் துன்பங்களையும் பற்றிக் கூறுகின்றது. அந்த நாடு எது?
09. "நீ பிடிவாதக் குணமுடையவன். உன் கழுத்து இரும்புத் தசைநார், உன் நெற்றி வெண்கலம். இதை நான் அறிவேன்." இவை எசாயாவின் மூலமாகக் கூறப்பட்ட வார்த்தைகள். யாரால் யாருக்கு கூறப்பட்டவை?
10. எசாயாவின் 49 ஆம் அதிகாரம் 8 முதல் 26 வரை உள்ள வாக்கியங்கள் எதைப்பற்றிக் கூறுகின்றன.?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 122 இற்கான கேள்விகளுக்கு 15 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**எ. பதீரதன், பட்டித்தோட்டம், மன்னார்.**

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. ஞா. ஜெனிவா இல, 142, 65காணித்திட்டம், சாந்திபுரம்.
2. அ. கில்டா, கட்டைஅடம்பன், மடுறோட்
3. எம். தேவி, இல.118.3 வீதி, எமில்நகர்.
4. அ . புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
5. செ. வளன் நிலுஜன் தூரம், மரியாழ் வீதி, தாழ்வுபாடு.
6. பீற்றர் நிக்சலா, பட்டித்தோட்டம், மன்னார்.
7. செ. ஜெசில்டா, 5ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.
8. செ. ஆன் நியூஜன்தூரம், மரியாழ்வீதி, தாழ்வுபாடு.
9. த. தர்சினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
10. செ. இன்பென்ரா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.

திருத்தந்தையைப் பொறுத்தவரை அவர் தன்னிலே புகழையும் மதிப்பையும் விரும்பாதவர், ஏனெனில் அவர், தனது வாழ்வை கடவுளின் அன்பின் நற்செய்தியை மனுக்குலத்துக்கு அறிவிக்கும் பணிக்கு அர்ப்பணித்திருக்கிறார் எனவும் இப்பணியின் வழியாக மனிதருக்கு நம்பிக்கையை வழங்குவதே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு மகிழ்வூட்டுவதாக இருக்கின்றது எனவும் அருள்பணி. லொம்பார்தி கூறினார்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.137

## யோபு நூல் 1 முதல் 42 முடிய

உங்கள் விடைகளை ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | | | | | 03 |
| | 04 | | | | 05 | | | 06 | |
| | | | 07 | | | | 08 | 09 | |
| | | | 10 | | 11 | | | | 12 |
| 13 | | 14 | | | | ✵ | | | |
| | 15 | 16 | | | 17 | | | 18 | |
| | ✵ | ✵ | 19 | ✵ | | | 20 | | |
| 21 | | 22 | | 23 | | | | | 24 |
| 25 | | | | ✵ | 26 | ✵ | | 27 | |
| 28 | | | | 29 | | | | | 30 |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. தானே தனக்கு எதிராக ......................... பகர்கிறது.
2. ஏனெனில் ................... இடையர், பாலைநிலத்தில் ___ எதிர்கொண்டனர்.
5. ஆனால் பொன், ................... யால் திறமையாக உருவாக்கப்பட்டவையும் ___ அவர்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்.
6. ஏனெனில் அந்த உணவு உண்போரின் .................. யுணவிற்கு ஏற்றவாறு.
11. இத்தகைய தண்டனைக்கு மாறாக நீர் உம் மக்களுக்குப் ..................... காட்டினீர்.
14. நற்பயிற்சிபெற்ற .................. வஞ்சனையினின்று விலகியோடும்.
17. அவர் அவர்களுக்கு ...................... செய்பவர்.
20. அதைச்சுவரில் ......................... யால் பொருத்தி ___ வைக்கிறார்.
21. எல்லோரும் .................... வகையில் பிறக்கின்றனர்.
22. அவர் அணிந்திருந்த நீண்ட ஆடையில் .................. அனைத்தும் பொறிக்கப்பட்டிருந்தது.
23. படர்ந்த கிளைகளிலிருந்து வரும் பறவைகளின் இனிய ..................
25.அனைத்தையும் ஆக்கும் ஞானத்தைவிடச் சிறந்த ................ எது?
27. அதில் இருந்த நான்கு ......................... வரிசையிலும் ___ பொறிக்கப்பட்டிருந்தன.
28. விலங்கிடப்பட்டிருந்த அவரை .................... அது விலகவில்லை.
29. .................. தன்னிலே கோழைத்தனமானது.

### வலமிருந்து இடம்

2. உள்ளத்தை உள்ளவாறு ....................... நோக்குபவர்.

3. ஞானம் - என்றுமுள ஒளியின் ......................
5. மாட்சிபொருந்திய அப்பயணத்தில் அது ........................ தணிந்த கதிரவனாய் இருந்தது.
7. அவர்களது பாசறைக்கு ................... நிழல் கொடுத்தது.
8. இதன் விளைவாக எங்கும் ஒரே ......................ம், குருதி, கொலை ___ பொய்யாணை.
10. பத்து மாத காலமாகக் ........................ தியோடு உறைந்து என் உடல் உருவெடுத்தது.
11. ஆண்டவரின் கோவிலில் அவர்களுக்கு இனிமைமிக்க ..................... அளிக்கப்படும்.
12. கடவுளைப்பற்றிய ............................ தங்களுக்கு உண்டு என அவர்கள் பறைசாற்றுகிறார்கள்.
14. பற்றுறுதியில்லா ஆன்மாவின் நினைவுச் சின்னமான ...................... த்தூணும் அங்கேதான் நின்றுகொண்டிருக்கிறது.
16. நீதிமான்களும் இறப்பை ........................ நேர்ந்தது.
17. ............. ஆராய்ந்தறியும் அளவுக்கு ___ அறியத்தவறியது ஏன்?
20. அனைத்தையும் ................. ஆற்றலை அவருக்கு அளித்தது.
24. என் உடலியல்புக்கு ஒத்த .............. கிடத்தப்பட்டேன்.
27. இருள் என்னும் ஒரே சங்கிலியால் ....................... ண்டனர்.
30. மனிதரைக் கடவுள் சந்திக்கவரும்போது அப்பெண் ................ தருவார்.

### மேலிருந்து கீழ்

1. அவருடைய நன்மையின் ...........................
3. அவரவர் விரும்பிய ................... தந்தது.
5. காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றாலேயே .................... அடைந்து எளிதில் உருகிற்று.
9. உண்போரின் சுவையுணவிற்கு ஏற்றவாறு ......................
12. .................. உணவாகிய காடைகளை அவர்களுக்கு உண்ணக் கொடுத்தீர்.
13. ......................போல விரைந்து சென்றன.
17. உலகம் முழுவதும் ....................... கண்முன் உள்ளது.
19.உமது சொல்லே எல்லா மனிதர்க்கும் ................ அளிக்கிறது.
20. அறிவுத்திறனின் ..................... அசைவுறாதது.
25. முறையீடுகளின் முணுமுணுப்பு ..............க்கு போவதில்லை.

### கீழிருந்து மேல்

4. அவர்கள் மாட்சிமிக்க ..................... முடியைப் பெறுவார்கள்.
8. ஏனெனில் நன்றிகொன்றோரின் நம்பிக்கை .................... காலத்து உறைபனிபோல் உருகிவிடும்.
12.உங்கள் செயல்களாலேயே ...........வருவித்துக் கொள்ளாதீர்கள்.
13. ...................... அவர்களை எதிர்த்து வீசும்.
14. கதிரவனின் ஒளிக்கீற்றாலேயே வெப்பம் அடைந்து எளிதில் ......................
15.அலைமோதும் நீர்ப்பரப்பைக் கிழித்துக்கொண்டு............ செல்கிறது.
17. ...................... தூயவர்களுக்கோ பேரொளி இருந்தது.
18. கடும் போராட்டத்தில் அவருக்கு .................... தந்தது.
19. உறுதி கூறியவர்களே ...................ப்புக்கிடமான அச்சத்தினால் நோயுற்றார்கள்.

## திருவருகைக்காலத் திருமடல்......

02ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்தவகையில் மனித மாண்பை பேணிக்காப்பதற்கு இவ்வாண்டில் நாம் எடுக்கும் முனைப்புக்கள் இல்லம் தேடிச் சென்று குடும்பங்களைத் தொடவேண்டும் என்பது எமது பெருவிருப்பு. மனித வாழ்வின் விளைநிலமாகிய குடும்பத்தைச் சென்றடையாத எதுவும் மேலோட்டமான விடயமாக அமைந்துவிடும். "குடும்பம் சிறந்தால் குவலயம் சிறக்கும்" என்ற நேர்நோக்கோடு எமது பணிகளை முன்னெடுக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

### நமது மேய்ப்புப்பணித் திட்டங்கள்

நமது மறைமாவட்டத்தில் மலர இருக்கின்ற புதிய ஆண்டில் முன்னெடுக்கப்படவேண்டிய மேய்ப்புப்பணிச் செயற்பாடுகள் குறித்த திட்டமிடல் மாநாடு கடந்த கார்த்திகை மாதம் 25, 26 ஆம் திகதிகளில் 'மனித மாண்பும் குடும்பமும்' என்ற தலைப்பில் மடுத்திருத்தல தியான நிலையத்தில் நடந்தேறியது. அதில் பகிரப்பட்ட விடயங்கள் தொகுக்கப்பட்டு குடும்ப ஆன்மீகம், குடும்ப உறவு, குடும்ப மாண்பு, குடும்பக் கட்டமைப்பு, குடும்பமும் சமூகமும் எனும் ஐந்து தலைப்புக்களின்கீழ் 2014ம் ஆண்டிற்கான எமது மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டம் தெளிவாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு பங்குகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனை உள்வாங்கி பங்குகளின் சூழமைவுகளுக்கு ஏற்ப பங்கு மேய்ப்புப்பணித் திட்டத்தை வரையறுக்கவும். அதனை 08 - 01-2014ற்கு முன்னர் எனது பார்வைக்கு அனுப்பிவைப்பதோடு 12-01-2014 ஞாயிறு தினம் கொண்டாடப்படவுள்ள ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழாவில் சிறப்பான முறையில் அங்குரார்ப்பணம் செய்து செயற்பட உங்களை ஊக்குவிக்கிறேன்.

### முடிவுரை

காரிருளை களைய பேரோளியாகத் தோன்றிய எமது மீட்பர் இயேசுக் கிறிஸ்துவின் மானிட ஏற்பு மகத்துவத்தை கிறிஸ்து பிறப்பு பெருவிழாவாக கொண்டாட ஆயத்தமாகும் நாம் மனித மாண்பை குடும்பங்களில் பேண உறுதிபூணுவோம். திருச்சபையின் தாயும் திருக்குடும்பத்தின் தாயுமாகிய அன்னை மரியா மனித மாண்பை நிலைநிறுத்தும் நமது பயணத்தை வழிநடத்திச் செல்வாராக!

**கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,**
**மேதகு இராயப்பு யோசேப்புஆண்டகை**
**மன்னார் ஆயர்.**

**குறிப்பு:-** இம்மடலை திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு அன்று எமது மறைமாவட்டத்தில் எல்லாத் திருப்பலி வேளைகளிலும் இறை மக்களுக்கு வாசித்து தெளிவுபடுத்தவும். வேறுவழிகளிலும் இதைப் பிரசித்தியடையச் செய்யவும்.

## புனிதர்களின் பாதையில் ........

09ஆம் பக்கத் தொடர்ச்சி

அவரையோ அசைக்க இயலவில்லை. அவர்மேல் காய்ச்சிய தார் எண்ணையை ஊற்றினர். அவருக்குத் தீங்கிழைக்கவில்லை. மேலும் ஆத்திரம் அடைந்தவர்களாய் அவரது தொண்டையில் ஒரு வாளைப் பாய்ச்சினார்கள். இவ்வாறு மறைசாட்சி முடிபெற்று நம் மங்கை தூய வாயிலை அடைந்தார்.

***சிந்தனைக்கு :***

"பல வேளைகளில் துன்புறுத்துவோரிடமிருந்து நாம் அடைகின்ற வேதனைகளில்தான் கிறிஸ்துவை மிக உறுதியாகக் கண்டடைய முடிகிறது." கன்னிமையைப் பற்றிப் புனித அம்புரோஸ் கூறிய கூற்று இது.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 135ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
திருமதி. ரி. எஸ். லீலாவதி,
இல. 76/100, சாந்திபுரம், மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
யோ. தயாநிதி,
பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.

**மூன்றாம் பரிசு:**
எம். அந்தோனி குரூஸ்,
கள்ளப்பாடு, முல்லைத்தீவு

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 98 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 74 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 135ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. மேரி லூசியா, 35, 5ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
2. யோ. ஆன்மேரி மதனிக்கா, பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
3. தே. ஜீவயதுர்சனா, பரிகாரிகண்டல், முருங்கன்.
4. செ. செபமணி துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
5. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
6. செ. ஜெசில்டா, 5ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.
7. அ. செமின்ரன், சிறுக்கண்டல், முருங்கன்.
8. ச. சந்தாம்பிள்ளை தபரேரா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
9. எவ்.எக்ஸ். திவிஷா, பட்டித்தோட்டம், மன்னார்.
10. எ. றூபி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
11. கெ. ஒலிவியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
12. ம. றஞ்சீவன் குரூஸ், கள்ளப்பாடு, முல்லைத்தீவு,
13. கே. செலஸ்ரினா, இத்திக்கண்டல், அடம்பன்.
14. பா. நிஷாந்தினி, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
15. ச. செலஸ்ரீனா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
16. ப. பெலிசிற்றா ரஜனி, புதுக்கமம், உயிலங்குளம்.
17. அ. ஜான்சன், சிறுக்கண்டல், முருங்கன்.
18. சிறில் பேரின்பநாயகம் வசந்தம், சின்னக்கடை, மன்னார்.
19. ரி. சுவேனிக்கா பறுனந்து, கிறிஸ்து அ.மா.இல்லம், முருங்கன்.
20. அ. லூட்ஸ் அனிஸ்ரா, பற்றிமா வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.
21. ப. சுவேந்திரன், ஈச்சளவக்கை, பெரியமடு, மன்னார்.
22. ப. கிறிஸ்ணம்மா, ஈச்சளவக்கை, பெரியமடு, மன்னார்.
23. சி. ஆன் மேரிடிறோணி, வஞ்சியன்குளம், வங்காலை.
24. செ. சாள்ஸ் அன்ரனி, தாமரைக்குளம், அடம்பன்.
25. சி. றோயல் கிறிஸ்ரி றோச், மாவட்டநீதி மன்றம், மன்னார்.
26. செ.த. பெனில்டஸ் தற்குரூஸ், பருத்திப்பண்ணை, தலைமன்னார்.
27. அ. கரோலினி கீர்த்திக்கா, 57, தபால்நிலைய வீதி, திருமலை.
28. செ. தேவறொக்ஷன், பனிக்கர் புளியங்குளம், ஓமந்தை.
29. பி. லக்ஷனா, அச்சங்குளம், நானாட்டான்.
30. அ. பஸ்ரினி, 86/13, குழந்தையேசு புரம், மன்னார்.
31. வெ. ருஜிதன், பொன்தீவுகண்டல், அளவக்கை.
32. கே. மடோனா, கற்குளம் - 02, சிதம்பரபுரம், வவுனியா.
33. ப. மரியதாஸ், சென்மேரீஸ் வீதி, அடம்பன்.
34. பா. அருட்பிரதீபன், பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.
35. அ. பிரபுசாளினி, அ.நி.க.மா.இல்லம், வட்டக்கண்டல், காத்தான்குளம்
36. ஜெ. சாம்சன் குரூஸ், அக்னேஸ்புரம், வங்காலை.
37. நே. எட்மன் றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
38. எம்.ஜஸ்ரின் லெம்பேட், இல.34/9, கன்.வீதி, சின்னக்கடை, மன்னார்.
39. ஐ. இருதயமேரி, கற்குளம் - 02, சிதம்பரபுரம், வவுனியா.
40. செ. கனிஸ்ரா, பனிக்கர் புளியங்குளம், ஓமந்தை.
41. பி. லக்ஷன், அச்சங்குளம், நானாட்டான்.
42. பா. எபிறோன், 8/23, ஒல்லிமோட்டை, மன்னார்.
43. சொ. அன்ரனி றோய், பிடாரிகுளம், அளவக்கை.
44. றி. சுரேக்கா, குருவில், வட்டக்கண்டல்.
45. என்.சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
46. ச. டிபோட்டா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
47. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதாவீதி, சின்னக்கடை, மன்னார்.
48. பி. அன்ரோ அமலினி, அச்சங்குளம், நானாட்டான்.
49. எஸ். மெறின் சோசை, தியோகுவீதி, தாழ்வுபாடு, மன்னார்.
50. கி. கிசோனி, பிச்சைகுளம், முருங்கன்.

## இல.135 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா03 | ன | ✵ | தி | மு | எ07 | மே10 | தா05 | நி13 | ✵ |
| ள் | பு17 | தி | ய | மு20 | ✵ | லா | ய | றை | ம16 |
| ✵ | சு | ச23 | நி04 | றை | வு | ன | ✵ | வு | தி |
| வா06 | ச் | பை | லை | இ27 | ளி | ஒ02 | ரு | ளை | ப் |
| மு | ந14 | ✵ | சீ24 | து | தெ32 | போ30 | க் | க | பு |
| ம் | க | ய | தூ29 | ✵ | ✵ | ட | வி | கை09 | ✵ |
| ✵ | ர் | ய | பெ18 | அ26 | மை | தி12 | ✵ | ப21 | ம் |
| து15 | ணை | ய | ரி | அ31 | ன் | பு | தீ33 | லி | வ |
| ணி | ஆ08 | சி | ய | தூ22 | ந28 | ஒ19 | க் | ✵ | பா25 |
| வு | ✵ | அ11 | ணு | கி | ✵ | ரு | கு01 | ர | ல் |


விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.136ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்
காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம் -
பதிப்பாசிரியர்

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# நீங்காத நினைவுகள்

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி.
இந்திரா அல்பிறட்

திரு. அல்பிறட்
வியஜரட்ணம்

(பாலைக்குழி, அடம்பன், மன்னார்.)

மலர்வு :- 26.05.1950
உதிர்வு :- 01.02.2006

மலர்வு :- 10.07.1943
உதிர்வு :- 02.01.2006

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி பண்பாய், பாசமாய், நேசமாய் அரவணைத்து உயர் வாழ்வு தந்த அம்மா, அப்பாவே! உங்கள் ஆன்மா சாந்திபெற உளமாற வேண்டுகின்றோம்.


*உங்கள் பிரிவால் துயருறும் :-*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18
07
1981



உதிர்வு
26
12
2004



மலர்வு
02
05
2001

மரியநாயகம்
மேரி பியூனா


அன்பும் பண்பும் நிறைந்த எம்
குலவிளக்கே.
ஆண்டுகள் பல ஓடி மறைந்தனவோ
பல்லாண்டு சென்றாலும் எம்
பந்தம் நீர்தானே.
நினைவழியா உம் நினைவுத்
தடயங்கள் என்றும் எம்
மனங்களிலே ...........!

ஜெகதீஸ்வரன்
மினோ மேனுஷன்

வானக வீட்டில் வாழச் சென்ற மேனுவே
நித்திய பிதாவின் நித்திலனே!
மண்ணகப் போராட்டத்தை முடித்து நீ
விண்ணகம் சென்ற இன்று பத்து
ஆண்டுகள் கடந்தாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்!
புனிதமான உன் எண்ணங்கள்
நிறைவேறவும், புனிதர்கள் கூட்டத்தில்
நீ சேரவும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*உங்கள் நினைவுகளோடு என்றும் வாழும் :*
*அம்மா, சகோதரங்கள்.*

## மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு நடத்திய – கல்லறைச் செபவழிபாடு



நவம்பர் மாதம் திருச்சபை சகல ஆத்துமாக்களையும் நினைவுகூரும் மாதமாகும். இதனை மையப்படுத்தி கடந்த 01.11.2013 அன்று மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பானது தோட்டவெளியில் அமைந்துள்ள மன்னார் மறைசாட்சிகள் கல்லறையில் செபவழிபாட்டை நடத்தியது.

தோட்டவெளி, வேதசாட்சிகள் இராக்கினி ஆன்மீக மைய இயக்குனர் அருட்திரு. யூட் குருஸ் அவர்கள் செபத்தை வழிநடத்த, அமைப்பின் ஆய்வாளர் திரு அந்தோனிப்பிச்சை அவர்கள் "கற்பாறையில் விசுவாசத்தை அஸ்திவாரமிட்ட மறைசாட்சிகள்" என்ற பொருளில் இறை வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார்.

இச்செப வழிபாட்டில் அமைப்பின் நிர்வாகிகள், பிரதிநிதிகள், மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு மெழுகுதிரி ஏந்தி மன்னார் மறைசாட்சிகள் "முத்திப்பேறு பட்டம்" பெற மன்றாடினர். ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்வை நடத்த இவ்வமைப்பு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தகவல்- s. அந்தோனிப்பிச்சை- M.A.M.Phil, ஸ்தாபகர், ஆய்வாளர், ஆலோசகர், தொடர்பாளர்.**

### இறைவன் தரும் உணவு .....

8ஆம் பக்கத் தொடர்ச்சி

நாம் பறவைகளைவிட மேலானவர்கள் என்றால், அவர் நமக்கு மேலான உணவை அளிக்கிறார் என்றால் அவை நாம் உண்ணும் புரியாணியும் நெய்ச்சோறும் புருட்சலட்டும் வட்டிலப்பமும்தான் அந்த மேலான உணவுகளா? மத்தேயு 26:31 கிறீஸ்து மீண்டும் சொல்கின்றார். "ஆகவே எதை உண்போம் அல்லது எதைக் குடிப்போம் எனக் கவலை கொள்ளாதீர்கள். உங்களுக்கு இவை யாவும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும்.

மக்களுக்கு எப்போதெல்லாம் உணவு தேவைப்பட்டதோ அப்போதெல்லாம் அத்தேவை நிறைவேற்றப்படுவதை கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் காண்கின்றோம். உணவுத்தேவையிருந்த 5,000 பேருக்கு கிறிஸ்து உணவளித்ததையும் பிறிதொரு சந்தர்ப்பத்திலே நாலாயிரம் பேருக்கு உணவளித்ததையும் நாம் நற்செய்தியில் காண்கின்றோம்.


கடவுளே நமக்கு உணவளிக்கிறார் என்பதற்கு இன்னுமொரு சாட்சி கர்த்தர் கற்பித்த செபம். தமக்குச் செபிக்கக் கற்றுத் தரும்படி கேட்ட சீடருக்கு யேசு சொன்னார், "பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் தந்தையே" என்று அழைத்து செபியுங்கள் என்று சொன்னவர், "அன்றாட உணவை எங்களுக்குத் தந்தருளும்" என்று கேட்க வேண்டும் என்றும் சொல்கின்றார். இறைவனாம் யேசுவே சொல்கின்றார் இறைவனாம் தந்தையே உணவு தருபவர் என்று.

கடவுள் விரும்பாவிட்டால் நமக்குமுன் உணவுக் குவியல்கள் இருந்தாலும் உணவு கிடைக்காது. நமக்கு இன்று உணவு கிடைக்கும் சாத்தியமே இல்லை என்றிருக்கும் வேளையில் எங்கிருந்தோ நமக்கு உணவு கிடைக்கும். இதை நாம் வாழ்நாளில் பல வேளைகளில் கண்டிருக்கின்றோம்.

கத்தோலிக்கர்களாகிய நமக்கு கிறிஸ்துவே உணவாக கிடைப்பது பெரும் பேறு. "வானினின்று இறங்கி வந்த உணவு நானே. என் தசையை உண்டு என் இரத்தத்தை பானம் பண்ணுபவன் என்றுமே சாகமாட்டான்" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் இறைவனே நமக்கு உணவாவதை நிருபிக்கின்றது.

## இணைபிரியா இல்லறவாழ்வில்
## 50வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து

*அன்பிய இல்லத்தில் இணைந்திட*
*சந்தியாப்பிள்ளைக்கு*
*திரேசம்மாவை தெரிந்தெடுத்து*
*புதுவாழ்விற்கு புத்துயிர்*
*அளித்தவரே, உமக்கு*
*எண்ணிலடங்காத நன்றிகள்.*



உலகிலே உண்மையாய் வாழ்ந்து
இல்லத்திலே இன்புற்று
ஈன்றெடுத்தீர் பிள்ளைச் செல்வமதை.
இல்லத்திருச்சபையைக் கட்டிடவே
அகமகிழ்ந்து வாழ்த்திடவே
இறை பிரசன்னத்தில் திகழ்ந்தீரே.

வாழ்க வளமுடன் என்று
மன அக்களிப்புடன் வாழ்த்துகின்றோம்.
ஆண்டவர் அருள்தனைப் பெற்று
இன்னும் இருவரும் இனிமையுடன்
இன்புற்று வாழ்கவென இனிதே
ஆசித்து நிற்கும்,

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்.

இவர்கள் தமது திருமண பொன்விழாவை தமது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், நண்பர்களுடன் கடந்த 2013.08.19 அன்று திருப்பலிப் பூசையுடன் சிறப்பித்து மகிழ்ந்தனர்.


**திரு.திருமதி. ச. அ. சந்தியாப்பிள்ளை**
**திரேசம்மா (அம்மா)**
(பறப்பாங்கண்டல், மன்னார்)
(31.08.1963 - 31.08.2013)

# மன்னா

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்" (2 திமொத்தேயு 4:7)

## 50ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 04 1911



உதிர்வு 25 12 1963

திருமண வாழ்வில் - (25. 01. 1941)

### திரு. ஆசீர்வாதம் அமிர்தநாதன்

(தாழ்வுபாடு, மன்னார்)

இல்லறமாம் நல்லறமாய்
அன்பிலும், அரவணைப்பிலும் வாழ்ந்து
யேசுபாலன் பிறந்தநாள் அன்று
அமரர் இறந்தநாள் அன்றோ!

ஆன்ம சாந்திக்காக செபிக்கிறோம்
செபித்துக்கொண்டிருக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்.
தகவல் : அ. மேரி யோசவின் (அம்மம்மா), நற்கருணை ஆலயம், தாமோதரம்பிள்ளை வீதி, தாழ்வுபாடு, மன்னார்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 12 1937



உதிர்வு 02 01 2013

### திரு. கிறிஸ்தோகு செபஸ்ரியாம்பிள்ளை சம்பாய்வா (அரசு)

(கற்கிடந்தகுளம், முருங்கன்)

"இறைவா என்னைக் காத்தருளும். உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்" (தி.பா. 6:01)

ஆண்டொன்று ஆனதுவோ - அப்பா
ஆறமுடியவில்லை உம் பிரிவை எண்ணி
சேய்கள் நாம் தனித்து நிற்கின்றோம்.
தேவன் பாதம் நாடிச் சென்றதேனப்பா?
கனிவாய்ப் பேசும் கருணை உள்ளம் கொண்டவரே
காலன் உம்மைக் கவர்ந்து சென்றதால்
விட்டுச்சென்ற நினைவுகளை விலக்கிட முடியாமல்
வேதனையில் தவிக்கின்றோம்.
எப்பிறப்பு வந்தாலும் எங்களுக்குத் தந்தையாய் நீங்கள்
உதித்திடவே இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்.

தகவல் : மகன் - செ. சகாயநாதன் சம்பாய்வா (நேசன்), மேசி ஸ்ரோர்ஸ், முருங்கன்.

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 03 1916



உதிர்வு 19 12 1988

### திரு. அந்தோனி சூசையப்பு மார்க்

(வங்காலை)

"நீ மண்ணைவிட்டு மறைந்தாலும் எங்கள் மனங்களைவிட்டு மறையவில்லை"

உங்கள் விண்ணக வாழ்வில் 25ந்து வருடங்கள் சென்றாலும், நீங்கள் எம்மைப் பிரிந்த நாட்கள் 25 நாட்களாகத் தோன்றுதப்பா! எப்படியப்பா உங்களை நாங்கள் மறப்போம்! நீங்கள் குடும்பத்தில் தனியாகப் பிறந்தாலும், இன்று நம் குடும்பம் ஆலம் விருட்சமாய் பாரினில் தழைத்தோங்கி நிழல் கொடுக்குதப்பா! பாரினில் பந்தங்களுக்கு மட்டுமன்றி பலருக்கும் பரிகாரம் பல புரிந்தாயப்பா! எப்படியப்பா யாம் மறவோம்? அமைதிப்படை என்னும் பெயரில் பாதகம் பல புரிந்தோர் எம் அமைதிப்புறாவை வீழச் செய்தாராப்பா!
1988, டிசம்பர், 19ஐ எப்படியப்பா, யாம் மறப்போம்!
உங்கள் பாங்கான வாழ்வினை நீங்கள் என்றும் இறைபுகழ்பாடி சாந்திபெற்றிட இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், ஓட்டப்பிள்ளைகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 21 1984



உதிர்வு 12 19 2012

### திருமதி. செபஸ்ரியான் அன்ரனிக்கா (சுகிர்தா)

(பாவிலுப்பட்டான் குடியிருப்பு)

"அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கிறார். அவர் உனக்குப் பேரன்பையும், இரக்கத்தையும் மணிமுடியாக சூட்டுகிறார். (தி.பா - 103:04)

அன்பின் இறைவா, இவ்வுலகில் எம்மை நிறைவாக அன்புசெய்து, எம்மோடு வாழ்ந்த பாசமிகு எமது மகளை கனிவுடன் நோக்கியருளும். உமது பேரின்ப இல்லத்தின் கதவுகளைத் திறந்து அவரை ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையோடு வேண்டுகிறோம். இறைவா நீர் எமக்கு நன்மைகளையன்றி தீமைகள் எதையும் வரவிடமாட்டீர் என்ற நம்பிக்கையோடு எமது அன்பு மகளை உமது பாதத்தில் ஒப்படைத்துள்ளோம்.


இவரின் பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.
தகவல் : சகோதரன் எ. சுஜீவன்

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 11 1949



உதிர்வு 19 12 1988



மலர்வு 13 11 1952

### திரு. செ. அருள்ஞானம் | திரு. செ. தவஞானம்

கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம், மன்னார்

எண்ணிப் பார்க்க முடியவில்லை ஐயா,
இருபத்தைந்து ஆண்டுகள் ஆன அந்த நாளை
கண்ணிமைக்கும் நேரத்தில் காலனவன்
கடிந்து, வந்துங்கள் உயிரை கவர்ந்தான்.
விண்ணிலும் பரந்த, நோக்கும் விழிதனிலும்
வியர்வை சிந்தும் நல்முயற்சியும்
கண்ணியமாய் எமக்கீந்து சென்றீர்கள்.
காலமெல்லாம் எம் காவல் தெய்வமானீர்கள்.

உங்களது பிரிவால் துயருறும் :
மனைவிமார், சகோதரர்கள், பிள்ளைகள், (கனிமொழி, றஞ்சித், பிறேம், சுமன், ஜெனி, ஜொயிற்றா, சுமி), மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 06 1985



உதிர்வு 07 12 2009

### R. லயனல் ஜெயத்திலக்க

(மூர்வீதி, மன்னார்.)

"விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்."

எம் அன்புச் செல்வமே!
எம்மைப் பிரிந்து இறைபதம் அடைந்து
04 ஆண்டுகள் புரண்டோடியும்
எம் மனதைவிட்டு சற்றும் உன் நினைவு புரளவில்லையே!
இவ்வுலகில் உன் புன்னகைக்கு என்னகை ஈடாகுமோ
உன் பண்பிற்கு இவ்வுலகில் விலையேதும் உண்டோ?
நீ விருட்ஷமாகி வரும்நேரம் எம்மைத் தவிக்கவிட்டு
இடை நடுவே இறையடி சேர்ந்தாயே,
நெஞ்சம் நினைத்து நினைத்து பதறி வெடிக்குதையா!
கண்கள் விம்மி விம்மி கண்ணீர் வடிக்குதையா!

உம் பிரிவால் துயருறும் : பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அத்தான்மார், அண்ணன், அண்ணி, மருமக்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.